படைப்பு

ஊற்று-5 | நதி-8 | டிசம்பர் - 2022 | திங்களிதழ்

ISSN : 2582-4015

தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி – 2022 முடிவுகள்

படைப்பு தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-5 | நதி-8 | டிசம்பர் 2022

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

ஆசிரியர் :
ஆசியாதாரா

நிர்வாகக் குழு :
சகா(சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

தலைமை நிருபர் :
வலங்கைமான் நூர்தீன்

நிருபர்கள் குழு :
முனைவர் கோ.நித்தியா
க.சோ.திருமாவளவன்
கலிங்கப்பட்டி க.கருப்பசாமி

முதன்மை வடிவமைப்பாளர் :
கமல் காளிதாஸ்

வடிவமைப்பு :
ப.முகம்மது புலவர் மீரான்

ஓவியக் கலைஞர்கள் :
அழ.ரஜினிகாந்தன்
அன்பழகன்

படைப்புகள் மற்றும் கருத்துக்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

உள்ளே...

- **தலையங்கம்** -பக். 04
- **கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி - 2022 முடிவுகள்** -பக். 05
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை** – மு.முருகேஷ் -பக். 19
- **சிறு கீற்றென ஒரு விடியல்** – கவிஜி -பக். 26
- **வானவில் வண்ண மின்னல்** – ஆதிரன் -பக். 36
- **குறும்பு தெறிக்கும் நிமிடங்கள்** – ந.சிவநேசன் -பக். 40
- **அகவுலகின் மொழி** – ஜெ.காமாட்சி காயத்ரி -பக். 42
- **தேத்தாத்தீவு கிராமமும் வசந்தன் கூத்தும்** – சிறிதரன் கிரிசாந்தன் -பக். 45
- **தென்னாப்பிரிக்காவின் ஒரு முகம்** – வாசு முருகவேல் -பக். 51
- **கி.ரா என்னும் கதைசொல்லி** – அழகுராஜ் ராமமூர்த்தி -பக். 52
- **தானாக எழுதிக்கொண்ட கவிதைகள்** – ஆண்டன் பெனி -பக். 57
- **மிரளவைக்கும் மொழி** – எம்.எம்.தீன் -பக். 63
- **உளவெழுச்சி தரும் நூல்** – கவிஞர் ஜெயபாஸ்கரன் -பக். 63

சிறுகதைகள்

- **வயிறு**
  - ஆர்மேனிய மூலம் : டி.தெமிர்ச்யன்
  தமிழில் : வல்லிக்கண்ணன் -பக். 29

- **விரயம்**
  - சிவசங்கரி வசந்தராஜ் -பக். 60

கவிதைகள்

- **கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி - 2022**
  - பரிசு பெற்ற கவிதைகள் -பக். 06

- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 27**
  - ஜின்னா அஸ்மி -பக். 41

- **பா.மகாலட்சுமி** -பக். 59

- **மதுரை சத்யா** -பக். 59

தலையங்கம்

வணக்கம்.

படைப்பு ‘தகவு’ ஐம்பத்தாறாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

2022ஆம் ஆண்டிலும் தகவு தனது இலக்கியப் பங்களிப்பை இயன்றவரையில் செவ்வனாக நிறைவேற்றியுள்ளது. ஜூன் மாத இதழ் ஐம்பதாவது இதழாக மலர்ந்தது.

தமிழ் இலக்கிய உலகின் மிக முக்கிய ஆளுமைகளான திறனாய்வாளர் ந.முருகேச பாண்டியன், எழுத்தாளர் அம்பை, படைப்பாளர் வேல ராமமூர்த்தி, எழுத்தாளர் மானா பாஸ்கரன், எழுத்தாளர் வசுமித்ர, கவிஞர் நேசமித்திரன், கவிஞர் வெய்யில் ஆகியோரின் நேர்காணல்கள் இவ்வருடத்தில் வெளியாயின.

மொழிபெயர்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் ஜமைக்கா கின்கேய்ட், ஹோவன்னஸ் டூமேன்னியன், டி.தெமிர்ச்யன் போன்ற பிற நாட்டு எழுத்தாளர்களின் சிறுகதை மொழிபெயர்ப்புகள் இவ்வருட இதழ்களில் இடம்பெற்றுள்ளன.

பெண்ணிய இலக்கியத்திற்கான இன்றியமையாமையை உணர்ந்த தகவு பெண்ணியப் பொருண்மை கொண்ட கதைகள், கவிதைகள், கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடுகிறது. வழக்கம்போல இந்தாண்டு மார்ச் மாத இதழும் பெண் படைப்புகளையே தாங்கி வந்தது.

படைப்புக் குழுமம் இவ்வருடம் நடத்திய போட்டிகளின் முடிவுகள் தகவு இதழில் அறிவிக்கப்பட்டு பரிசு பெற்ற படைப்புகள் பிரசுரமாகின.

சூழலியம் பேசிய பச்சைய பாத்திரம், பல்வேறு கருத்துக்களை எளிதாய்ப் பகிர்ந்துகொண்ட தேநீர் சாலை, கவிஞர்களுடனான உரையாடலாக நீண்ட கற்பதுவே கேட்பதுவே, வெவ்வேறு தளங்களிலான தாக்கங்களைப் பகிர்ந்துகொண்ட மனநிலைக் குறிப்புகள் போன்ற முக்கியமான தொடர்கள் தங்களது கருத்துக்களை ஆழ ஊன்றி இந்த வருடத்தில் நிறைவு பெற்றன. இந்த வருடத்தின் தொடர்களாக, தமிழின் முக்கிய கவிஞர்களை அறிமுகப்படுத்தும் கவிதைக்குள் ஒளிந்திருக்கும் கதை, பெருந்தாக்கத்தை ஏற்படுத்திய திரைப்படங்களை அறிமுகப்படுத்தும் உலக சினிமா போன்றவற்றுடன் புதியனவாக, பாடலாசிரியர் தன் பாடல் எழுந்த சூழல்களை வர்ணிக்கும் பாடல் பிறந்த கதை, சிந்தனையை ஒருங்கிணைக்கும் குறிச்சொற்களுடனான வானவில் வண்ண மின்னல் போன்றன தொடங்கப்பட்டுச் சிறப்பான முறையில் வெளியாகிவருகின்றன.

தகவு மாணவர்களை வாசிக்கவைப்பதில் முனைப்பு காட்டிவருவதின் அடையாளமாகத் தொடர்ச்சியாக நான் வாசித்தேன் பகுதியை மாணவர் பக்கமாகக் கொண்டுவருகிறது. மாணவர்கள் தாங்கள் வாசித்த நூல்கள் குறித்து தொடர்ந்து பகிர்ந்துவருகின்றனர்.

பொதுத்தளத்தில் நூல்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் நூல் விமர்சனம் பகுதி தகவில் இன்றியமையாத பகுதியாக இடம்பெற்றுள்ளது. படைப்புத் தளம் சார்ந்து இயங்கும் தமிழின் மிக முக்கிய கவிஞர்களின் படைப்புகள் கவிச்சித்திரமாகவோ படைப்புலகமாகவோ வெளியாகிவருகிறது.

எந்த வருடமும் தகவுக்குத் தாங்கள் தந்துவரும் ஆதரவை 2023ஆம் வருடமும் தாருங்கள்.

இந்த இதழில் கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி முடிவுகளுடன் கவிதைகள் வெளியாகியுள்ளன. இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

2023 ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

– ஆசிரியர். ■

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி – 2022 முடிவுகள்

படைப்பு இலக்கியக் குழுமம் தமிழ்க் கவிதையுலகிற்குத் தன்னாலான பெரும் பங்களிப்பைத் தொடர்ந்து அளிப்பதில் உறுதியாய்ச் செயலாற்றிவருகிறது. அதன் முக்கிய முன்னெடுப்பாக 'கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி' எனக் கவிதைப் போட்டியினை அறிவித்துச் சிறந்த கவிதைகளைத் தேர்ந்தெடுத்துத் தமிழுலகத்திற்கு அறிமுகப்படுத்துகிறது. இந்தாண்டு முன்னெப்போதும் இல்லாதவகையில் யாருமற்ற சிலுவை, பால்வெளியில் விரியும் உன் குறுஞ்செய்தி, கொஞ்ச நேரம் இரு என்று மூன்று தலைப்புகள் அளிக்கப்பட்டு ஏதேனும் ஒரு தலைப்பில் கவிதை எழுதிச் சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள் விடப்பட்டது. இப்போட்டிக்கான மொத்தப் பரிசுத் தொகையாக ரூபாய் 40000 அறிவிக்கப்பட்டது. மிகுந்த ஆர்வத்துடன் கவிஞர்கள் தங்களது கவிதைகளைப் படைப்பு இணையதளத்தில் பதிந்தனர். தமிழ்க் கவிதையுலகில் மிக முக்கிய திருப்பத்தைக் கொணர்ந்தவரான கவிஞர் மனுஷ்யபுத்திரன் பரிசுக்குரிய கவிதைகளைத் தேர்ந்தெடுத்து அளித்தார். பரிசு பெற்ற கவிதைகள் சான்றிதழ்களுடன் இங்கு வெளியாகின்றன.

பரிசு விவரம்:

மொத்தப் பரிசு	:	**40,000 ரூபாய்**
முதல் பரிசு	:	**15,000 ரூபாய்**
இரண்டாம் பரிசு	:	**10,000 ரூபாய்**
மூன்றாம் பரிசு	:	**5000 ரூபாய்**
சிறப்புப் பரிசு	:	**10 நபர்கள் - 10,000 ரூபாய்** (இந்திய ரூபாய் மதிப்பில் தலா ஆயிரம் ரூபாய்)

பரிசு பெற்ற கவிஞர்கள் :

முதல் பரிசு : தீபிகா நடராஜன்

இரண்டாம் பரிசு : மகிழினி காயத்ரி

மூன்றாம் பரிசு : கோ.இந்திரலேகா

சிறப்புப் பரிசுகள் :

கதிர்பாரதி
சாமி கிரிஷ்
தோழன் பிரபா
நஸ்புள்ளாஹ்
தி.கலையரசி
வாழ்முனி
மது ஸ்ரீதரன்
இ.கலைக்கோவன்
சசிதரன் தேவேந்திரன்
ம.கனகராஜன்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

முதல் பரிசு

தீபிகா நடராஜன்

நீண்ட நெடுங்காலத்திற்குப் பிறகு
நேரெதிராய்க் காண நேர்கிறது
முதல் காதலியின் கண்களை.
திரைப்படங்களில் பார்ப்பதுபோல்
அலையும் கடலும்
காற்றும் மரமும்
அப்படியே நின்றுவிடவில்லை
செரிக்காத சிறுமீனின்
முள்ளொன்று மட்டும்
திடீரென வந்து
தொண்டையில் சிக்கிக்கொண்டது.
கடைசிச் சந்திப்பின் சிறு அணைப்பில்
வெடிப்பதற்குத் தயாராயிருந்த
அழுகையின் பெருமூச்சொன்று
தடதடத்துக் கடந்த அந்த ரயில்போல
தூரத்தின் அருகில் கேட்கிறது.
பருவங்கள் பொய்த்து
கால் நூற்றாண்டிற்குப் பின்
மீண்டுமொரு வசந்தம் வருகிறது
மீண்டுமொரு மழை வருகிறது
எங்கேயோ ஒளிந்திருந்த விதையில்
துளிரொன்று வருகிறது.
அன்பே
வருடத்தின் இந்தப் பருவம்
வாழ்வாக மாறட்டும்
இன்னும் கொஞ்ச நேரம் இரு.

படைப்பு

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி

கவிதைத் தொடரில்
இரண்டாம் பரிசு பெற்ற
படைப்பாளி மகிழினி காயத்ரி
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2022
நாள்

கவிஞர் மனுஷ்ய புத்திரன்
(தலைவர்)

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

இரண்டாம் பரிசு

மகிழினி காயத்ரி

சாலையெங்கும்
நேற்றடித்த புயல் மழையில்
விரவிக்கிடந்தன
மகிழமரமுதிர்த்த
துயரின்
மலர்கள்

சிறுபிள்ளையொன்று இலைகளற்ற
மொட்டை மரத்தை
வெறித்துக்கொண்டிருக்கையில்
பறவையொன்று
தான் நேற்றிருந்த
அதே கிளையைத் தழுவித்
தன் இறகுலர்த்துகிறது.

அனிச்சையாய் மலர்கொய்து
விளையாடும் ஒருவன்
கைநீட்டிப் பின்
சடுதியில் தலைதிருப்பி
நகர்கிறான்

எப்போதோ அங்கு நின்று
புகைப்படமெடுத்த
புதுமணத்தம்பதியின்
படத்தொகுப்பில்
ஒரு குடைபோல
மலர்ந்து விரிந்திருக்கிறது
அம்மரம்

இறைந்திருக்கும் சுள்ளிப்
பொறுக்கும்
முதியவளின் நினைவில்
பூக்கள் பற்றி ஏதுமில்லை
ஆனால் இலைகளற்ற தழும்பினை
தடவிப் பார்க்கிறாள்

இலைகளோடு காற்றுரசும்
மொழிகாணாது
தவிக்கும் நாய்க்குட்டி
சுற்றிச்சுற்றி வருகிறது
நீரில் தெரியும் ஆகாயத்தை

விரித்த கைகளுக்குள்
ஒரு நம்பிக்கையைச்
சுமந்தவாறு

கொஞ்சம் இரு போதும்
மீண்டெழுவேன் என்கிறது

அன்பை ஒளியாக்கி
பிரபஞ்ச வெளியில்
மிளிரச்செய்த
கற்பகத்தரு தமது
இருண்ட காலமொன்றின்
துயர்ப்பொழுதொன்றில்

மெல்ல அரும்புகிறது
பச்சைவண்ணம்
தெருவெங்கும்
மகிழம்பூக்கள் மணம்.

படைப்பு

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி

கவிதைத் தொடரில்
மூன்றாம் பரிசு பெற்ற
படைப்பாளி கோ.இந்திரலேகா
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2022
நாள்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

மூன்றாம் பரிசு

கோ.இந்திரலேகா

இயேசுவை சிலுவைச்சாவுக்குத் தீர்வையிடுகிறார்கள்
நான் உன்னிடம் காதலைச் சொல்கிறேன்
இயேசு சிலுவை சுமக்கிறார்
நீ மறுமொழியற்றுத் திரும்பிப் பார்க்கிறாய்
இயேசு முதல் முறை கீழே விழுகிறார்
நீ முதல் முறையாய்க் கை கோர்க்கிறாய்
இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்
விரல்களை இன்னும் இறுக்கிக்கொள்கிறாய்
இயேசு மூன்றாம் முறையாகக் கீழே விழுகிறார்
சத்தமின்றி விம்மிக்கொண்டிருக்கிறாய்
இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்
உன் பேருந்து நிறுத்தம் வரப்போகிறது
இயேசு சிலுவையில் இறக்கிறார்
கண் துடைத்து, விரல் பிரித்து
விடைபெற ஆயத்தமாகிறாய்
இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்
நடத்துனர் ஓடிக்கொண்டிருந்த
பாடலை நிறுத்துகிறார்
இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுகிறார்
நான் யாருமற்ற சிலுவையை
சன்னல்வழி பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி

கவிதைத் தொடரில்
சிறப்புப் பரிசு பெற்ற
படைப்பாளி கதிர்பாரதி
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2022
நாள்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

கதிர்பாரதி

உன்னைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை
திடீரென முளைத்துக் கிளைத்துவிட்டது.

ஒரு குறுஞ்செய்தி தூரத்தில்
இருக்கிறாய் நீ.

என்ன செய்வேன்?

ஓடோடி வந்து
வானத்தைப் பார்க்கிறேன்
மேகத்தைக் கலைக்கிறேன்.

நீ வரும் போகும்
பாதையில் நடக்கிறேன்.
ஒரு பிள்ளையார் திருப்பத்தில் நின்று
போதுமான அளவு காற்றை
உள்ளிழுத்துப் பார்க்கிறேன்.

காலணிகளை உதறிவிட்டு
மரத்தடியில் வெறுங்காலில் நிற்கிறேன்.

உன்னைப் பார்க்கமுடியாத கசப்பு
உருண்டு திரண்டுவிட்டது.

தேநீரை உறிஞ்சி உறிஞ்சி
அதனுள்ளும் பார்க்கிறேன்
ஒன்றிலும் உன்னைக் காணவில்லை.

பொடிநடையில் வீடு வந்து
மசூதி புறாக்களுக்கு
அறை ஜன்னலைத் திறந்துவிடுகிறேன்.

இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான், யுவன்
எல்லோரிடமும் உதவிகேட்கிறேன்.

இரவு கூர்க்காவின்
விசில் வணக்கத்திலும் நீ இல்லை

நீ இல்லவே இல்லை.

காலை 9 மணிக்கு மேல்
வழக்கம்போல உன்னைப் பார்த்துவிட்டேன்.

உன் குறுஞ்செய்தியில்
நீ இருப்பதுபோல
உன்னிலும் நீ இல்லை.

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

சாமி கிரிஷ்

உன் அருகாமையை
ஆராதிக்கும் அன்றாடம்
கேட்டுத் தவிக்கிறது மனம்
என் நங்கூர நிமிடங்கள் நகர
நீ விலகாதிருப்பதுதான் விடிவு
பெருங்கூட்டத்தினூடே
அனாதைத்தனம் அனுபவிக்கும்
தீராப்பிணிக்கு
அருமருந்திடு நீங்காதிருந்து
வஞ்சகங்களும் துரோகங்களும்
என்னை அண்டாதிருக்க
நீ அகலாதிருப்பது அவசியம்
சிறகு கொண்டிருக்கும் நான்
சிறிது பறந்துகொள்கிறேன்
கண்ணீரோடு காத்திருக்கும் நான்
சற்று அழுதுகொள்கிறேன்
நிழலாகயிருவென நிர்பந்திக்கவில்லை
தொலைதூர வெளிச்சமாய்
என்னை எனக்குக் காட்டிக்கொண்டிரு
போதும்
நீயொன்றும் கொஞ்ச வேண்டாம்
கொஞ்ச நேரம் இரு

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

தோழன் பிரபா

கொஞ்ச நேரம் இரு..
என்றபடி என்
விரல்களைப் பிடித்தபடி இருக்கிறாள்..

அவளின் விரல்களிடமிருந்து
விடுவித்துக்கொள்வது என்பது..

ஆதி நிலத்திடமிருந்து
விலகிச் செல்வதைப் போன்றது...

மொழியறியாத் தேசத்தில்
வாழ்வதைப் போன்றது..

நீண்ட நாட்கள் கழித்து
வானத்தைக் காணகையில்
இருள் சூழ்ந்திருப்பதைப் போன்றது..

குளிர் மிகுந்த மழைநாளின்
கடைசித் தீக்குச்சியை
இழப்பதைப் போன்றது..

ஆனாலும்.. ஆனாலும்.. ஆனாலும்
பார்வை நேரம் முடிந்த பின்பு
இன்றும் வழக்கம் போல
“கொஞ்ச நேரம் இரு ம்மா”
என்றபடி விடுவித்துக்கொள்கிறேன்.

அவளுக்குத்தான்
பாலூட்டிய மாரிலிருந்து
வெடுக்கென்று குழந்தையை
பிடுங்கியது போல் இருக்கும்..

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

நஸ்புள்ளாஹ்

எனது இந்தப் பிரதியில்
இரவும் பகலுமாக
சம்பவங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன

மெஹரூன்
இரவு துளிக்கும்
பால்வெளியில் நட்சத்திரங்களை
சேகரித்துக்கொண்டிருக்கிறாள்

மற்றுமொரு பிரதேசத்தில்
மதியப் பொழுதின் தீயில்
தனிமையையும் அதன் துயரங்களையும்
நான் சேகரித்துக்கொண்டிருக்கிறேன்

மெஹரூன்
மேகங்கள் உனக்கு
குடை ஒன்றாக மாறியிருக்கலாம்
கீச்சிடும் பறவைகள்
சூஃபி இசையெனத் தாலாட்டு பாடலாம்

இங்கு நான்
இந்தப் பகல்பொழுதில்
பேய், பிசாசுகளுடன்
சிக்குண்ட மனிதனைப் போல்
வாழப் பழகிக்கொள்கிறேன்

மெஹரூன்
பால்வெளியில் விரியும்
உன் குறுஞ்செய்தியை
பரிமாறிக்கொள்
இரண்டு சம்பவங்களை நிகழ்த்தும்
இந்தப் பிரதியை முடித்துவைத்து
மிகுதிச் சம்பவத்தை
உருவாக்கும் முயற்சியை
வாசகனிடம் ஒப்படைக்கலாம்.

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

தி.கலையரசி

மும்மரமாக இயங்கும் சாலையில்
மேய்ந்துகொண்டிருக்கிறது
ராட்சத வெயில்.

பெரு நகரத்தின் கால்கள்
இரயில் நிலையப் பாதையில்
கடிகார முட்களுடன்
போட்டி போட்டுக்கொண்டு
ஓடிக்கொண்டிருக்கின்றன.

அதன் ஆண்ட்ராய்டு விரல்கள்
ஜீ பே
கிரெடிட் கார்டு எனப் பரபரப்போடு
மாயாஜாலம் செய்துகொண்டிருக்கின்றன.

படிக்கட்டு ஒன்றில்
தனக்கென்று
காலம் ஒதுக்கிவைத்த
அலுமினியத் தட்டில்
பசியை ஏந்திக்கொண்டு
அமர்ந்திருக்கிறாள்
ஒருத்தி.

மார்போடு அணைத்த சேலைக்குள்
படுத்திருக்கும் குழந்தை
தாயின் புன்னகையை
எதிர்நோக்குகிறது.
அவளின் நெஞ்சத்துடிப்பிற்குத் தெரியும்
அது பசிக்கான சமிக்ஞை.

சில்லறைத் தட்டுப்பாட்டில்
தடுமாறும் மாநகரம்
விதியின் தகரத்தட்டில்
கருணையை இட முடிகிறதோ
இல்லையோ..

எப்படியும்
நாள்தோறும்
குழந்தையின் உள்ளத்தை நிறைக்க
அமுத வார்த்தைகளைச் சமைத்துத்
தயாராகவே வைத்திருக்கிறாள்..

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

வாழ்முனி

முழு அப்பமொன்றை நான்கு துண்டுகளாக்கி
குடும்பமாகப் பரிமாறிக்கொண்டிருந்தோம்

கூரையிலிருந்து விழும் மழைநீரை – நெளிந்த
இய்யத் தட்டில் சேமித்துக்கொண்டிருந்தான்
இளையவன்

மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த இயேசு
எதிர்பாரா முகமாக – என்
வீட்டிற்கு வந்ததும் பழைய ஏற்பாட்டின்
பிரதியொன்றைக் கேட்டார்

முதல் பக்கத்தில் நானெழுதிய...

“நீங்கள் அறையப்பட்ட சிலுவையை
எமக்குத் தாருங்கள் ஆண்டவரே
தட்டினால் திறக்கக் கதவில்லை”

என்கிற பிரார்த்தனையைப் படித்துவிட்டு

“யாருமற்ற சிலுவைகள்
நிலைக் கதவுகளாகட்டுமென”
விடுபடாத ஆணிகளோடு புறப்பட்டார்

திருத்தி யெழுதப்பட்ட புதிய ஏற்பாட்டில்
அப்பத்தின் சிறு துண்டு ஒட்டியிருந்தது.

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

மது ஸ்ரீதரன்

இதுவே நம் கடைசிச் சந்திப்பாக
இருக்கலாம்..
வணிக உலகின் கரங்களுக்கு
நான் உன்னை
ஒப்புக்கொடுக்கப் போகிறேன்.
இனி எல்லாமே மாறிவிடப் போகிறது..
பால்கனியில் மாலை நான்கு மணிக்கு
இனிமேல் யாருக்காகக்
காத்திருக்கப் போகிறேன்?
என் தேநீர்க் கோப்பை
இனி துணையிழக்கும்..
நாம் அலைந்து திரிந்த இடங்களில்
இனி உன் மெல்லிய வாசனை மட்டுமே
எஞ்சியிருக்கும்..
இன்று இன்னும் நேரமிருக்கிறது..
நீ விமானத்தில் ஏறும் நொடியில்
ஒட்டுமொத்த உலகத்தின் பாரமும்
என் தலையில் இறங்குவதற்கு,
மரணத்தின் கணங்களை நான்
ஒத்திகை பார்ப்பதற்கு,
உள்ளுக்குள் வெடித்துச் சிதறும்
எரிமலைகளை மறைத்து
நான் இயல்பாக இருப்பதாகக்
காட்டிக்கொள்வதற்கு,
என்னை நானே பிரிந்து சென்றால்–
அது எவ்வாறு இருக்கும் என்று
அறிந்துகொள்வதற்கு..
இன்று இன்னும் நேரமிருக்கிறது..
இன்னும் கொஞ்ச நேரம் இரு..
வணிக உலகம் இரவுவரை
நேரம் கொடுத்திருக்கிறது.
ஒருவரை ஒருவர்
வெறுமனே பார்த்தபடி
உட்கார்ந்திருப்போமா?
தெருமுனையில் இருக்கும்
நம் விக்கி நாய்க்கு
பிஸ்கட் போட்டுவிட்டுக்
காலாற நடந்து வருவோமா?

கொஞ்ச நேரம் இரு...

படைப்பு
கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி
கவிதைத் தொடரில்
சிறப்புப் பரிசு பெற்ற
படைப்பாளி இ.கலைக்கோவன்
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்
09 - 11 - 2022
நாள்
கவிஞர் மணுஷ்ய புத்திரன்
(முதல்வர்)

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

இ.கலைக்கோவன்

அன்றைக்கும் அப்படித்தான்
மோட்டர் போட்டாகிவிட்டதா
என்றாய்

கரப்பான் பூச்சி அடிக்கிற
விளக்கமாறு எங்கே என்று
கேட்பாய்...

அழுக்குப் பேண்டுக்குள்
இருக்கும்
பென்டிரைவை எடுக்காமலே
ஊற வைத்துவிட்டேன்
என்றாய்..

இன்று ஒருநாள் மட்டும்
பாத்திரம் கழுவித்தர முடியுமா
கெஞ்சினாய்..

மூக்குத்தி குத்திக்கொள்ளவா
முகம் சுருக்கி நின்றாய்...

அவ்வளவு பெரிய விழாவின்
புகைப்படத்தில் அவள் ஏன்
உன்னருகில் நிற்கிறாள்
என்று முறைத்தாய்..

தெருமுனையிலிருந்து நான்
தூக்கிவந்த
கடுவன் குட்டிக்கு
டயானா என்றுதான் பெயர்
சூட்டுவேன்
அடம்பிடித்தாய்..

பகத்பாசிலை ஸ்கிரீன் சேவராய்
வைத்துவிட்டு உன்
செல்போனை
என்னிடம் கொடுத்து
வைத்திருக்கச் சொல்லுவாய்...

என் கை மோதிரத்தை
உன் கால்மெட்டியாய்ப்
போட்டுக்கொண்டு சிரித்தாய்..

ஆக்டிவாவில் உன் பின்னால்
என்னை இருத்திக்கொண்டு
ஒற்றை டீ குடிக்க
ஊட்டிவரை அழைத்துச்
சென்றாய்...

உனக்காய் ஒரு போர்வை
எனக்காய் ஒரு போர்வை
நமக்காய் ஒரு போர்வை
கட்டிலில் மடித்து
வைத்திருப்பாய்..

அளவு மாறிப்போனாலும்
நான் வாங்கிக்கொடுத்தேன்
என்பதற்காய்க் கறுப்பு நிறக்
காலணியை
அணிந்து நடந்தாய்...

எனக்குப் பிடிக்கும்
என்பதற்காய்
டஜன் கணக்கில்
கறுப்பு ஜெல் பேனாக்களை
வாங்கிக் கொடுத்தாய்...

மோட்டரின் இரைச்சல்,
மீசை வளர்ந்த கரப்பான்,
நீ நனைத்த பென்டிரைவ்,
சிங்கில் நிறைந்துகிடக்குற
பாத்திரங்கள்,
உனக்காய் வாங்கிய
வைரமூக்குத்தி,
அந்த அவள் நிற்கிற
புகைப்படம்,
என்னைப் பார்த்து
சிரிக்கிற பகத்பாசில்,
இடைவிடாமல்
குரைத்துக்கொண்டே இருக்கிற
டயானா,
என் கை விரலில்
நீ மாட்டிவிட்ட உன் மெட்டி,
தினமும் நான் துடைத்து
வைக்கிற
உன் ஆக்டிவா,
என் வாசனையை உனக்கும்
உன் வாசனையை எனக்கும்
கொடுக்கிற
நம் போர்வை,
உன் பாதம் பொதிந்து கிடக்கிற
அளவு மாறிய காலணி,
எழுதித் தீர்த்த
ஜெல் பேனாக்கள்,
எல்லாமும் என்னைச்சுற்றி
இறைந்து கிடக்கின்றன.
ஆனால்
நீயற்ற தனியறை என்னை
யாருமற்ற சிலுவையில்
ஏற்றிவிட்டது.

படைப்பு
கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி
கவிதைத் தொடரில்
சிறப்புப் பரிசு பெற்ற
படைப்பாளி சசிதரன் தேவேந்திரன்
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்
09 - 11 - 2022
நாள்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

சசிதரன் தேவேந்திரன்

அணைத்து வைக்கப்பட்ட
என் அலைபேசியைச் சுற்றி
காற்றலைகளில் அங்குமிங்கும் திரிகின்றன
நீ அனுப்பிய குறுஞ்செய்திகள்.

டபுள் டிக் பெறாத அக்குறுஞ்செய்திகளை
வெறித்தபடி நிலவொளி நிசப்தத்தில்
நீ அமர்ந்திருக்கும் காட்சியினை
ஓவியமென வரைகிறது மனம்.

இந்தக் கடினமான காலத்தினை
கடக்கவியலாமல் துவண்டு போகிறேன்.
வீசியெறியும் அலைபேசி
பேரண்ட இருளுக்குள் கரைந்து போகிறது.

கடைசி வரை டபுள் டிக் பெறாமல்..
நீயும் கைவிடும் அந்த நாளில்
போகுமிடம் ஏதுமின்றி
பால்வெளியில் விரியும்
உன் குறுஞ்செய்தி

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப் போட்டி

சிறப்புப் பரிசு

ம.கனகராஜன்

என்றோ விடைபெற்றுவிட்ட
சில கொண்டாட்டங்களின் மெழுகுவர்த்திகளும்
வெண்மலர்களும்
மீந்திருந்த அந்தக் கிராமத்து வாசலில்
இளைப்பாறிக்கொண்டிருந்தன

சிறுசிறு இரத்தத்துளிகளாய்
வயல்வெளிகளில் சிதறிக்கிடக்கின்றன
பசிகளின் பருக்கைகள்

அருகில்
சிறுவர் வேடத்தில் துள்ளிவிளையாடிய ஓடை
நிலவின் துகள்களால் நிறைந்திருந்தது

ஒவ்வொன்றாய் உதிர்ந்த
உயிர்களின் வலியை
உணர்விழந்த விழிகளால்
எழுதிக் களைத்த
ஆல மரத்து விழுதுகள்
அன்றுபோல்தான் இன்றும்
காய்ந்த காற்றில் அசைந்துகொண்டிருக்கின்றன

அதே தருணங்களில்தான்
மனிதத்தைக் கொன்ற பாவங்களுக்கு
வானவில் வண்ணம் பூசிக்கொண்டிருந்தார்கள்
கடவுளைக் கண்டுபிடித்த சூனியக்காரர்கள்

இப்படித்தான்
ஏழைகள் நிறைந்த எல்லா ஊர்களிலும்
வெறிச்சோடிக் கிடக்கின்றன
யாருமற்ற சிலுவைகள்

மு.முருகேஷ்

கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

2010ஆம் ஆண்டில் தமிழகத்தில் 1 மற்றும் 6ஆம் வகுப்புகளுக்கான சமச்சீர்க் கல்வி பாடப்புத்தகங்கள் தயாரிக்கும் பணி தொடங்கியது. மாநிலம் முழுக்க சிறப்புத் தேர்வொன்றின் மூலமாகத் தேர்வு செய்யப்பட்ட 20க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் சென்னைக்கு அழைக்கப்பட்டனர். சமச்சீர் பாடப்புத்தகத் தயாரிப்புப் பணிகளை ஒருங்கிணைக்கும் பணிக்கு எனது இலக்கிய இணையர் அ.வெண்ணிலா அழைக்கப்பட்டார். ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநராக இருந்த ஆர்.இளங்கோவனின் அழைப்பின் பேரில் வெண்ணிலா சென்றிருந்தார்.

அப்போதைய பள்ளிக்கல்வி அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு, சமச்சீர்க் கல்விப் பணிகளை விரைவாக முடிக்கும்படி சொல்லவே, நானும் அந்தப் பணிக்காகச் சில மாதங்கள் சென்றேன். அப்போது நான் யுரேகா கல்வி இயக்கத்தின் திருவண்ணாமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளராகப் பணிசெய்து கொண்டிருந்தேன்.

ஆறாம் வகுப்பு தமிழ்ப் பாடத்தில் வைப்பதற்காகச் சில கவிதைகளைத் தேர்வுசெய்து தருமாறு என்னிடம் கேட்டனர். நான் பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், தமிழ் ஒளி, அப்துல் ரகுமான், தாராபாரதி ஆகியோரின் கவிதைகளைத் தேர்வுசெய்து கொடுத்தேன். நான் கவிதை எழுதத் தொடங்கிய ஆரம்ப நாட்களிலேயே என்னை மிகவும் ஈர்த்த கவிக்கோ அப்துல் ரகுமானின் கவிதையும் அதிலொன்று. தலைப்பு: தாகம்.

‘வேலிக்கு வெளியே

தலையை நீட்டிய என்

கிளைகளை வெட்டிய

தோட்டக்காரனே!

வேலிக்கு அடியில்

நழுவும் என் வேர்களை

என்ன செய்வாய்?’



சில ஆசிரியர்கள் இந்தக் கவிதை புரியவில்லை என்று சொல்லிப் போனாலும், பலருக்கும் இந்தக் கவிதை பிடித்துப்போனது. அழகான வண்ண ஓவியங்களுடன் ஒரு பக்க அளவில் இந்தக் கவிதை பாடநூலில் இடம்பெற்றது. பிறகு 2011இல் தி.மு.க ஆட்சி மாறி, அ.தி.மு.க ஆட்சிக்கு வந்ததும் சமச்சீர்ப் பாடப் புத்தகத்தின் சில பக்கங்கள் கிழிக்கப்பட்டன. சில பக்கங்கள் பசை போட்டு ஒட்டப்பட்டன. இதுகுறித்து ஆனந்த விகடன் இதழில் கவிஞர் கவின்மலர், சிறப்புக் கட்டுரை ஒன்றையும் எழுதினார். கிழித்தெடுக்கப்பட்ட பக்கங்களுள் இந்தத் ‘தாகம்’ கவிதையும் இருந்தது.

அடிமையாய் அடங்கிப்போய், கால் தொழுது கிடப்பவர்களையே ஆட்சியாளர்களுக்குப் பிடிக்கும். வேலியிட்டு அடைத்து வைத்தாலும் சுதந்திர வெளியில் பூமிக்குக் கீழே பரவும் வேர்கள் எப்போதுமே அதிகாரப் பீடங்களை அசைத்துப் பார்க்கும் என்பதை உணர்ந்தவர்கள், யார் கண்ணிலும் கவிதை பட்டுவிடக்கூடாதெனக் கிழித்தெறிந்ததில் வியப்பொன்றுமில்லை (சமச்சீர்ப் பாடப்புத்தகத் தயாரிப்பு அனுபவங்கள் தனியே ஒரு நூலாக எழுதுமளவுக்கு உள்ளன).

80களில் எனது வாசிப்பில் என்னை ரொம்பவும் ஈர்த்தவர் கவிக்கோ அப்துல் ரகுமான். வார்த்தைகளைக் கவித்துவ அழகோடும், செறிவோடும் பயன்படுத்துவதில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். ஒருமுறை, மறுமுறை, பலமுறை படிக்கும் சிறப்புக்குரியன கவிக்கோவின் கவிதைகள். 1974இல் வெளியான அப்துல் ரகுமானின் ‘பால்வீதி’ தொடங்கி, அவரது அனைத்துக் கவிதை நூல்களையும் வாசித்திருக்கின்றேன். தமிழில் ஹைக்கூ பற்றிய பரவலான அறிமுகத்தைத் தந்ததோடு, நேரடியான ஹைக்கூ கவிதைகளை முதன்முதலாகத் தமிழில் எழுதியவர் என்கிற வகையில் கவிக்கோ மேல் எனக்குத் தனிக் காதலுமுண்டு. அதனால்தான் 1998இல் எங்களது திருமணத்தில் வெளியிடப்பட்ட ‘என் மனசை உன் தூரிகைத் தொட்டு…’ கவிதை நூலைப் பற்றிய குறிப்போடு, எங்களது சிறு பேட்டியும் ‘ஆனந்த விகடனில்’ வெளியானது. அதில் எழுத்தாளரும் திரைப்பட வசனகர்த்தாவுமான பாஸ்கர் சக்தி என்னிடம் ஒரு கேள்வி கேட்டிருந்தார்.

“உங்களுக்குப் பிடித்த கவிஞர் யார்..?”

எனது பதில் : கவிக்கோ அப்துல் ரகுமான்.

மதுரை மாநகர். வைகை பாய்ந்தோடிய ஊர். அதன் தென்கரை பகுதியிலுள்ள கிழக்கு சந்தைப்பேட்டை என்னுமிடத்தில் சையது அகமத் - ஜைனத் பேகம் எனும் பெற்றோரின்

தவப்புதல்வனாகப் பிறந்தவர் அப்துல் ரகுமான். 1937ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் நாளில் பிறந்தார். தந்தை சையது அகமத், உருதுக் கவிதைகளை 'மஹி' எனும் புனைபெயரில் எழுதிக்கொண்டிருந்தார்.

பள்ளிப் படிப்பை முடித்து, மதுரை தியாகராசர் கல்லூரியில் முதுகலை பட்டத்தைப் பெற்றார் அப்துல் ரகுமான். முனைவர் மா.இராசமாணிக்கனார், ஔவை துரைசாமி, அ.கி.பரந்தாமனார், அவ்வை நடராசன், அ.மு. பரமசிவானந்தம் ஆகிய தமிழறிஞர்களிடம் பயின்ற அப்துல் ரகுமானுக்குக் கவிதை எழுதும் ஆர்வம் வெகுஇயல்பாக வந்தது. 'புதுக்கவிதையில் குறியீடு' எனும் தலைப்பில் முனைவர் பட்டத்தையும் பெற்றார். வாணியம்பாடியிலுள்ள இஸ்லாமியக் கல்லூரியில் சிற்றுரையாளராக 1961ஆம் ஆண்டில் பணியேற்றார். பிறகு தமிழ்த்துறைத் தலைவராக 20 ஆண்டுகாலம் பணியாற்றி, விருப்ப ஓய்வுபெற்று, சென்னை திருவான்மியூரிலுள்ள கடற்கரைச் சாலையில் குடியேறினார் அப்துல் ரகுமான்.

சங்க இலக்கியம் தொடங்கி, சமகால இலக்கியம் வரை ஆழ்ந்த வாசிப்பு உடையவர் கவிக்கோ. அதுமட்டுமின்றி உருது இலக்கியங்களிலும் ஈடுபாடு கொண்டவர். கஜல் எனும் உருது காதல் கவிதை வடிவத்தைத் தமிழுக்கு முதன்முதலாக அறிமுகம் செய்து வைத்தார். நேரடியான எளிய மொழியில் கவிதை எழுதுவதைத் தவிர்த்த கவிக்கோ உவமை, உருவகம், படிமம், குறியீடு ஆகியவற்றின் ஊடாக எழுதிய கவிதைகள், தமிழுக்குப் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சின. 'மீமெய்ம்மையியல்' எனப்படும் சர்ரியலிஸக் கவிதைகளையும் கவிக்கோ எழுதினார்.

1972ஆம் ஆண்டு புதுடில்லி சென்றார். இந்தியச் சுதந்திர வெள்ளி விழாக் கவியரங்கில் கவிதை படித்தார். அப்படியே அங்குள்ள புத்தகக் கடைகளுக்குச் சென்று, தனது தேடுதல் வேட்டையைத் தொடங்கினார். கவிக்கோவின் கண்களில் பட்டது ஜப்பானிய மூவரி கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல். அப்படியே அள்ளிக்கொண்டு வந்த கவிக்கோ, ஹைக்கூ கவிதைகளில் மனதைப் பறி கொடுத்தார். 'ஆகா, மூன்றே வரிகளில் தெறிப்பான - அழகான - காட்சிக் கவிதை' என்று கொண்டாடிய கவிக்கோ, தமிழில் ஹைக்கூ கவிதைகளை எழுதத் தொடங்கினார். அந்தக் கவிதைகள் 'சிந்தர்' எனும் தலைப்பில் 'பால்வீதி'யில் வெளியாகின. அதில் மூன்று முத்துக்கள்.

'இரவெல்லாம்
உன் நினைவுகள்
கொசுக்கள்.'

'பனித்துளி இல்லாப்
பூவின் இமைகளில்
வீழ்ந்ததென் கண்ணீர்.'

'மயான வாயிலில்
பழுதாகி நின்றது
ஈனில் ஊர்தி.'



சிறு குறிப்பொன்றையும் அக்கட்டுரையில் தந்துள்ளார் கவிக்கோ.

"ஹைகூ கவிதையின் மூன்று அடிகளையும் ஒரே மூச்சில் அள்ளி விழுங்கிவிடாதீர்கள். முதல் இரண்டு அடிகளை மெதுவாகப் படித்து நிறுத்திக்கொள்ள வேண்டும். மீண்டும் முதலிலிருந்து ஆரம்பித்து நிறுத்திக்கொள்ள வேண்டும். பிறகுதான் மூன்றாவது அடியைப் படிக்க வேண்டும்" என்றார்.

மேலும், "எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லிக்கொண்டிருப்பது கவிதையின் வேலை இல்லை. கட்டுரையின் வேலை. நம்மில் பலருக்கு இந்தக் கலைத் தத்துவம் புரிவதில்லை. ஒரு காட்சியைக் காட்டுவதுடன் 'ஹைகூ'வின் வேலை முடிந்துவிடும். அதில் உள்ள அர்த்தங்களைத் தோண்டி இறைத்துக்கொள்வது வாசகன் பொறுப்பு. இந்த வகையில் வாசகனும் கவிதையில் ஒரு கூட்டுப் படைப்பாளி" (இன்றிரவு பகலில்... - பக்கம்:8) என்று சொல்லி, வாசகனையும் படைப்பாளியாக்கினார்.

"உலகக் கவிதை வடிவங்களிலேயே எனக்கு மிகவும் பிடித்தது 'ஹைகூ' தான். அது சின்னதாக இருக்கும் பெரிய அற்புதம். வடிவத்தைப் பார்த்தால் வாமனன் மாதிரி; ஆனால், 'தாரை வார்த்தாலோ விசுக்கென்று விண்ணுக்கும் மண்ணுக்குமாய் விசுவரூபமெடுத்து மூவுலகையும் அளந்துவிடும், திரிவிக்கிரமன் மாதிரி ஹைகூ'வுக்கும் மூன்றடிதான்"' என்று ஹைக்கூவை முதன்முதலில் அடையாளம் கண்டு சொன்னவர் கவிக்கோ. "ஹைகூவைத் தமிழுக்குக் கொண்டு வருகிறபோது அதன் எல்லா மரபுகளையும் தூக்கிக்கொண்டு வர வேண்டியதில்லை. ஜென் பார்வையில்தான் நாமும் இந்த உலகத்தைப் பார்த்தாக வேண்டும் என்று கட்டாயமில்லை" என்று கவிஞர்களுக்கு வகுப்பெடுத்தார்.

நேயர் விருப்பம், கரைகளே நதியாவதில்லை, ஆலாபனை, சுட்டுவிரல், பித்தன், மின்மினிகளால் ஒரு கடிதம் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட கவிதை நூல்களையும், அவளுக்கு நிலா என்று பெயர், முட்டைவாசிகள், மரணம் முற்றுப்புள்ளி அல்ல, பசி எந்த சாதி,

தான் ஹைக்கூ எழுதியதோடு நில்லாமல், பலரையும் ஹைக்கூ எழுதிட ஊக்குவித்தார். 'ஏதேன் தோட்டம்' எனும் இலக்கிய அமைப்பினைத் தொடங்கி, வாணியம்பாடி கல்லூரி மாணவர்கள் பலரை ஹைக்கூ பக்கமாக ஈர்த்தார். கவிக்கோ மூலமாக ஹைக்கூ கவிதைகள் மேல் ஆர்வமேற்பட்டு எழுத வந்தவர்களுள் முக்கியமானவர் கவிஞர் அறிவுமதி.

ஹைக்கூ தொடர்பாகப் புதிய செய்திகளைக் கட்டுரைகளாகவும் எழுதினார். 'இன்றிரவு பகலில்...' (டிசம்பர் 1985) எனும் நூலின் முதல் கட்டுரையே ஹைக்கூ பற்றியது. 'மின்மினிகள்' எனும் 6 பக்கச் சிறு கட்டுரையது. சிறுகட்டுரையென்றாலும், ஹைக்கூ கவிதையை எப்படி வாசிக்க வேண்டுமென்பதற்கான

கடவுளின் முகவரி, இது சிறகுகளின் நேரம் உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட கட்டுரை நூல்களையும் எழுதியுள்ளார்.

1995ஆம் ஆண்டு வெளியான 'ஆலாபனை' கவிதை நூலுக்காக 1999இல் சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றார் கவிக்கோ. தமிழக அரசு வழங்கிய பாரதிதாசன் விருது மற்றும் கலைமாமணி விருதுகளையும் பெற்றார். கம்பர் விருது, சி.பா.ஆதித்தனார் இலக்கியப் பரிசு, உமறுப் புலவர் விருது ஆகியனவும் கவிக்கோவின் புகழ் மகுடத்தை அலங்கரித்தன.

கோவையில் உருக்கொண்ட வானம்பாடி கவிதை இயக்கத்தின் சாரதிகளுள் ஒருவராகவும், சிவகங்கையில் கவிஞர் மீரா தொடங்கிய அன்னம் பதிப்பகத்தின் வெளியீடுகளுக்கு உறுதுணையாகவும் விளங்கினார் கவிக்கோ. ஜூனியர் விகடன் போன்ற வெகுசன



இதழ்களில் உலக இலக்கியங்களைப் பற்றிக் கவிக்கோ எழுதிய கட்டுரைகள், இலக்கிய வட்டத்தையும் வாசிப்பையும் விரிந்த தளத்தில் கொண்டுசெல்ல துணை நின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதிக்குப் பிடித்த கவிஞர்களுள் முதன்மையாளராக விளங்கிய கவிக்கோவை, ஒருமுறை கவியரங்கில் கவிதை படிக்க அழைத்தபோது, கலைஞர் இப்படியாக அழைத்தார்.

"என்ன வெகுமானம்
வேண்டுமென்று
என்னிடம் கேட்டால்,
அப்துல் ரகுமானைக் கேட்பேன்."

2009இல் கலைஞர் முதல்வராக இருந்த சமயத்தில் வக்ஃப் வாரியத்தின் தலைவராகவும் சில ஆண்டுகாலம் செயலாற்றினார் கவிக்கோ.

தனது கவிதைகளின் வழியாக வாசக மனதில் கேள்விகளையே வேள்விகளாக்கிய சிறப்பு கவிக்கோவுக்குரியது.

'வரங்களே
சாபங்கள்
ஆகுமென்றால்
இங்கே
தவங்கள்
எதற்காக?'

(வீழ்ந்த தேவதைகள் - பால் வீதி, பக்கம்:79)

'மயானத்து சாம்பல் எல்லாம்
திருநீறாகி விட்டது.
இனி
வாக்குப்பெட்டியின் வாய்கள்
பிணங்களின் வாய்கள்
வாக்குகள்
வாய்க்கரிசி.'

(வாய்க்கரிசி – சுட்டுவிரல், பக்கம்:145)

என்று துணிச்சலாகவும் பளாரென்றும் உண்மைகளைப் போட்டுடைத்த கவிக்கோ, உள்மறையாகவும் சிலவற்றை எழுதிச் சென்றார்.

‘புறத்திணைச் சுயம்வர மண்டபத்தில்
போலி நளன்களின் கூட்டம்
கையில் மாலையுடன்
குருட்டுத் தமயந்தி.’

முதல் வாசிப்பில் புரியாத இக்கவிதையின் தலைப்பை வாசித்ததும் சட்டெனப் புரிந்துவிடும். தலைப்பென்ன தெரியுமா..? ‘ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை.’

கவிக்கோவின் தனித்துவமான கவிதை ஆளுமைக்குச் சான்றான நூல் ‘பித்தன்.’ 1998 ஜூலையில் வெளியான இந்நூல், புதிய சிந்தனைகளின் விளைநிலமாக விளங்கியது. எதிர்ப்பதம் எனும் முரண்தொடைக்கு இவ்வளவு வித்தியாசமான கவிதைகளா என்று வியந்து படித்தேன். ‘ஆடை’ என்றொரு கவிதை;

‘பித்தன்
தன் சட்டையைக்
கிழித்துக் கொண்டிருந்தான்.
‘சட்டையை ஏன்
கிழிக்கிறாய்?’ என்றேன்.
‘கடிதத்தைப்
படிக்க வேண்டும் என்றால்
உறையைக்
கிழிக்கத்தானே வேண்டும்?’ என்றான்.
…………………………..
பொய்க்குத்தான்
ஆடை தேவை;
மெய்க்குத்
தேவையில்லை.
……………………………….
தேங்கிய நீர்தான்
பாசியை
உடுத்திக் கொள்கிறது.
அணைந்த நெருப்புத்தான்
சாம்பலை
அணிந்துகொள்கிறது.
தோலும் ஆடைதான் என்பதைப்
பாம்பு அறிந்திருக்கிறது;
நீங்கள் அறியவில்லை.’

கவிதை எழுதுவதோடு மட்டுமின்றி, மிகச் சிறந்த உரையாளராகவும் விளங்கிய பெருமை கவிக்கோவுக்கு உரியது. ஆழ்ந்த சிந்தனைகளோடு மெல்லிய நகைச்சுவையும் மிளிரும் உரைகளை வழங்கினார். என் அன்பின் அழைப்பினை ஏற்று, வந்தவாசிக்கு இருமுறை வருகை தந்து, ‘ஹைக்கூ கவிதைத் திருவிழா-2003’ (செப்டம்பர் 21)விலும், ‘விண் தொலைக்காட்சி’ கவியரங்கிலும்

தலைமையேற்றுச் சிறப்பித்தார். கவியரங்க மேடைகள் கவிக்கோவினால் புதுப்பொலிவு பெற்றன என்பதே உண்மை.

கவிதைகளுக்குள் உள்பயணமாக வாசகனை அழைத்துப்போகும் யாத்திரையைத் தன் கவிதைகளினூடாகச் சாத்தியமாக்கியவர் கவிக்கோ. திரைப்படப் பாடல் எழுதுவது குறித்த கேள்வியொன்றிற்கு, 'அம்மி கொத்த சிற்பி எதற்கு?' என்று கவிக்கோ கேட்ட மறுகேள்வியே இன்றளவும் பேசுபொருளாக உள்ளது.

திரைப்படங்களுக்கு என்றில்லாமல் கவிக்கோ தனியாக எழுதிய பாடல்கள், 'மகரந்த மழை' எனும் இசைத் தொகுப்பாக தாஜ்நூர் இசையில் வெளிவந்தது.

'மலரின் நறுமணம் போகுமிடம்
குழலின் பாடல்கள் போகுமிடம்
அணைந்த சுடர்கள் போகுமிடம்
அதுதான் நாமும் போகுமிடம்...'

என்றெழுதிய கவிக்கோ அப்துல் ரகுமானை, 2017 ஜூன் 2 அன்று 80ஆவது அகவையில் இயற்கை தன்னோடு சேர்த்தணைத்து எடுத்துக்கொண்டது.

சிறுகதையென்று தனியாக எதுவும் எழுதியவரில்லை கவிக்கோ. ஆனாலும், தனது ஒவ்வொரு கவிதைக்குள்ளும் கதையொன்றினைச் சிற்பம் போல் செதுக்கி வைக்கும் நுட்பத்தைத் தொடர்ந்து செய்துவந்தவர். பல கவிதைகள் என்முன்னே வந்து என்னைச் சொல் என்றாலும், 'சுட்டுவிரல்' தொகுப்பில் இடம்பெற்ற கடைசிக் கவிதையான 'ஒரு நாள் கூத்து' முந்திக்கொள்கிறது.

'நாடகம்
முடிந்துவிட்டது
ஒரு நாள் கூத்துக்கு
மீசையை மழித்துக் கொண்டவர்கள்
ஒப்பனையைக் கலைக்கத்
திரைக்குப் பின் போய்விட்டார்கள்
ஒன்பது தலைகளைக்
கழற்றி வைத்துவிட்டுச்
'சீதை'யோடு
லாட்ஜுக்குப் போய்விட்டான்
'ராவணன்'
வசூலைப் பங்கு போடுவதில்
'ராமனுக்கும்' 'லட்சுமண'னுக்கும்
இடையில்
அடிதடி
'பரதன்'
'ராமன்' காலை
வாரிவிட்டான்
பிரகாச விளக்குகள்
அணைந்துவிட்டன
வசனங்களும்
மேடையில்
உலர்ந்துகொண்டிருந்தது
கிளிசரின் கண்ணீர்
அரங்கத்தில்
இன்னும் காயாமல்
எச்சில்
முட்டி மோதி
வாங்கிய சீட்டுகள்
கிழிந்து கிடந்தன
வாசலில்
கூட்டுவதற்கு
விளக்குமாறு வரத்
தாமதமாகும்.'

- இன்னும் வரும்

● கவிஜி

சிறு கீற்றென ஒரு விடியல்

திரைப்படம் : *12 ANGRY MEN*

ஒருவனின் வாழ்க்கை 12 பேரின் கைகளில் இருக்கிறது.

அவர்களின் மனதுக்குள் மரணப் போராட்டம் ஓர் அறைக்குள் சில மணி நேரங்கள் நடக்கிறது. இதுதான் கதை. அவனின் மரணத்தைச் சுமந்துகொண்டு அமர்ந்திருக்கும் 12 வல்லுநர்கள் எப்படி குற்றவாளி என முத்திரை குத்தப்பட்டவனின் நியாயத்துக்குள் மெல்ல மெல்ல நகர்ந்து... இந்தச் சட்டமும் சமூகமும் கண்டுகொள்ளாமல் விட்ட அவனின் சிறு சிறு நியாயங்களை, சாட்சியங்களை, அவன் வாழ்வதற்கான ஆதாரத்தோடு அவன் பக்கம் இருக்கும் உண்மைகளை நெருங்குகிறார்கள் என்பதே இப்படத்தின் கதை.. களம்.. கரு.. உரு.. ஆக்கம்.

நம்பகத்தனமான சந்தேகத்தின்படி அவன் குற்றவாளி இல்லை என்று 12 பேரும் ஒவ்வொருவராக நம்பும் காட்சியில் உண்மையின் வீரியத்தை நாம் புரிந்துகொள்ள முடியும். நிஜங்களை எத்தனை மூடி போட்டு மூடினாலும் அது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எந்தத் தடைகளையும் முட்டி மோதி வெளியேறும் என்பது திண்ணம்.

12 பேரும் வெவ்வேறு துறைகளில் தலைமையில் இருப்பவர்கள். கோபம் நிறைந்த தொலைநோக்குப் பார்வை கொண்ட அதீத புத்திசாலிகள். அவர்களிடம் ஒரு குற்றம்... அதன் பின்னணி... அதன் நீட்சியெனத் தண்டனை.... அவன் மீது விழுந்திருக்கும் சிறு நம்பகத்தன்மையை ஒட்டி அந்தக் குற்றம் அவன் செய்திருக்க மாட்டான் என்று நம்பும் சூழல்.. இப்படி ஒரு கட்டத்தில் 12 பேரும் விவாதிப்பதில் படம் தொடங்குகிறது.

12 பேரில் ஒருவர் "அவன் குற்றவாளி இல்லை" என்று தன் வாதத்தை ஆரம்பிக்கிறார்.

12 பேரும் சண்டையிடுகிறார்கள். விவாதிக்கிறார்கள். மீண்டும் வாக்கெடுப்பு நடக்கிறது. இம்முறை 2 பேர் "அவன் குற்றவாளி இல்லை" என்கிறார்கள். இப்படியே மெல்ல மெல்ல மூன்று நான்கு ஐந்து என்று "குற்றவாளி இல்லை" என்ற பக்கம் சேர்கிறது பலம். இடையே கொலை நடந்த விதத்தை மீண்டும் செயல்முறை விளக்கத்தில் செய்து பார்க்கிறார்கள். ஆச்சரியங்களும் அனுமானங்களும் நிகழ்ந்தவைகளை கண் முன் நிறுத்துகின்றன.

குற்றத்தின் நிஜமே அது குற்றம் என்பதில்தான் இருக்கிறது. வஞ்சம் சூழும் பொழுதெல்லாம் வாய்மை தன்னை வெளிக்காட்டிக்கொள்ளும். அதன் பொருட்டே குற்றங்கள் எங்கேயாவது சிறு சாட்சியங்களை நிரபராதிக்குச் சாதகமாக விட்டுவிடும். எல்லாக் குற்றங்களும் ஒருநாள் வெளிவந்தே தீரும் என்பதுதான் பரிணாமத்தின் டி என் ஏ.

தவறுகளாய் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கருத்தும் மீண்டும் நிஜத்தின் புலனுக்கு எட்டுகிறது. இப்போது அது சரியாக இருக்கிறது. சூழ்ச்சிகளைக் களைந்துகொண்டே வரும் அறிவின் சாதகத்தில் கடைசி ஜூரியும் நீண்ட விவாதத்துக்குப் பின் "அவன் குற்றவாளி இல்லை" என்கிறார். படம் முடிகிறது.

படம் பார்த்துவிட்டு ஒரு குற்றம் அதன் உண்மைத்தன்மை அதன் சூழ்ச்சி அதனைச் சுற்றிக் கட்டப்படும் மாய வேலி உண்மையை மறைக்கும் கூர்மையான பொய்கள் அதற்காக வாதாடும் எதிர் தரப்பு என்று மனம் அந்தக் கொலையின் பின்னால் வேகமாக ஒரு பூனையின் மிரட்சியோடு ஒரு தூங்கா இரவின் அச்சுறுத்தலோடு நகர்ந்துவிடுகிறது. அந்த நகர்தலில் குற்றம் நிஜமாகத் தவறாகக் கட்டமைக்கப்பட்டிருக்குமாயின் சிறு கீற்றென ஒரு விடியல் தெரிகிறது. அதுதான் உண்மையின் ஆதி.

விடிய விடிய நகரும் ஆடு புலியாட்டத்தில் நிஜம் வெற்றி பெறுகிறது. ஜோடிக்கப்பட்ட ஆதாரங்கள் தோல்விக்குள் தன்னை நிலைநிறுத்திக்கொள்கின்றன. இந்த மனம் உண்மைகளால் படைக்கப்பட்ட ஒன்று. காலப்போக்கில் மாயைகளாலும் பொய்களாலும் வஞ்சங்களாலும் ஆளப்பட்டாலும் அது எங்கேயாவது ஒரு புள்ளியில் நிஜத்துக்குச் சாதகமாகத் தூண்டப்படும் வேளையில் அது முழுக்க முழுக்கத் தன்னை நிஜத்தின் நிறம் கொண்டே வெளிப்படுத்திக்கொள்ளும். அதுதான் இந்தக் கதையில் நடக்கிறது.

அவன்தான் இந்தக் குற்றத்தைச் செய்தான் என்று 11 பேரும் சொல்லும்போதும் "அவன் செய்யாமல் இருந்திருந்தால்...?" என்றொரு கேள்வியை மிச்சம் இருக்கும் ஒருவர் கேட்கிறார். அதுதான் நிஜத்தின் புள்ளி. உண்மையின் புள்ளி இக்கடினமான இடத்திலிருந்தே முளைக்கிறது. தலை போகும் சூழலில் இருந்தே புன்னகைக்கிறது.

எல்லா நிகழ்வுகளுக்கும் எதிரே ஒரு பக்கம் இருக்கிறது. அதன் பின்னால் இருந்து பார்க்கும்போது நிகழ்ந்தவையின் காட்சி மாறுபடுகிறது. அங்கே பாதகத்தின் மறுமுனை சற்று கடினமாகவே தன்னை மறைத்துக்கொண்டு நிற்கிறது.

தோண்டத் தோண்ட வெளிவரும் எலும்புக் கூடுகள் மட்டுமே சாட்சியல்ல... அவைகளின் மரணத்துக்கு. அது அதையும் தாண்டி பொய்மையைத் தோண்டி எடுக்கப்படும் உண்மைகளால் பாதுகாக்கப்படும் குற்றமோ அல்லது குற்றமற்றவையோ. ஒரு கொலையை மன்னிப்பது இரண்டு கொலைக்குச் சமம். அதே நேரத்தில்... ஒரு நிஜத்தை மறுப்பது சொல்லாத பொய்க்குச் சமம். இங்கே இரண்டுமே தங்கள் கைகளை விரித்துக்கொண்டு உங்களை நோக்கி வருகின்றன.

மூன்றாம் கண் கொண்டு பாருங்கள். முதல் வளைவு நேராகி இருக்கும். படித்த சட்டங்கள், பழுத்த அனுபவங்கள் சரிக்கு எதிராக மாறும் நேரத்திலும் ஒரே கை கூட ஓசையிட்டுத் தன்னை வெளிப்படுத்தும். காதால் கேட்பது பொய். கண்களால் பார்ப்பது பொய். தீர விசாரிப்பதே மெய். ம்ஹூம்.. தீர்ந்த பிறகும் விசாரணை தொடரும் என்பதே கால மெய். நிஜம் இருக்கும் பட்சத்தில் அது வெற்றிடத்தில் துளையிட்டு வெளிவந்தே தீரும். பொய்களாலும் மாயைகளாலும் சூழப்பட்ட தீர்ப்புகள் உடைந்தே போகும், முதல் நிஜம் தன் முழு பலத்தோடு எதிர்ப்படுகையில்.

பணம் படைத்தவனுக்கு வாதாட

அறிவாளிகள் போகும் நிலையில் பசி கொண்டவனின் ஆயுதம் என்னவாக ஆகும்.. நியாயத்தின் முனை கூராகத்தானே இருக்கும். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் நியாயத்தை அடித்து வீழ்த்திவிட்ட ஒரு கணத்தில்தான் 12 பேரும் மீண்டும் ஒருமுறை தீர்ப்பை அலசுகிறார்கள். எங்கேயோ.... எதுவோ விடப்பட்டிருக்கிறது. அது தேடப்படுகிறது. கண்டடையப்படுகிறது.

SAVE HIM, NOT KILL HIM - இப்படி எழுதுவதற்குப் பதிலாக *SAVE HIM NOT, KILL HIM* என்று எழுதி ஒரு நிரபராதியைக் கொன்ற கதையை நாமறிவோம்.

"கொண்டு வா" என்ற சொல் "கொன்று வா" எனக் கேட்க நடந்த கதையை நாம் அறிவோம்.

மனோதத்துவம் இல்லாத சூழல் எங்கும் இருப்பது இல்லை. ஒரு ஆரம்பம் இல்லாத முடிவு இருப்பதே இல்லை. ஒரு தொடர்ச்சி.. ஒரு நீட்சி.. அதனைச் சுற்றிய சம்பவங்களால்தான் எதுவும் இங்கே நிகழ்கிறது. அதை நோக்கிய பயணத்தில் நிஜம் போலக் காட்சியளிக்கும் மைல்கல்கள் பல நேரங்களில் வழக்கைச் சட்டென நிறுத்திவிடுகின்றன. தீர்ப்புகளில் மட்டுமே குற்றங்களோ குற்றமற்றவைகளோ கண்டடைவதில்லை. அது நாம் நினைப்பதையெல்லாம் தாண்டிய உச்சி. அதை அடைய சற்று மூச்சு வாங்கத்தான் வேண்டும்.

12 பேரின் தீர தீவிர விசாரிப்புகளால் ஒரு குற்றமற்றவனின் உயிர் காக்கப்படுகிறது. ஆத்ம திருப்தியே ஆன்ம பலம். நிரூபிக்கப்படுகிறது. ஒரு துளி போதும் பெரு மழையின் நோக்கத்துக்கு. தவறுகள் தண்டிக்கப்படும் அதே வேளையில் குற்றமற்ற நெஞ்சங்கள் விடுவிக்கப்படவும் வேண்டும். அதற்கு ஒரு துளி இடைவெளி கூட போதும். பெரும் புயலென உண்மை வரும்.

தனிமனிதன் போதுமானதாக இருக்கிறான்.. பசித்தவன் இல்லாத ஜகம் உருவாக்க.

திரைப்படம் : 12 ANGRY MEN

இயக்குநர் : SYDNEY LUMET

ஆண்டு : 1957

மொழி : ஆங்கிலம்

■

மொழிபெயர்ப்புச் சிறுகதை

ஆர்மேனிய மூலம் : டி.தெமிர்ச்யன்
தமிழில் : வல்லிக்கண்ணன்
ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்பித்தன்



வயிறு

வீட்டிலிருந்து சதுக்கத்துக்கு; சதுக்கத்திலிருந்து வீட்டுக்கு.

காலை முதல் மாலை வரை அவன் கண்காணிக்கிற எல்லை அதுதான். முன்னர், அவன் தச்சுவேலைக்காரனாக இருந்தபோது கூட, நகரத்தில் அவன் போவதற்கு விசேஷமான இடங்கள் எதுவும் இருந்ததில்லை. ஆயினும், சனிக்கிழமை மாலை வேளைகளில் வீட்டுக்கு வந்ததும், அவன் நேரே மதுச்சாவடியை நோக்கி நடைபோடுவான். ஆனால் இப்போது யுத்தமும், பஞ்சமும், இன்னும் இதர பல விஷயங்களும் சேர்ந்து அவனையும் அடியோடு அமுக்கிவிட்ட காலத்தில், அவனுக்குப் போக்கிடமே இல்லை என்றாகிவிட்டது. அவன் வேலை செய்யவில்லை. ஏற்கெனவே கிழடாகிவிட்டான். முற்றிலும் ஓய்ந்துபோனான். தரித்திரம் பிடித்த கிராமம் ஒன்றில் தீனிக்கு வழியின்றிக் கிடக்கும் ஒரு நாய்க்கு – எவரையும் பயப்படுத்தாமலும், தான் இருப்பதை எவருக்கும் உணர்த்த முடியாமலும் வெறுமனே கம்மிய குரலில் குரைத்துக்கொண்டிருக்கிற அப்பாவி ஜந்துவுக்கு – இருக்கிற முக்கியத்துவம்தான் அவனுக்கும் இருந்தது.

வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஒரு தச்சன் அவன். அவ்வளவுதான்.

கடைசியாக அவனை வேலைக்கு வைத்திருந்த ஆசாமி அவனைச் சக்கையாக முற்றிலும் பிழிந்தெடுத்த பிறகு வீட்டுக்கு அனுப்பினான். அவனது சவப்பெட்டிக்கும் புதைகுழிக்கும் அவனை அனுப்பிவிட்டான்

என்றே சொல்லவேண்டும்.

நாற்பது வருஷங்கள் உழைத்தும் அவன் எதுவும் மீத்திருக்கவில்லை. உடல் பலமோ, பணமோ, நண்பர்கள் என்று எவருமோ அவனுக்கில்லை. அனல் பறக்கப் பாய்ந்து ஓடும் குதிரைகள் பூட்டிய வண்டி மாதிரி அனைத்தும் அவனை விட்டுப் பறந்தோடின. தணிக்க முடியாத பசி ஒன்றுதான், நன்றியுள்ள நாய் மாதிரி, கடந்த காலத்தின் எச்சமாக அவனோடு ஒட்டிக்கொண்டிருந்தது. முன்னாள் கைவினைஞனின் ஆரோக்கியமான வயிறு பிடிவாதமாக இயங்கியது.

தின்பது, முடிவேயில்லாமல் தின்பது- அதுதான் அவனது அடங்காத அவா.

காலை முதல் இரவு வரை, அவனுடைய பேச்சு, செயல், திட்டம் எல்லாம் தின்பதைப் பற்றியே இருந்தன. அவன் தனது இருக்கையிலிருந்து எழுந்து, உணவுப் பதார்த்தங்கள் இருக்கிற அலமாரி அருகே போய், அதைத் திறந்து, அதன் இண்டு இடுக்குகள் பூராவும் ஆசையோடு தேடுவான். சட்டி பானைகளின் மூடியைத் திறந்து பார்ப்பான். எப்போதும் ருசிகரமான எதையாவது கண்டுகொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு, அல்லது தீவிர விருப்பத்தோடு, சிறு துணிகளின் மடிப்புகளைக் கலைத்து ஆராய்வான். தன் வாயில் போட்டுக்கொள்ள ஒரு துணுக்கைக்கூடக் காணாதபோதும், அவன் திறந்த அலமாரியின் முன்னே நெடுநேரம் யோசனையில் மூழ்கியவாறு நின்றுவிடுவான். தினம் ஒவ்வொரு மணி நேரமும் இப்படிச் செய்துகொண்டே இருப்பான்.

வீட்டில் எந்த இடத்திலாவது ஏதேனும் ரொட்டி இருந்தால் அதை நொடிப்பொழுதில் அந்தத் தச்சன் தின்று தீர்த்துவிடுவான். கண்ணுக்குப் புலனாகாத இடுக்குகளில் அவன் மனைவி சர்க்கரைக் கட்டியில் முக்கால்வாசியை மறைத்து வைப்பாள். ஆயினும், தச்சன் சிறிதளவு ரொட்டிக்காக, அல்லது மொச்சைக்காக, நெடுகத் தேடிக்கொண்டேயிருப்பான்...

வீட்டில் ஒன்றுமே இராது. உயிரைக் கொடுத்தால்கூட எதுவும் கிடைக்காது. அவனுடைய பசி அதிகரித்தது. உக்கிரமாக வளர்ந்தது. தச்சன் பெருமூச்செறிவான். அவன் வாய் கோணி, எச்சில் வழியும். அவன் உதடுகளைச் சப்பியபடி தனது இருப்பிடம் திரும்புவான். சுவரின்மீது முதுகையும் தலையையும் சாய்த்துக்கொண்டு, எதிர் சுவரில் உள்ள ஒரு புள்ளி மீது தனது அரைக்கண் பார்வையைப் பதிப்பான். மணிக்கணக்கில் அதே நிலையில் இருப்பான்.

அவன் தூங்குவான். எனினும், அது தூக்கம் அல்ல. கனவுக் காட்சிகள் தோன்றியவாறிருக்கும்.

வான்கோழியின் தொடைக்கறி, பருப்புகள் கலந்து பக்குவப்படுத்தப்பட்ட ஆற்று மீன், மீன்கறி சேர்ந்த கொழுக்கட்டை, ஆட்டு இறைச்சியாலான கறிவகைகள், இப்படிப் பலவும் தினவெடுத்த அவன் கற்பனையில் தோன்றும். எல்லையிலாப் பெரும் விருந்து, பசியைக் கிளறிவிடும் வகைவகையான பானங்களோடு, அவன் முன்னே பரப்பப்பட்டிருக்கும். சுவை தரும் மணங்கள் காற்றில் கலந்திருக்கும்.

ஒளிரும் வெண்ணிற மென்மையான ரொட்டியில் பொதிந்த சாறு நிறைந்த மசாலா இறைச்சி ஏதோ ஒன்று அவனது உதடுகளின் வழியே உள்ளே புகும். பக்குவமாக உப்பிட்ட இறைச்சியின் ரசம் ரொட்டித் துண்டுகளை ஊறவைத்து அவன் நாக்கிற்கும் தொண்டைக்குமிடையே இளகி ஓடும்.

சட்டென்று அவனது எச்சில் தொண்டையை நனைத்தபடி அவனுள் இறங்கும். அவன் இருமியவாறு விழித்துக்கொள்வான். விழிப்படைவான். பசித்த ஓநாயின் கண்களை ஒத்த அவனுடைய கண்கள் சுற்றுப்புறம் நெடுகிலும் சஞ்சரிக்கும். பயங்கரமான, கொடிய யதார்த்த நிலைமை அவனைத் தன் நினைவுக்குக் கொண்டு வரும்...

அவனுடைய பசி பெரும் கோபமாய் மாறும். அவன் துள்ளி எழுவான். முதலில், கிறக்கத்தினால் தள்ளாடுவான். தயங்கியபடி நிற்பான். பிறகு சுவரைப் பிடித்தபடி வெளியே முகப்புக்குப் போவான்.

அவன் துணைவி அவனுடைய

வாழ்க்கையைச் சட்டை செய்வதில்லை; அவன் போக்குகள் பற்றிக் கவலைப்படுவதேயில்லை. அவன் குதிக்கலாம்; இஷ்டம்போல் எத்தனை தடவை வேண்டுமானாலும் வெளியே போய்விட்டு உள்ளே வரலாம். அவனது செயல்கள் எதுவுமே அவன் மனைவிக்குப் புதுமையானது இல்லை. தச்சன் ஜீவிப்பதை விட்டுவிட்டான். அவனுடைய அசைவுகள், சொற்கள், செயல்கள் எல்லாமே ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டவை; ஒரு சடங்கு மாதிரி, ஆயிரம் வருஷங்களாக இயங்கிவரும் ஒரு கிரியை போல, திரும்பத் திரும்ப இயந்திர கதியில் நடைபெறுவனதான்.

அது அலுப்புத் தந்தது. இலையுதிர்காலத்தின் மழை மாதிரி சலிப்பூட்டியது.

பசித்த அந்த மிருகம் தன் மனைவியின் கவனத்தைக் கவர்வதற்கு என்ன செய்ய வேண்டும்? அழிக்கமுடியாத ஒரு விதியின் தீர்ப்புக்கிணங்க அவள் கணவன் செய்ததையே செய்துகொண்டிருப்பான். அவன் வெளியே மாடி முகப்புக்குப் போவான்; வெயிலில் காய்வதற்காக ஒரு மூலையில் பரப்பியிருக்கும் கருத்த உருளைக்கிழங்குகளின் பக்கம் வருவான்; அவற்றை ஒவ்வொன்றாய் எடுத்து, நடுங்கும் கைகளில் வைத்துப் பரிசீலனை செய்வான்; நாக்கால் தொட்டுப் பார்ப்பான்; கீழே போடுவான். பிறகு, தனது பிரம்பை எடுத்துக்கொண்டு படியிறங்கிக் கீழே போய்த் தெருப்பக்கம் செல்வான். எந்த இடத்துக்குப் போவான்? அதுவும் விதியினால் முன்பே திட்டமிடப்பட்டதுதான். சதுக்கத்துக்கே போவான் அவன்.

அவன் அனைத்து முடுக்குமூலைகளிலும் அலைவான். நகரத் தராசு மேடை, முலாம்பழங்கள், தர்பூசணி, வெள்ளரிக் குவியல்கள், பால் சாலை எல்லாம் சுற்றுவான். அவை அனைத்தின் விலைகளையும் விசாரிப்பான். பிறகு, கசாப்புக்கடை பக்கம் போவான். சன்னல்கள் முன்னே நிற்பான். இறைச்சி வகைகளைக் கண்ணோட்டமிட்டபின், உள்ளே நுழைவான். மென்மையும் சதைப் பிடிப்பும் உடைய கறிவகைகளைத் தடவிப் பார்ப்பான். பிறகு, வீடுநோக்கி நடப்பான். சதுக்கத்தின் ஓரத்தை அடைந்ததும், அங்கே உள்ளே உயர்ந்த நடைமேடையின்மீது உட்காருவான். பிரம்பின்மேல் கைகளை ஓய்வாக வைத்தபடி அவன் சதுக்கத்தையும் அதில் குவிந்துகிடக்கிற அனைத்துவித உணவுப் பொருள்களையும் பார்வையிடுவான்.

உலகத்தில் வளம் கொழித்தது; ஒவ்வொன்றும் மிக நிறையவே இருந்தது. ஆனால் பரிதாபத்துக்குரிய விஷயம், ஒவ்வொன்றும் மிக்க விலை உயர்ந்ததாக இருந்தது.

பச்சை திராட்சைகள், தெய்வீக முலாம்பழங்கள், நேர்த்தியான பாலாடைக் கட்டிகள் ஆகிய அந்த வற்றாப் பெரும் செல்வத்திலிருந்து ஒரு துணுக்கு, அல்லது ஒரு மணி, அல்லது ஒரு துளிகூட அவனுக்குக் கிட்டாது!

இந்த உலகம் ஒரு கனவு; பிரமிக்கவைக்கிற, வேதனை நிறைந்த, கொடுமையான கனவு! எவ்வளவு பெரும் பசி, எவ்வளவு உணவுகளின் பெருக்கம்; அவற்றை அடைய முடியாத நிலைமையும்கூட.

இதெல்லாம் எங்கே முற்றுப்பெறும்? ஒரே ஒரு தடவை தன் வயிறு நிரம்ப உண்டு களிப்பதற்கு அந்தத் தச்சன் ஆண்டுக்கணக்கில் ஏங்கவேண்டுமா?

இந்த உலகத்தைப் பொறுத்தமட்டில், உயிர் பிரியாத நிலையிலேயே அவன் ஏற்கெனவே செத்துப்போனவன். ஏனெனில், செத்தவர்கள்தான் சாப்பிடுவதில்லை. ஆயினும், அவன் உயிரோடு இருந்தான். அவன் தன் கண்களால் அனைத்தையும் பார்த்தான். தர்பூசணியின் குளுமையான வட்டத்தை இப்போதுதானே அவன் தொட்டுப் பார்த்தான்; ஆட்டுக்குட்டியின் மிருதுவான கறியை அவன் தடவினானே... ஆகவே, அவன் உயிரோடு இருக்கிறான்; இன்னும் சாகவில்லை. உலகத்துக்கு என்ன வந்துவிட்டது? வயிறாரத் தின்னாமல் அவன் நிஜமாகவே செத்துவிடுவானா?

அவன் கசப்புற்றான், கோபம் கொண்டான், வெறி அடைந்தான்.

தனக்குத் தானே பேசியபடி அவன் வீட்டுக்குத் திரும்பிப் போவான்.

அவன் முற்றத்தில் அடிவைத்ததுமே, அவனுடைய மயக்கப் பிதற்றல்களை அவன் மனைவி கேட்டுவிடுவாள். அவன் உள்ளே நுழைவதைப் பார்ப்பதற்காக அவள் தன் கண்களை அசைக்கவும் மாட்டாள். அவன் மயக்கநிலையில் ஆயிரம் தடவைகள் அவ்வீட்டுக்குள் புகுந்திருக்கிறான்; மாடிப்படிகளைத் தன் பிரம்பினால் ஆயிரம் முறை தட்டியிருக்கிறான். அமங்கல நினைப்புகளோடு உறுத்து நோக்குகிற, எதையும் பார்க்காத, அவனது மங்கலான கண்களை அவள் எப்போதும், நிரந்தரமாகக் கண்டிருக்கிறாள்.

உண்மைதான். தச்சன் எந்த ஆளையும் எந்தப் பொருளையும் பார்க்கவில்லை. ஒவ்வொன்றிலும் தனக்கு விருப்பமானதை – உணவையே – அவன் தேடினான்.

தச்சன் தனது இடத்துக்கு வந்து உட்காருவான். சுற்றுமுற்றும் பார்ப்பான். புதுமையானது ஒன்றுகூட இல்லை. உலகம் உறைந்துபோனதுபோல், அதன் சக்கரம் அசையாது நிற்பது போல் தோன்றும்.

அவன் மனைவி வாசல்படியில் அமர்ந்து காலுறை பின்னிக்கொண்டிருப்பாள். இப்போது வாய்திறந்து பேசவேண்டும், தன் இதயச் சுமையைக் கரைப்பதற்காக ஏதேனும் குரல் எழுப்ப வேண்டும் என்ற அவசியத்தைத் தச்சன் உணர்வான்.

“நான் சதுக்கத்துக்குப் போனேன். அங்கே நல்ல தக்காளிகள் இருந்தன. கொஞ்சம் வாங்கலாம் என்று நினைத்தேன். புளிக் காடியோடு சேர்த்து நாம் சாப்பிடலாமே. நாசமாய்ப்போக, விலை ரொம்ப அதிகம். என்னிடம் பணம் இல்லை!”

வருத்தத்தோடும் நம்பிக்கை வறட்சியோடும் அவன் எச்சிலைக் கூட்டி விழுங்குவான். பாலைவனத்தில் வழி தவறிப்போன ஒரு பிராணிபோல் அவன் காணப்பட்டான்; புகலிடம் எதையும் காணாது நடந்து நடந்து அலுப்புற்றான். இன்றும் நேற்றுப் போலவேதான்.

அங்கு மவுனமே நீடித்தது. அவன் மனைவி பேசமாட்டாள். அவள் என்ன பேசுவது? அவளுக்கே ஏகப்பட்ட கவலைகள். அவள் பாடுபட்டுத்தான் வாழ்க்கை நடத்தவேண்டியிருந்தது. துணி துவைப்பது, துணிகளை வெளுக்கச்செய்வது போன்ற வீட்டு வேலைகளைச் செய்து சொற்பமான ரூபிள்களை அவள் சம்பாதிப்பதே சிரமமாக இருந்தது. அவள் சம்பாத்தியம் முழுவதும் ரொட்டி வாங்குவதிலேயே காலியாயிற்று. அப்படி வாங்கிய ரொட்டியில் பெரும்பகுதி அவள் புருஷனின் வயிறு என்ற படுகுழிக்குள்தான் போய்ச் சேர்ந்தது. அந்த அபலைப் பெண் நாள் முழுவதும் கடுமையாக உழைத்துக் கொண்டுவந்த பணம் இரண்டு பவுண்டு ரொட்டி வாங்குவதற்குத்தான் போதுமானதாக இருந்தது. அதுவே திருப்திகரமானது என்று எண்ணி, அவள் ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லை.

கடைசியாக அன்றைய தினத்தின் புனிதமான, ஆனந்தமயமான நேரம் வந்துவிட்டது. அவன் மனைவி உணவு எடுத்து வரப் போவாள். நிலவறையிலிருந்து மொச்சையோ தேயிலையோ கொண்டு வருவதற்காக அவள் போயிருக்கும் வேளையில், தச்சன் ஒரு கடுவாய்போல் எழுந்து, ரொட்டி இருந்த இடத்துக்குப் போவான்; அதைக் கிள்ளுவான்; கையில் எடுத்து அப்படியும் இப்படியுமாகப் புரட்டுவான்; தனது அழுக்குக் கைகளால் தடவுவான்; மோந்து பார்ப்பான். மேலும் தன்னைக் கட்டுப்படுத்த இயலாதவனாய், வெறித்தனமாக அதைத் தின்னத் தொடங்குவான்; கடித்துக் கடித்து, மெல்லாமல், சுவைக்காமல், விழுங்குவான். விக்கிக்கொண்டு தொண்டையைச் சொறிவான்...

அவன் மனைவி உள்ளே வருவாள். அனைத்தையும் பார்ப்பாள். சத்தம் செய்யமாட்டாள். அவ்வாறு செயல்புரிவதை இயல்பாகக் கொண்ட ஒரு மிருகத்தின் காப்பாளராக அவள் தன்னைக் கருதினாள். இடையிடையே அவள் தனக்குத் தானே

குறைகூறிக் கொள்வாள்; சிலசமயம் மன்னிப்பாள். பிறகு மீண்டும் பழிப்பாள். ஆனால், பெரும்பாலும் அவள் சும்மா இருந்து விடுவாள். தனது துரதிர்ஷ்டத்தைச் சகித்துக்கொள்வாள்.

சாப்பாடு விசனத்தோடும் வேகமாகவும் முடிந்துவிடும்.

ரொட்டியை விழுங்கி முடித்ததும், தச்சன் சக்தி பெற்றவனாய்ப் பேசத் தொடங்குவான்.

“போன வருஷம் இந்தச் சமயம் நம்மிடம் ஒரு மூட்டை வெங்காயம் இருந்தது” என்றோ, “அவித்த மொச்சையில் சாயங்காலத்துக்குக் கொஞ்சம் வைத்திருக்கிறாயா?” என்றோ கூறுவான்.

“சாயங்காலத்துக்கு என்று ஒதுக்கி வைக்கும்படி அதில் எவ்வளவு இருந்துவிட்டது?” என்று அவன் மனைவி வெடுக்கெனக் கூறி, தட்டுகளை அகற்றுவாள்.

ஆனால் அவை எல்லாம் ஒரு சடங்குபோல் மறுபடியும் நிகழும்; அசையாத துயரநிலையிலிருந்து எதையும் அது மாற்றாது.

பனிக்காலம் அதன் கவலைகளோடும் எதிர்ப்பார்ப்புகளோடும் வந்தது.

தச்சன் மாடி முகப்பின் கம்பி அளி அருகில், அதன் விளிம்பில் மோவாயை வைத்தபடி, எதிர்வீட்டு முற்றத்தில் நடைபெறும் காட்சியைக் கவனித்துக்கொண்டிருந்தான். அண்டை வீட்டில் வசிக்கும் கடைக்காரன் ஒரு வண்டி மரக்கட்டைகள் வாங்கியிருந்தான். அவை வண்டியிலிருந்து இறக்கப்படுவதை அவன் பார்த்தவாறு நின்றான். சிவந்த கன்னங்களை உடைய கிழவன் ஒருவன் ஊக்கத்தோடு மரம் அறுத்துக்கொண்டிருந்தான். அவன் சீர் தவறாது சிணுங்கிக்கொண்டுமிருந்தான். ஒரு ஜோடி காளைகள், ஒன்று நின்றவாறும் இன்னொன்று தரைமீது படுத்தபடியும், பாரம்பரியமான மந்தகதியில் அசை போட்டுக்கொண்டிருந்தன. புல் மணமும் மர வாசனையும் கலந்த ஏதோ ஒரு வாடை தெருவில் மிதந்துகொண்டிருந்தது.

அன்றைய தினம் பிரகாசமாக இருந்தது.

சூரிய ஒளி சிவப்பு ஆம்லெட் நிறத்தில் மிளிர்ந்தது. தச்சன் அதை எல்லாம் பார்த்தான். தன் பசியினால் தவித்தான். மாரிக்காலத்துக்காக அவனும் சேமித்து வைத்த ஆனந்தமயமான பழைய நாட்களை நினைவுகூர்ந்தான். இனிமையான, ஆனால் திரும்பவும் கிடைக்காத, தனது குழந்தைப் பிராயத்தை அவன் நினைத்தான்.

முதிய அறுப்புக்காரன் வேர்வையால் நனைந்துபோனான். அவன் மேலும் தீவிரமாக உழைத்தான். ஒரு மணி நேரம் மரம் அறுத்தானதும், அவன் வேலையை நிறுத்தினான். தன் பையிலிருந்து, சிவப்பான நாட்டுப்புறத்து ரொட்டித் துண்டு ஒன்றை வெளியே எடுத்தான். தனது மெலிந்த கைகளால் அதைத் துண்டு துண்டாகப் பிய்த்தான்; ஒவ்வொரு துண்டாக வாய்க்குள் திணித்து, வேகமாகத் தின்றான். தச்சன் அவனையே பார்த்தான்; அவனும் அறுப்புக்காரனோடு சேர்ந்து மனசினால் ரொட்டி தின்பதில் முனைந்தான். பிறகு நம்பிக்கை இழந்து மாடுகளைப் பார்த்தான். அவையும் அசை போட்டுக்கொண்டிருந்தன. நாளின் சகல

நேரமும் தச்சனின் நினைப்புகள் அசை போடுவதைச் சுற்றியே இயங்கின. எனவே, அந்தக் காட்சி அவனது கற்பனையை ஆத்திரமாக முடுக்கின. அவனைச் சுற்றியுள்ள உலகம் முழுவதும் அசை போட்டுக்கொண்டிருந்தது. அந்த நேரத்தில் ஒவ்வொரு ஓசையும், ஒவ்வொரு அசைவும், ஒவ்வொரு விஷயமும் அசை போடுவது தவிர வேறு எதுவுமில்லை. தச்சனின் கண்கள் படுத்துக்கிடந்த காளை மீது பதிந்தன. அதன் பின்பக்கத்துத் தொடை கொஞ்சம் துருத்திநின்றது. அவன் தன் மனசினால் அந்தத் தொடையைத் தோலுரித்து, அதன் சதையைத் துண்டங்களிட்டு, அவற்றைப் பானைகளில் போட்டு, சமைத்துச்சாப்பிட்டான். முடிவில்லாமல் தின்றான்.

அவன் வாயில் நுரை சாடியது. அவன் பயங்கரமாக மாறினான். அவன் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. அவ்வேளையில் அவன் உண்மையில் ஒரு மிருகம் போலவே தோன்றினான். பசி எடுத்த வயிறு தவிர வேறு எதுவுமாக இல்லை அவன்.

இறுதிவரை அவன் அவ்வாறே உட்கார்ந்திருந்தான். அப்புறம், வண்டி நகர்ந்தது. அறுப்புக்காரன் அதன் பின்னால் போனான். வெட்டப்பெற்ற கட்டைகள் உள்ளே எடுத்துச் செல்லப்பட்டன. அப்போது தச்சனுக்கு உடல் நடுக்கம் ஏற்பட்டது. சூரியக் கதிர்களின் அடியில் மறைந்திருந்த ஒரு குளிர் ஊர்ந்து வந்து அவனைப் பற்றிக்கொண்டது. அவன் வீட்டுக்குள் போய், தனது பழைய பெரிய மேல்சட்டையை எடுத்துத் தன் உடம்பைப் போர்த்தினான்.

சில தினங்களுக்குப் பிறகு அவனுக்குக் கடுமையான நோய் கண்டது. அப்படி ஒரு துயரநிலையையும் எதிர்பார்த்திருந்த அவன் மனைவி, அந்தச் சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தபடி தன்னை அனுசரித்துக்கொண்டு, தனது இறுதிக் கடமைகளை நிறைவேற்றினாள். ஒருவன் தன் உயிருக்காகக் கெஞ்சி மன்றாடுவது போல், தச்சன் சிறிதளவு சூப்புக்காக ஏங்கினான். ஆனாலும், அந்தச் சொர்க்க உணவை அளித்து அவனைத் திருப்திப்படுத்துவதற்கு வகை எதுவும் இல்லை. மாறாக, உலர்ந்த செர்ரிப் பழங்கள் ஐந்தை ஊறவைத்த குளிர்ந்த நீரை, அவன் தாகத்தைத் தணிப்பதற்காக, அவன் மனைவி அவனுக்கு அளித்தாள்.

ஆனால், நோயாளி ஒரு பிளேட் சூப்பு வேண்டுமென்று அதிகாரமாகக் கேட்டான். காலை முழுவதும் அதைப் பற்றியே பேசினான். ஆவலோடு காத்திருந்தான் – எல்லாம் வீணாகத்தான்.

மதிய உணவுக்குக் கரடுமுரடான ரொட்டித் துண்டுதான் இருந்தது. சீக்காளி அதைத் தின்ன முயன்றான். ஆனால் அவனால் அதை விழுங்க இயலவில்லை.

சாயங்கால நேரத்தில், பக்கத்துவீட்டுப் பெண் ஒருத்தி, தச்சன் மனைவி குழப்பத்தோடு காணப்பட்டதைக் கவனித்தாள். அவள் அருகில் வந்து விசாரித்து, என்ன விஷயம் என்று புரிந்துகொண்டாள். அவள் இரக்கப்பட்டு, தன் மகளைப் பால்சாலைக்குத் தயிர் வாங்கி வரும்படி அனுப்பினாள். அங்குத் தயிர் இல்லை. அதனால் சூப்புத் தயாரிப்பது மறுநாள் காலைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

ஆனால் இரவில் தச்சனின் நிலைமை மோசமாயிற்று. ஜுரம் அதிகரித்து, அவன் புலம்பலானான். உணவைப் பற்றிய பேச்சை எடுக்காத அவனுடைய முதல் புலம்பல் அதுதான். முற்றிவிட்ட ஜுரத்தில், சில எடுபிடிகள் எங்கே எடுத்துச் செல்லப்பட்டன என்று அவன் தன் மனைவியைக் கேட்டான். எந்த எடுபிடிகள், எங்கே எடுத்துச் செல்வது என்பது எதுவும் அவளுக்குப் புரியவில்லை. ஆகவே அவள் அவனுக்குப் பதில் சொல்லவில்லை. நோயாளி கண்களைத் திறந்து, மனைவியை நோக்கினான். அவளையே பார்த்தபடி, “அப்படியானால் நீ என்ன சாப்பிடுவாய்?” என்று கேட்டான். அவன் இன்னும் சூப்புக்காகக் காத்திருக்கிறான் என்று அவள் எண்ணினாள்.

“அது சீக்கிரம் வந்துவிடும். கொஞ்சம் பொறுத்திரு” என்று அவள் தச்சனுக்கு ஆறுதல் வார்த்தை கூறினாள்.

“நான் போன பிறகு நீ என்ன சாப்பிடுவாய்?” என்று தச்சன், தனது மரணத்தைக் குறிப்பிட்டபடி, திரும்பவும் கேட்டான்.

“கடவுளே, அது எனக்கு எப்படித் தெரியும்?” என்று அவள் துயரக்குரலில் முணுமுணுத்தாள்.

அவ்வேளையில் அண்டை வீட்டுக்காரி ஒரு தட்டு நிறைய சூப்பு எடுத்து வந்தாள். அதை மேஜைமேல் வைத்துவிட்டு, ஆராயும் கண்களால் சீக்குக்காரனை உற்றுநோக்கினாள்.

“அவள் சூப்பு கொண்டு வந்திருக்கிறாள். உனக்கு வேண்டுமா?” என்று சீக்காளியின் மனைவி கேட்டாள்.

“அது உனக்குத் தெம்பளிக்கும்!”

“ஊம்?” என்று ஜுர வேகத்தில் அவன் கேட்டு, கண்களைத் திறந்து பார்த்தான்.

சூப்பு அருகில் கொண்டுவரப்பட்டது. ஒரு கரண்டியில் அதை எடுத்து அவன் உதடுகளில் வைக்கப்பட்டது. அவர்கள் தனக்கு உணவு ஊட்டுகிறார்கள் என்பது உள்ளுணர்வினால் நோயாளிக்குப் புலப்பட்டது. அவன் தன் உதடுகளைச் சுவைத்தான். ஆனால் உணவை உட்கொள்ளவில்லை. அவனுக்குப் பசி இல்லை.

அவன் வாழ்விலேயே முதல் முறையாக அவனுக்குப் பசி இல்லை. உலகம் மாறிவிட்டது. ஒரு காலத்தில் அக் கைவினைஞனது உடலமைப்பின் ஆனந்தமாகவும், பிற்காலத்தில் அவனுக்குத் தண்டனையாகவும் இருந்த பசியை அவன் இழந்துவிட்டான்.

அவன் சாப்பிடவில்லை. சோகமாகத் தன் மனைவியையும் அடுத்த வீட்டுக்காரியையும் பார்த்தான். பெருமூச்சு விட்டான்.

“பரவாயில்லை. நீ அப்புறம் சாப்பிடலாம்” என்று கூறி அண்டை வீட்டுக்காரி தட்டைத் தச்சன் மனைவியிடம் தந்தாள்.

பின்னவள் உளம் நெகிழ்ந்தாள். அவள் துக்கத்தோடு சூப்பை நோக்கினாள். பிறகு, செத்துக்கொண்டிருக்கும் தன் கணவனைப் பார்த்தாள். தட்டை அலமாரியில் வைப்பதற்காகப் போனாள்.

அவள் அலமாரியைத் திறந்தபோது, அவளுக்கு எழுந்த இரக்க உணர்வினால் அவள் இதயம் வலித்தது. அந்த அலமாரி எத்தனை எத்தனை முறைகள் திறந்து மூடப்பட்டிருக்கிறது; எத்தனை வகையான இனிய பொருள்கள் அதில் வைக்கப்பட்டிருந்தன; அதிலிருந்து தின்பதற்கு இனிய பொருள்களை நிறைய நிறைய எடுத்தபோது எத்தனை நண்பர்களின் கண்கள் சந்தோஷத்தால் ஒளிர்ந்தன. அப்படி ஒரு காலத்தில் வளம் நிறைந்து குலுங்கிய தங்கள் வாழ்க்கை அலமாரியைத் தச்சன்தான் எத்தனை தடவைகள் திறந்து திறந்து மூடியிருக்கிறான்!

அவள் இன்னும் அந்தத் தட்டை அலமாரிக்குள் வைக்கவில்லை. அதற்குள், பக்கத்து வீட்டுக்காரி மெல்லிய குரலில் என்னவோ கூறி அவளை அழைத்தாள்.

சீக்காளி செத்துக்கொண்டிருந்தான்.

அவன் நெடுமூச்செறிந்தான். ஏதோ சொல்ல ஆசைப்பட்டான்.

அவனது சுருங்கிய தொண்டைக்குள்ளிருந்து தெளிவில்லாத ஒரு சத்தம் வெளிப்பட்டது.

சுருங்குகிற தொண்டைக்கும் கனத்த மூச்சு உயிர்த்தலுக்குமிடையே அவன் கூறியது கேட்டது. “சாவது இப்படித்தான் என்றால், நான் சித்தமாக இருக்கிறேன்” என்று நோயாளி சொன்னான்.

அவன் அமைதியாக, வேகமாகவும்கூட, இறந்துபோனான்.

அறையில் மரண அமைதி நிலவியது.

அப்புறம் என்ன? எல்லாம் அவ்வளவுதானா?

அவன் மனைவி ஏதோ ஒரு மாறுதலுக்காகக் காத்திருந்தாள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. அவள் தன் முன்னே பார்த்தாள். ஒரு பக்கம் பசித்த தச்சனின் திறந்த, உறைந்துவிட்ட கண்களைக் கண்டாள். மறுபுறம் அலமாரியைப் பார்த்தாள். அதுவும் திறந்து, இயக்கமற்று இருந்தது; அவளை வதைத்துவந்தவன் பார்த்ததுபோலவே அதுவும் அவளைப் பார்த்தது.

■

ஆதிரன்

வானவில் வண்ண மின்னல்

தொடர்ந்து குறிச்சொற்கள் பற்றி எழுதிக்கொண்டிருக்கிறேன். ஏறக்குறைய 25 குறிச்சொற்கள் குறித்து எழுதுவேன். கடந்த தொடர்களில் சில குறிச்சொற்களைப் பற்றி எழுதியிருக்கிறேன். மிகச்சுருக்கமாக அடிப்படை அறிவுடன் அறிமுகம் செய்துள்ளேன். அவ்வாறாக இந்த மாதத்தில் தலைமுறை இடைவெளி (generation gap) பற்றி மட்டும் எழுதியுள்ளேன். கடந்த மாதம் மரம் தொடர்பாக எழுதியிருப்பதும் இந்த மாதம் தலைமுறை இடைவெளி பற்றித் தனித்தனியாக எழுதுவதும் இவை எவ்வளவு முக்கியமானவை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே. மேலும் அனைத்துக் குறிச்சொற்கள் குறித்தும் தங்களது அன்றாட உரையாடல்களில் விவாதிக்கப்பட வேண்டும் என்றும் நான் கருதுகிறேன்.

தலைமுறை இடைவெளி

I fear the day that technology will surpass our human interaction.

The world will have a generation of idiots — Albert Einstein

எதுவும் கடந்துபோகும் அல்லது இதுவும் கடந்து போகும் என்கிற வாக்கியம் உண்மையில் நமக்கு நம்பிக்கை அளிக்கக்கூடியதாக இருக்கிறதா? எதிர்மறை எண்ணங்கள், வலிகள், பிரச்சனைகள் என்று வரும்போது மட்டுமே இவ்வாக்கியங்கள் உச்சரிக்கப்படுவது ஏன்? மகிழ்ச்சியின்போது இது ஏன் தோன்ற மறுக்கிறது? இதுபோன்ற கேள்விகளை உங்களிடமே விட்டுவிடுகிறேன். நாம் தலைமுறை இடைவெளி பற்றிய புரிதலை விஞ்ஞானப்பூர்வமாக அணுகலாம். தலைமுறை

இடைவெளி குறித்து நம் அனைவரிடமும் தனித்தனிப் புரிதல் இருக்கும். வேடிக்கை என்னவென்றால் அவை அனைத்துமே உண்மையாக இருக்கும் என்பதுதான்.

தலைமுறை இடைவெளி என்றால் என்ன என்கிற கேள்விக்கும் வாழ்க்கை என்றால் என்ன என்ற கேள்விக்கும் பெரிய வித்தியாசமில்லை. தலைமுறை இடைவெளி என்றால் என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள தலைமுறை என்றால் என்ன என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். உலகம் முழுவதும் ஆய்வறிஞர்கள் இது குறித்து ஆயிரக்கணக்கான புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள். எப்பொழுதும் போலத் தமிழில் மொன்னையான ஆய்வுகள் மட்டுமே இருக்கின்றன. இது குற்றச்சாட்டு அல்ல, ஏக்கம். மாறாக, தலைமுறை இடைவெளி குறித்துத் தமிழ் மரபின் வழக்காறுகளில் ஒரே ஒரு சொலவடை 'இந்தப் பிரச்சனையை' மொத்தமாக விளக்கிவிடுகிறது: பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு. அவ்வளவுதான். என்னைப் பொறுத்தவரை தலைமுறை இடைவெளி என்பது, பிள்ளைகள் ஒரே நேரத்தில் அப்பா அம்மாவின் கருத்துக்களுக்கு எதிராகவும் தாத்தா பாட்டிகளின் கருத்துக்களுக்கு ஒத்தும் இருக்கிறார்கள் என்று புரிந்துகொள்கிறேன்.. பொதுவாக இது அப்படித்தான் இருக்கிறது. இதில் இயங்கும் உளவியல் மிகவும் எளிதானது. ஆனால், இந்தத் 'தலைமுறை இடைவெளி' என்கிற பாடம் மிக ஆழமானது. கடினமான புரிதல் தன்மையை எதிர்நோக்குவது. எனவே, இது குறித்துச் சிறு வரலாற்றுப் பார்வையைப் பெற முயல்வோம்.

முதலில், மேற்கத்திய சிந்தனையாளர்களால் 1950களில் ஒரு தத்துவமாகத் 'தலைமுறை இடைவெளி' கருத்துரு உருவாக்கப்பட்டதாக ஆய்வாளர்கள் சொல்லுகிறார்கள். இதன் பொதுவான 'கருத்துரு' (concept) படிப்படியாக உலகம் முழுவதும் பரவிப் பிரபலமடைந்தது. ஆனால் இந்தப் பிரச்சனை ஆயிரக்கணக்கான காலங்களாக மனித சமூகத்திடம் உலவுகிறது என்றால் மிகையில்லை. உண்மையில் இந்தப் பிரச்சனைதான் மனிதகுல மேம்பாட்டுக்கு ஆதாரமாக இருக்கிறது. மரபிற்கும் நவீனத்திற்குமான போராட்டமே ஒட்டுமொத்தச் சமூக வளர்ச்சிக்கு அடிப்படை. இது பண்பாடு, பொருளாதாரம், வரலாறு போன்ற பல்வேறு கூறுகளின் அடிப்படைகளைக் கொண்டது.

பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களைப் புறக்கணிப்பது தவிர்க்கவியலாத நடைமுறைச் சிக்கல். மிகப் பிரபலமான திருக்குறள் ஒன்று; 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு'. இது ஒரு நேரடியான சொல்லாட்சி (direct statement). ஒருவன் எந்த நன்றியையும் மறந்துவிடலாம், ஆனால் (பெற்றோர்) செய்ததை மறந்து போகும் மகர்க்கு உய்வில்லை என்கிறான் வள்ளுவன். மகர் என்றால் மக்கள் என்ற அர்த்தம் இல்லை என்பதே எனது புரிதல். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னால் பிள்ளைகள் பெற்றோர் பிரச்சனை எவ்வளவு இருந்திருந்தால் இதுகுறித்து ஒரு தனிக் குறள் எழுதியிருப்பான் என்று வியக்கிறேன். சங்கத்தை ஆராயும் நண்பர்களுக்குப் பெற்றோர்-பிள்ளைகள் இடையே உருவாகும் முரண்பாடுகள் தொடர்பாக நிறைய சான்றுகள் கிடைக்கலாம்.

ஆனால், நமது சமகாலத்தில், இந்தப் பெரும் பிரச்சனையை வெறுமனே 'ரொமாண்டிசைஸ்' செய்து ஏளனமாகக் கடந்துவிடுகிறோம் அல்லவா? ஆனால் அறிவுலகம் இதை மிகவும் முக்கியப் பிரச்சனையாகப் பார்க்கிறது. அடிப்படையில் எவ்விதமான 'ரொமாண்டிசைசேசன்' செயல்பாடுகளும் உளவியல்ரீதியாக நமக்கு எள்ளளவும் உதவாது. எதுவும் கடந்து போகும் என்று நாம் பிரச்சனைகளை, வலிகளை நேர்மறைச் சிந்தனை என்ற பெயரில் வெறுமனே விட்டுவிட முடியாது. இதுவொரு புறவய ஆறுதல் மட்டுமே. பிரச்சனை இருப்பவர்களுக்கு இது நன்றாகவே புரியும். நண்பர்களுக்காக, உறவினர்களுக்காக, சமூகத்திற்காக ஏன் வெற்று கௌரவத்துக்காகக் கூட 'எல்லாம் கடந்து போகும்...' என்று சிரித்துக்கொண்டே சொல்வார்கள். ஆனால் பிரச்சனைகள், வலிகள் என்பன நினைவுகளால்

ஆனது.

மனம் ஒரு மிகப் பெரிய தொல்லியல் நூலகம். லட்சக்கணக்கான நியூரான்களின் அலமாரிகளில் அவ்வகையான நினைவுகள் நினைவுப் புத்தகமாய்ச் சேகரமாகிப் பத்திரமாக இருக்கும். ஏதேனும் ஒரு ஏற்ற சூழலுக்குக் காத்திருக்கும் நினைவுகள் அவை. அந்த நினைவுகள் வெளிப்படும்போது வாழ்வைச் சின்னாபின்னப்படுத்திவிடும். இது எதிர்மறை எண்ணம் அல்ல. மாறாக இதைச் சரி செய்ய அறிவியல்பூர்வமான வழிகள் உண்டு என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இளைய தலைமுறை அனைத்தையும் பழைய தலைமுறையிடம் பெற்றுக்கொண்டு வளர்ந்தாலும் அவற்றை நம்ப மறுக்கிறது. புதிதாகக் கண்டுபிடிப்பதாக நம்பிக்கொண்டு மிகப் பழைய அறிவைச் சென்று சேருகிறது. இதன் உளவியல் என்ன? ஆனால் தலைமுறை தலைமுறையாக ஒரே தொழிலைச் செய்துவரும் குடும்பத்தின் இடைவெளிச் சாத்தியம் என்ன? உலகமயமாக்கலுக்குப் பின்னான புறவய அதிர்வுகள் ஒரு குழந்தையை எப்படி பெற்றோரிடமிருந்து ஒட்டுமொத்தமாகப் பிரித்தது?

தலைமுறை இடைவெளியின் ஆதார அலகு என்பது முரண்பாடுதான். அந்த முரண்பாடு, ஒரு குழந்தைக்கு அதன் வளர்ச்சிப்போக்கில் தன்னிலிருந்து வரும் சிக்கலா அல்லது புறவயத்தின் கட்டாயத் திணிப்பா? நான் ஆரம்பத்தில் எழுப்பிய சில கேள்விகளைப் போல எனக்குள் தொடர்ந்து கேள்விகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. இந்தக் கேள்விகளை நீங்களும் உங்கள் புரிதலின் வகையில் கேட்டுக்கொள்ளுங்கள்.

தலைமுறை இடைவெளி என்ன என்பதை விளக்கும் தன்மையே குழப்பத்தை மனதளவில் உருவாக்கும். போராட்டம் என்ற சொல்லிற்கு என்ன அர்த்தம் என்பதை எப்படி விளக்குகிறார்கள் என்பது போலத் தலைமுறை இடைவெளிக்கும் விளக்கம் பல்வகைகளில் உருவாக்கி வைக்கப்படுகிறது. 'ஜல்லிக்கட்டு' தொடர்பாகத் தமிழ்நாட்டில் நடந்த போராட்டம் பற்றியும் அதன் செயல்பாட்டுக் கருத்துரை எவ்வகையில் தமிழர்கள் இடையே உருவாக்கிப் பரப்பப்பட்டது என்பது பற்றியும் ஊடகத்தின் பங்கு இதில் எவ்வளவு என அனைத்தையும் சீராய்ந்து பார்த்தால் தலைமுறை இடைவெளி பற்றிய மிகச் சிறந்த புரிதல் நமக்குள் உருவாகக்கூடும். மேலும் போராட்டம் என்றால் என்பதைப் போலப் பல்வேறு சொற்சித்திரங்களின் ஆய்வுகளை நாம் புரிந்துகொள்ள இவ்வகையான ஆய்வு உதவிகரமாக இருக்கும்.

நிற்க. தலைமுறை இடைவெளி என்றால் என்ன என்கிற கேள்விக்கு முறையான ஒரு விளக்கத்தைப் பார்க்கலாம்;

01. தலைமுறை இடைவெளி என்பது ஒற்றைத் தன்மையானது அல்ல. அது பெற்றோர் குழந்தைகளுக்கு இடையிலான பிரச்சனை மட்டும் இல்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

02. தலைமுறை இடைவெளி பிரச்சனை என்பது வரலாற்றுரீதியில் பல்வேறு அடுக்குகளைக் கொண்டுள்ளது. ஒரு சமுதாயத்தில் முக்கியமான தலைமுறை இடைவெளிப் பிரச்சனை என்பது அதன் பள்ளிகளில் உள்ளது. ஆசிரியர் மாணவர் இடையே இருக்கும் தலைமுறை இடைவெளி, போலவே சக மாணவர்களுக்கு இடையேயான தலைமுறை இடைவெளி, மாணவர் மாணவிகளுக்கு இடையேயான தலைமுறை இடைவெளி என்று இதன் தாக்கம் பல்வேறு வகைகளில் உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

03. சமுதாயத்திற்கும் அரசுக்கும் இடையேயான தலைமுறை இடைவெளி என்பது பெரும் குழப்பமும் சிக்கலுமாய் இருக்கிறது. அதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள நமக்குப் பெரும் திறனாய்வுத்துறை தேவைப்படுகிறது. தனிமனிதச் செயல்பாடுகள் எவ்வாறு அரசு நிர்வாகத்தை (state administration) பாதிக்கின்றன என்பது பற்றிய அறிவு தேவைப்படுகிறது. எடுத்துக்காட்டுக்கு, ஒரு மாவட்ட ஆட்சியரின் பதவிக்கு நேரடியாகத் தேர்வெழுதி வரும் ஒரு இளைஞருக்கும்



ஏறத்தாழ இருபத்தி ஏழு வருடம் அந்தத் துறையில் பணியாற்றி பதவி உயர்வு பெற்று வரும் ஒரு மனிதருக்கும் இடையேயான பிரச்சனைகள் தலைமுறை இடைவெளி பற்றிய அடிப்படையில் உருவாகும். இதையே அனைத்து அரசுத் துறைகளுக்கும், தனியார் துறைகளுக்கும், பெரிய கார்பரேட் நிறுவனங்களுக்கும் பொருத்திப் பார்க்கலாம். போலவே, சாதி, மதம், இனம் மற்றும் பொருளாதார நிலைகளில் இருக்கும் தலைமுறை இடைவெளியைத் தனித்தனியாக விவாதிக்க வேண்டியிருக்கிறது.

சமுதாயத்தின், ஒரு நாட்டின் செயல்பாட்டு அமைப்பு *(executive structure)* ஒருவேளை சரியாக இருக்கலாம். ஆனால் அதனைச் செயல்படுத்தும் மனிதர்களின் புரிதல்தான் பல்வேறு சிக்கல்களை உருவாக்குகிறது என்று புரிந்துகொள்கிறேன். மனித இனம் பாழாகிக்கொண்டிருக்கிறது என்பது சமகாலப் பெரும் பிரச்சனை அல்லவா? ஆனால் ரூமியின் வாக்கியம் ஒன்றை நினைவுகூர்கிறேன்; எங்கு பாழ்மை *(ruin)* இருக்கிறதோ அங்கு ஒரு பொக்கிசம் இருக்கும் என்கிற நம்பிக்கை உண்டு. நம்பிக்கை என்பது ஒரு பெரும் தத்துவம்.

04. சமகாலத்தில் மிகப் பெரிய தலைமுறை இடைவெளி பிரச்சனை என்பது ஊடகத் துறையில் உருவாகி இருக்கிறது. உலகளாவிய செய்தித் துறை என்பது கடுமையான வலுவச் சிக்கல் *(power issues)* மற்றும் அடையாளச் சிக்கல் *(identity issues)* ஆகியவற்றில் மாட்டிக்கொண்டு ஒட்டுமொத்த மனித இனத்தையும் பாழடைத்துக்கொண்டிருக்கிறது. இதன் முன்னால் உலகின் ஒட்டுமொத்த அரசியல் நிர்வாகமும் வலுவமும் மண்டியிட்டுக் கிடக்கிறது என்று சொல்வதில் தயக்கமேதும் இல்லை.

05. பொதுவாக தலைமுறை இடைவெளியை இன்னும் எளிமையாகப் புரிந்துகொள்வது எப்படி என்றால், இந்த இடைவெளி என்பது இரண்டு வெவ்வேறு வகையான தலைமுறைகளின் நம்பிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளைப் பிரித்து *(separate)* வைக்கிறது. அதாவது, குறிப்பாக, இளைய தலைமுறைக்கும் மூத்த தலைமுறைக்கும் பொதுவான நம்பிக்கைகள், செயல்பாடுகள் மற்றும் விருப்பங்களைப் *(taste)* பிரித்து விவரிப்பதைத் தலைமுறை இடைவெளிகளில் ஒன்று எனலாம். சமகாலத் தலைமுறை தரவுகளின் *(data)* குழந்தைகளாய் இருக்கிறது. உலகின் மிகச் சிறந்த அறிவுஜீவிகளில் ஒருவரான ஆல்ப்ரட் எய்ன்ஸ்டின் கூற்றைத் தலைப்பிலேயே பார்த்தோம் அல்லவா? கண் முன்னால் அது நடந்துகொண்டிருக்கிறது. தொழில்நுட்பம் மனிதர்களுடைய உரையாடல்களை தடுத்துக்கொண்டிருக்கிறது. மிகப்பெரிய முட்டாள் தலைமுறையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது உலகம்.

தலைமுறை இடைவெளி எனும் சிக்கல் மிகுந்த பிரச்சனையை நீங்கள் புரிந்துகொள்வதற்கான சிறிய அறிமுகம் இது. நிறைய தேடித் தேடிப் படித்துணர்ந்து கொள்ளுங்கள்.

கடைசியாக, எதுவும் கடந்து போகும் என்ற நிலை உங்கள் புரிதலிலிருந்து உங்களுக்குள்ளிருந்து உறுதியுடன் வெளிவந்ததா அல்லது உங்கள் மூளையின் மீதானவொரு புறவயச் செருகலா? சிந்தியுங்கள் தோழமைகளே. ■

ந.சிவநேசன்

குறும்பு தெறிக்கும் நிமிடங்கள்

நூல் : தேவதையின் அட்டூழியங்கள்
ஆசிரியர் : பிரபுசங்கர்.க

கவிஞரது முந்தைய தொகுப்புகளைப் போலவே இந்தக் கவிதை நூலும் மானுட வாழ்வின் தனிப்பக்கங்களை ஆராய்ந்திருக்கிறது. இம்முறை கவிஞர் இல்லற வாழ்வில் அன்றாடம் நடக்கும் சிறுசிறு மகிழ்வுத் தருணங்களையும் தம்பதிகளுக்கிடையே நிகழும் குறும்பு தெறிக்கும் நிமிடங்களையும் அப்படியே படம்பிடித்துக் கவிதையாக்கி உள்ளார்.

ஒவ்வொரு கவிதையிலும் போற்றுவது போல் போற்றி இலைமறை காயாகத் துணைவியாரைக் கிண்டலும் செய்திருக்கிறார். வம்பு இழுத்துக் கேலி செய்து இறுதியில் நெகிழ்வான காதல் முகிழ்வதாகவும் மாற்றிவிடுகிறார்.

மகன்களோடு சேர்த்துப் போகிறபோக்கில் சாப்பிட வாங்கடா எனக் கணவனையும் சேர்த்து விளிப்பதாகட்டும்.. திருமண நாளை மறந்துவிட்டு விழுப்புண் பெறுவதாகட்டும்.. பீரோவின் பெரும்பகுதியைத் துணைவியின் உடைகளே ஆக்கிரமித்துக்கொள்ளும் அவஸ்தையாகட்டும்.. தம்பதியர் ஒருவரையொருவர் மாற்றி மாற்றி வாரிவிடுவதாக அமைந்திருக்கும் வரிகளினால் படித்து முடிக்கும் வரை நம் இதழோரம் மென்நகை பூத்துக்கொண்டே இருக்கிறது.

ரோபோ கண்கள் மற்றும் கண்காணிப்பு கேமிராக்கள் கவிதைகள் கணவன் அறியாத நேரத்தில் அவன் அலைபேசியை எடுத்து நடத்தையைக் கண்காணிக்கும் மனைவியைப் பற்றியவை. ‘அட.. நம்ம வீட்டிலும் இதே நிலைமைதான்பா..’ எனக் கவிஞரைப் பார்த்துக் கூவச் சொல்கிறது மனது.

இதேபோல் உணவகத்தில் முதலில் நாம் ஆர்டர் செய்பவற்றை வீம்பாக மறுத்துவிட்டு இறுதியில் நம்முடைய உணவை ஆக்கிரமிக்கும் விரல்களை வேறு வழியற்றுத் தேமேயெனப் பார்த்துக்கொண்டிருக்கும் வாழ்வைக் கூறுகிறது உணவகம் செல்லும் தேவதைகள் கவிதை.

தொகுப்பு நெடுகிலும் அநாயாசமாக நடைமுறை வாழ்வின் நகைச்சுவையை அள்ளித் தெளித்து நெகிழ்ந்து பின் சிணுங்கி சிணுங்கி பின் நெகிழ்ந்து கொஞ்சிக்கொள்ளும் இல்லற உறவின் திகட்டாத வாழ்வை அப்படியே நகலெடுத்துத் தருகிறார் கவிஞர்.

பொதுவாக வாசிப்பு தனிமையில் நிகழ்வதே நல்லது. ஆனால் இத்தொகுப்பு கணவனும் மனைவியுமாக இணைந்து படித்து இரசித்துச் சிரித்து ஒருவரையொருவர் ‘இது நீதான்.. இது நீயேதான்’ எனக் கேலி செய்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவதாக அமைந்துள்ளது. தேவதையும் இராஜகுமாரனுமாக அன்றாடங்களின் துயரம் மறந்து நெகிழும் அவ்வேளையில் கடைசிக் கவிதையில் சொல்வதைப் போலத் தாம்பத்திய தேசத்தில் உதிப்பதைத் தவிர வேறென்ன வேலை காதல் சூரியனுக்கு?

யாரேனும் துணையின் பிறந்தநாளை அல்லது மணநாளை மறந்துவிட்டால் இந்நூலைப் பரிசளித்துத் தப்பித்துக்கொள்ளலாம். ■

பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

● ஜின்னா அஸ்மி

எங்கே இவ்வளவு அவசரமாக
கிளம்பிக்கொண்டிருக்கிறாய்
என்றபடியே வெளியே வந்தான்
அவன்

புத்தாண்டு வருகிறது
அதைக் கொண்டாட
தயாராகிக்கொண்டிருக்கிறேன்
என்றேன்

வாழ்வை
கொண்டாடத் தெரியாதவன்தான்
வருடங்களை
கொண்டாடிக்கொண்டிருப்பான்
என்றான்

புத்தாண்டை வரவேற்பதில்
என்ன தவறு?
எனக்குப் புரியவில்லையே
என்றேன்

வருடங்களை வரவேற்பது
வேடிக்கையாக இருக்கிறது
காலம் நகர்வதை
உன்னால் தடுக்க முடியுமா?
ஓ.. உன் இயலாமையைத்தான்
நீ கொண்டாடுகிறாயா?
என்று சிரித்தான்

உனக்கு எப்போதும்
எதிர்மறை எண்ணங்கள்தானா
என்றேன் கோபமாக

நேர்மறையில் நீ இருந்தால்
எதிர்மறை எனக்கு ஏன் வருகிறது
என்றான்
அவன் மேலும் சொன்னான்
புத்தாண்டுக் கொண்டாட்டத்தை
புறந்தள்ளிவிட்டு
கடந்தாண்டு என்ன சாதித்தாயோ
அதைக் கொண்டாடு..

உன் சாதனைகளைக் கொண்டாடு..
கொண்டாட்டங்களே சாதனை
என நினைக்காதே
செயல் என்பது கூட
செய்து முடிக்கும் வரை
வெறும் சொல்தான்
என்பதை மறவாதே
என்று சொல்லிவிட்டு மறைந்தான்

அவன் இன்னும் சொல்வான்

ஜெ.காமாட்சி காயத்ரி,
முதுகலைத் தமிழ்,
திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம்.

அகவுலகின் மொழி

மௌனிப் படைப்புகள் (முழுத்தொகுப்பு) - ஓர் வாசிப்பு

"மௌனியின் தனித்துவம், புதுமைப்பித்தனின் தனித்துவம் போலப் பூரணமானது -தனியானது - பழகப் பழகத் திருப்தி தருவது" என்று க.நா.சு கூறுவதின் உண்மைத் தன்மை மௌனியின் 24 கதைகளையும் படித்ததின் விளைவாகப் புரிந்தது. மௌனி எனக்கு 2021 டிசம்பரில் திராவிடப் பல்கலைக்கழகப் பொது நூலகத்தில், 'மௌனி சில நினைவுகள்' என்ற சுந்தர ராமசாமியின் பாண்டிச்சேரி மௌனிக் கருத்தரங்கில் ஆற்றிய உரையின் எழுத்தாக்கத்திலிருந்து அறிமுகமானார்.

மௌனி குறித்தான என் தேடலுக்குப் பிரதானம் அவர் பெயர்தான். இப்பெயரை அவருக்கு இட்டவர் பி.எஸ்.ராமையா. "மௌனி" - தமிழிலக்கணப்படி இது ஓர் கட்டளைச்சொல், மௌனித்திரு என்ற சொல்லைப் பிரிக்க முதல் கிடைக்கும் பகுதி என்று கொள்ளலாம். மௌனம், வெளி போன்ற சொல்லாடல்கள் எனக்குப் புரியத் துவங்கிய காலகட்டத்தில் மௌனி அறிமுகமாகியதால் அனிச்சையாகவே மௌனி மீது ஈடுபாடு அதிகமாகியது.

சு.ராவின் உரையில் மௌனி பற்றிய அவதானிப்புகள் அற்புதமானவை. "தேடிப் படிக்கணும். ஹி எஸ் எ கிரேட் ஆதர்" என்று மௌனியைப் பற்றிக் க.நா.சு சொல்லியதை சு.ரா நினைவுகூர்வதும், "வரிகளுக்குப் பின்னாலிருந்து சிறிது வெளிச்சம் வருவது போல் இருந்தது. என் குகைக்குள் தைரியமாக வா என்று அழைக்கிறார் மௌனி. மேலும் சில தடவை படித்தபோது மௌனி தன் மார்போடு என்னை அணைத்துக்கொள்வதை உணர்ந்தேன்" என்று சு.ரா சிலாகிப்பதும் எனப் பலவிதமாக அவ்வுரை மௌனியை எனக்கு நெருக்கமாக்கியதாக உணர்ந்தேன்.

உரையின் எழுத்தாக்கத்தை வாசித்தபின் மௌனியை நூலகத்தில் தேடினேன். துரதிருஷ்டவசமாக நூலகத்தில் மௌனி கிடைக்கவில்லை. இணையத்தில் படிக்கலாம்தான். ஆனால் க.நா.சு, சு.ரா போன்றோரின் மதிப்பீடுகள் மௌனியைக் காகிதப் பிரதியாகத்தான் படிக்க வேண்டும் என்று தூண்டியது. மௌனி அறிமுகமாகி ஒரு வருடம் கழித்து (05/12/2022) கைகளுக்குக் கிடைத்தார்.

மௌனி தன் வாழ்நாளில் எழுதிய மொத்தக் கதைகளின் எண்ணிக்கை 24. எழுபத்திரண்டு ஆண்டுகளில் 24 கதைகள் மட்டுமே எழுதிய இலக்கியவாதியைத் தமிழுலகம் கொண்டாடுவது ஆச்சர்யத்திற்குரியது. அக்கதைகளின் போக்கும் புதுமைத்தன்மையுமே அதற்குக் காரணம்.

புதுமைப்பித்தன் மௌனியைச் "சிறுகதையின் திருமூலர்" என்று குறிப்பிடுவது சற்று மிகையாகத் தோன்றுகிறது. "மௌனியைப் புதுமைப்பித்தன் 'சிறுகதையின் திருமூலர்' என்று குறிப்பிட்டது, திருமூலரைப் பற்றி ஐதீகமாகச் சொல்லப்படுவது போல, மௌனியும் ஆண்டுக்கொரு கதை எழுதினவர்

என்பதற்காக அல்ல என்று, அவ்வொற்றுமை இல்லாததால் இவ்விடத்தில் கவனிக்கத்தக்கது. திருமூலர் மிக எளிய பதங்களையும் பதச் சேர்க்கைகளையும் கொண்டு உயர்ந்த தத்துவங்களைச் செய்யுளில் வடித்தாற்போல மௌனியும் கனமான விஷயங்களை ஏற்க மறுக்கிற மெலிந்த சொற்களில் உன்னத அனுபவங்களை எழுப்பியிருக்கிறார் என்ற ஒற்றுமைக்காகவே புதுமைப்பித்தன் அப்படிச் சொல்லியிருக்கலாம்" என்று தருமு சிவராமு "மௌனி கதைகள் தொகுப்பு ஒன்று" முதல் பதிப்பிற்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

புறவுலகின் பிரச்சனைகளையும், புறவயப்பட்ட காட்சிகளையும் பிறர் எழுதிக்கொண்டிருந்தபோது, மனித மனதின் அகவுலகின் உணர்ச்சிகளை மொழிப்படுத்தியவர் மௌனி. அவர் காலத்து மற்ற கதாசிரியர்களின் வாக்கிய அமைப்பிற்கும் மௌனியின் வாக்கிய அமைப்பிற்கும் பெரும் வித்தியாசமுள்ளது. மனித மனதைப் புரிந்துகொள்ள முடியாதது போல், மனித மனதைப் பிரதிபலிக்க முயன்றிருக்கும் மௌனியின் வாக்கிய அமைப்பும் சொற்தேர்வும் புரிந்துகொள்ளக் கடினமானது.

"எதிரே தோன்ற முடியாவிட்டாலும் அடிமடியில் புகுந்து பேசுவது போன்றிருந்தது பேச்சுகள். நினைக்க நினைக்க மனது பீதி அடைந்தது. அவனை மறந்துவிட முடியுமென்பதற்கில்லை. மறக்க வேண்டியதை அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்டு இருக்க வேண்டியிருப்பதால் மறப்பதை ஞாபகமெனத்தானே கொள்ள முடிகிறது.." என்று அத்துவானவெளி கதையில் வருகிற மறத்தல்-ஞாபகம் சார்ந்த முரண் வாக்கிய அமைப்பை நிதானிக்கலாம்.

1936இல் ஏன், குடும்பத்தேர், கொஞ்சதூரம், காதல் சாலை, பிரபஞ்ச கானம், சுந்தரி ஆகிய ஆறு கதைகள் வெளிவந்துள்ளன. மிஸ்டேக், இந்நேரம்...இந்நேரம், அழியாச்சுடர், மாறுதல், நினைவுச்சுழல், சிகிச்சை, மாபெரும் காவியம், எங்கிருந்தோ வந்தான், மாறாட்டம் ஆகிய 9 கதைகள் 1937-1938இல் வெளிவந்தன. 1948இல் மனக்கோலம், நினைவுச்சுவடு வெளிவந்தன. சாவில் பிறந்த சிருஷ்டி(1954), குடைநிழல்(1959), பிரக்ஞை வெளியில்(1960), மனக்கோட்டை(1963), உறவு பந்தம் பாசம்(1968), அத்துவானவெளி(1968), தவறு(1971) ஆகியவை 17 ஆண்டு காலப்பகுதியில் எழுதப்பட்டவை. ஆக, மௌனி தொடர்ந்து எழுத்தில் ஈடுபடவில்லை; பல கதைகள் அதிக கால இடைவெளிக்குப் பிறகே எழுதப்பட்டுள்ளன என்பதை அறியலாம்.

சில கதைகள் நடப்பியல் எதார்த்தத்தை மீறுவதாக அமைந்துள்ளன. கதைகளில் இறப்புகள் திடீரென நிகழ்பவையாக உள்ளன. நாடகப் பாங்கிலான மரணங்கள் அவை. உறவின் இழப்பு, திடீர் பிரிவு, மனக்குமைச்சல் எனப் பலவாறாக மனம் கவலையில் உழன்று அதிலிருந்து விடுபட மன அமைதியை நோக்கிய தேடலாகப் பல மரணங்கள் நிகழ்கின்றன. ஏன், கொஞ்ச தூரம், பிரபஞ்ச கானம், எங்கிருந்தோ வந்தான், நினைவுச் சுழல், சாவில் பிறந்த சிருஷ்டி, மனக்கோட்டை போன்ற கதைகளை உதாரணமாகச் சொல்லலாம். சிகிச்சை, காதல் சாலை, மாறுதல் போன்ற கதைகளில் மரண நிகழ்வானது வேறு சாயலில் உருப்பெற்றுள்ளது.

உண்மை எதார்த்தத்தை, புறவுலகைக் கடந்த நனவு வாழ்வைத் தவிர்த்த கனவு வாழ்வின் வர்ணிப்புகள் அத்துவான வெளி, தவறு, எங்கிருந்தோ வந்தான் போன்ற கதைகளில் இடம்பெறுகின்றன. சுந்தர ராமசாமியின் ஜே.ஜே.சில குறிப்புகள் புதினத்தில் சம்பத் என்ற பாத்திரத்தின் கனவை விவரிக்கும் பகுதிக்கும் (பக்.எண் -136,137) இக்கதைகளுக்கும் கனவு விவரிப்பில் ஒற்றுமை இருப்பதாகப் படுகின்றது.

சில கதைகள் சுயத்தின் உறுதியற்ற தன்மையை ஆராய்வதில் அதிக சிக்கலும் நுட்பமும் உடையனவாக இருக்கின்றன. பிரதான கதைப்பாத்திரங்கள் கதைகளினூடே இரட்டைப் பிம்பம் கொண்டவையாக விளங்குகின்றன. அழியாச்சுடர், சாவில் பிறந்த சிருஷ்டி, அத்துவானவெளி, பிரக்ஞை வெளியில் போன்ற கதைகளில் இவ்விரட்டைத் தன்மையைக் காணலாம்.

சில கதைகள் தத்துவச் சரடுகளால்

விவரிக்கப்பட்டுள்ளன. மனித அகத்திலிருந்து உருவானவையே தத்துவங்கள். அத்தத்துவங்களைக் கொண்டே மனித மனத்தின் அகநிலைச் செயல்பாடுகளைத் தரிசனம் செய்ய முயல்கிறார் மௌனி. பெண்கள் பற்றிய அவர் சித்தரிப்புகள் உயர்வானதாக உள்ளன. ஓர் அழகு மோகினியாகவோ, மாயவுருக் கொண்டவளாகவோ, பொறுப்பற்றவளாகவோ இல்லாமல் பிரபஞ்சத்தின் பெரும்சக்தியாக, அடிமைத்தளைகளில் தான் கட்டப்பட்டிருப்பதை நன்கு அறிந்தவளாக, ஆன்மத்தேடல் புரியும் அறிவுடையாளாக உருக்கொண்டுள்ளாள். பிரபஞ்ச கானம், கொஞ்சதூரம், தவறு, குடும்பத்தேர், ஏன், குடை நிழல் ஆகிய கதைகளில் இச்சித்தரிப்பைக் காணலாம். உறவு பந்தம் பாசம் என்னும் கதையில் பெண்ணே (கௌரி) தனக்காக வாதம் செய்வதாகவும் மனப்போக்குகளின் நடப்பியல்புகளைப் பரிபூரணமாகச் சித்தரிப்பதாகவும் கதைப் பாத்திரத்தை உருவாக்கியுள்ளார். மேலும் குடைநிழல், உறவு பந்தம் பாசம், நினைவுச்சுவடு ஆகிய கதைகளில் தேவதாசிப் பெண்களின் மனவோட்டங்களை எழுதும் முயற்சியில் மௌனி வெற்றி பெற்றுள்ளார் என்றுதான் சொல்ல வேண்டும்.

அத்துவானவெளி என்ற கதையின் இறுதியில் இடம்பெறும் சுடுகாட்டுப் பகுதி இன்றைய மாந்திரீக(Fantasy) எழுத்து நீட்சியின் பிரதானமாகக் கருத இடம் இருக்கிறது. எல்லாக் கதைகளும் மிக ஆழமாக அகநிலை எண்ணங்களைப் பேசுவனவாய் மட்டுமல்லாது சுந்தரி, மிஸ்டேக், இந்நேரம்.. இந்நேரம், சிகிச்சை, மாறாட்டம் போன்ற கதைகளில் நடப்பியல்சார் நிகழ்வுகளைப் பகடித் தொனியில் உருவாக்கி இருக்கிறார். எழுதுவதில் அவருக்குக் கிடைத்த பேரானந்தத்தை, சிருஷ்டிப்பதில் கிடைக்கும் உயர் மகிழ்வைச் சொல்வதற்கு "மாபெரும் காவியம்" என்ற கதையையும், அவர் மனம் ஒவ்வாத எழுத்தாளர்களை விமர்சனம் செய்ய "பிரக்ஞை வெளியில்" என்ற கதையையும் பயன்படுத்தியுள்ளார். கதையின் போக்கிலேயே அக்கருத்துகளைச் சொல்லியிருப்பது சிறப்பு. எழுத்தைப் பற்றி மாறுதல் (பக்.எண்-98), எங்கிருந்தோ வந்தான் (பக்.எண்-138) ஆகிய இரு கதைகளிலும் 'தலையெழுத்தையா மாற்றி எழுதப் போகிறேன் இல்லை தலை எழுத்தைத்தான்' என்று ஒரே மாதிரியான வாக்கிய அமைப்பைப் பயன்படுத்தியுள்ளார்.

மௌனியின் கதைகளில் மற்றுமோர் சிறப்பம்சம் என்னவெனில், நாம் கதையென நம்புகிறதை உடைத்தெறிவது. இதுதான் கதை என நம்மால் அறுதியிட்டுச் சொல்ல முடியாதபடி கதையமைப்பை வடிவமைத்திருக்கிறார். மௌன இருள்வெளி, நடைப்பயிற்சி, கடற்கரை, காதல் பிரிவு, பிரபஞ்ச நிசப்தம், சுயஉரையாடல், எழுத்தின் விளைவு போன்றவை குறித்துப் பெரும்பாலும் கதைகளில் எழுதியுள்ளார். அகம் × புறம், பிரிவு × சேர்வு, காதல் × வெறுப்பு, ஆண் × பெண், மனைவி × காதலி, காதல் × காமம், குடும்பம் × அலுவலகம், ஒளி × இருள், வாழ்வு × மரணம், கிராம வாழ்வு × நகர வாழ்வு, தெரிந்தவர் × தெரியாதவர், உள்மனம் × வெளிச்செய்கை, பெருமிதம் × பேதைமை, பண்ணையார் × தொழிலாளி என இருஅமைவு முரண்களில் கதைக்களம் நகர்கின்றது.

கதைகள் கவித்தன்மையுடன் விளங்குகின்றன. உவமைகளும், படிமங்களும், குறியீடுகளும் இலகுவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆழமான கதையம்சம் என்றல்லாது சாதாரணமான கதையமைப்புகளில் ஒரு ஜோதியை ஜொலிக்கச் செய்கிறார் மௌனி. மௌனியின் கதைகள் புரியாதவைகள் அல்ல, மாறாக பழகப் பழக வாசகரின் மூளையை வியாபித்துப் பைத்தியமாக்கும் தன்மை கொண்டவை. இக்கதைகள் அகநிலை எண்ணங்களை ஒருவாறு தோலுரித்து அதற்கு வேறொரு பரிமாணத்தைத் தருகின்றன. இசையும், பெண்மையும், மௌனமும், பிரபஞ்சமும் கதைகளில் தனி இடத்தைப் பெற்றுள்ளன. வெளிநோக்கிய தேடல் கொண்டோருக்கு மௌனி என்றும் நெருக்கமானவரே.

"கூறியவற்றின் பொருளைக் காட்டிலும் கூறப்படாததில் அடங்கியுள்ள அர்த்தங்களை நோக்கிச் செல்வதற்கான வெளிகளை வாசகனுக்கு உருவாக்கியவரும் அவரே" - கே.என்.செந்தில்.

சிறிதரன் கிரிசாந்தன்,
விரிவுரையாளர், இசைத்துறை,
சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

தேத்தாத்தீவு கிராமமும் வசந்தன் கூத்தும்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள எழில்மிகு கிராமங்களில் ஒன்றே தேத்தாத்தீவு கிராமமாகும். மீன் பாடும் தேன் நாடாம் மட்டு நகரின் தென்திசையில் மட்டக்களப்பு கல்முனை வீதியில் 24 சதுர கிலோ மீட்டர் தொலைவில் இவ்வளம் மிகுந்த கிராமம் அமைந்துள்ளது.

ஈழத்துப் பாரம்பரியக் கலையின் வளர்ச்சிக்குக் கிராமங்களின் பங்களிப்பு முக்கியமானதொன்றாகும். இக்கிராமங்களில் மக்களுடைய தொழிலோடும் சமயத்தோடும் சமூக வாழ்வியலோடும் பிரிக்க முடியாதவாறு கலைகள் அமைந்துள்ளன. அந்த வகையில் தேத்தாத்தீவு கிராமமும் பாரம்பரியக் கலை வடிவங்களை நிகழ்த்துகை கண்ட பிரதேசமாக விளங்குகின்றது. இவ்வூரில் காணப்படும் பாரம்பரியக் கலைகளாக வசந்தன் கூத்து, நாட்டுக்கூத்து, மகிடி, கொம்புமுறி, கும்மி, கோலாட்டம் போன்ற கலை வடிவங்கள் காணப்படுகின்றன. பல பாரம்பரியக் கலை வடிவங்கள் காணப்பட்டாலும் இவ்வூர் மக்களால் முதன்மையாக ஆடப்படும் கலைவடிவமாக "வசந்தன் கூத்து" காணப்படுகின்றது

வசந்தன் கூத்து

தேத்தாத்தீவு கிராமத்தில் வசந்தன் கலையானது 1900ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில் தோற்றம் பெற்றிருக்கலாம் என்று கூறப்படுகின்றது. ஆனால் அதற்குரிய சரியான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இவ் வசந்தன் கூத்தானது சித்திரை, வைகாசி, ஆனி போன்ற மாதங்களிலே சிறப்பாக ஆடப்படுகின்றது.

சமூக, சமய பண்பாட்டுப் பின்னணிகளில் இக்கூத்து மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. வசந்தன் கூத்தில் பெரிதும் பங்கு கொள்பவர்கள் தோற்றத்திலும், ஆற்றலிலும், வயதிலும் ஒத்த ஆற்றல் உடையவர்களாகக் காணப்படுவர். இவர்கள் தம் இரு கைகளிலும் ஒரு முழ நீளமும் முக்கால கன அங்குலமுமுடைய இரு தடிகளை வைத்திருப்பர். பாடல் ஓசைக்கும் மத்தள ஓசையின் தாளத்திற்கும் அமைய தன் தடிகளால் ஆடி முறைகளை மாற்றி மாற்றி அடித்து ஓசை எழுப்புவது கண்ணுக்கும் காதிற்கும் இனிய விருந்தாக அமையும். இவர்கள் வட்டமாக நின்று ஆடும்போது தமக்கருகே நிற்பவர்களின்

தடிகளில் மாறி மாறி அடித்தும் ஆடுவர். மேலும் பாடலுக்கும் மத்தள தாளத்திற்கும் இயல்பாகக் காலெடுத்து மிதித்து மேலும் கீழும், பக்கத்திலும் சரித்தும் வளைத்தும், துள்ளியும் குனிந்தும் குதித்தும் பாய்ந்தும் அபிநயம் புரிந்தும் ஆடுவர். ஆடுவோருக்கு நடுவே மத்தளம் அடிக்கும் அண்ணாவியார் நிற்பர். இவ் ஆட்டமுறையில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவெனில் ஆடுவோர் பாடுவதில்லை என்பதாகும்.

தேத்தாத்தீவு வசந்தன் கூத்தில் ஆடை அலங்காரங்கள் மிகச் சிறப்புடையதாகக் காணப்படுகின்றன. அந்த வகையில் தலையில் தடித்த காகித அட்டையால் செய்யப்பட்ட "பூமுடி" அணிந்திருப்பார்கள். பாய்ந்தும், துள்ளியும், குதித்தும் ஆடுவதால் சீருடைபோன்று ஒரே தன்மையினாலான வர்ண கால்சட்டையுடன் இறுக்கமற்ற மேலங்கியும் அணிதல் மரபு. இவை அலங்கார வேலைப்பாடுடையனவாகக் கவர்ச்சியாக இருக்கும். இவர்கள் கையில் பிடித்திருக்கும் கோல்களுக்கும் செந்நிறம் பூசப்பட்டிருக்கும். தடிகளாகப் பெரும்பாலும் முதிரை, பூவரசு, பீச்சு போன்று மரத்தடிகளையே பயன்படுத்தினர். தடிகளைத் தட்டும்போது அவை தட்டலுக்கும், தாளத்திற்கும் ஏற்பக் கலீர் கலீர் என ஒலிக்கும். காலில் சதங்கை கட்டிக்கொள்வர்.

தேத்தாத்தீவு பிரதேசத்தில் 60 வகையான வசந்தன்கள் ஆடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனால் தற்போது இக்கிராமத்தில் 18 வகையான வசந்தன்களே ஆடப்பட்டு வருகின்றன. பிள்ளையார் வசந்தன், எச்சரிக்கை வசந்தன், வசந்தன் பள்ளு, களரி வசந்தன், தேவி வசந்தன், குவாகுயில் வசந்தன், செல்லப்பிள்ளை வசந்தன், முசிற்று வசந்தன், வேளாண்மை வெட்டு செய்கை வசந்தன், ஊஞ்சல் வசந்தன், முத்தமிழ் வசந்தன், குறத்தி வசந்தன், கும்மி வசந்தன், சிங்கி வசந்தன், அனுமான் வசந்தன், கிறுகு வசந்தன் போன்ற வசந்தன் கூத்துக்கள் இக்கிராமத்தில் இன்றும் ஆடப்பட்டு வருகின்றன. ஆடல் தொடக்கத்தில் அண்ணாவியாரால் விருத்தம் பாடி இறை தியானம் செய்யப்படுகின்றது.

அண்ணாவியாரால் பாடப்படும் விருத்தம் -

"சீர்வளரும் புகழ் செட்டி நகருறை
செல்வியார் மேல்

பார் வளர் வயந்தன் பந்தோ டெட்டுமே
பாடுவதற்கு

சுடர் வளர் பருப்பு மேந்திக் குவளையத்
தளைக்க வாழும்

கர் வளர் கருட கும்ப கணபதி பதம்
காப்பாமே"

இவ்விருத்தமானது வசந்தன் கூத்து தொடங்குவதற்கு முன்னர் பாடப்படுகின்றது. கண்ணகி வழிபாட்டுடன் பின்னிப் பிணைந்ததாகத் தேத்தாத்தீவு கிராமச் சிறார்களின் வசந்தன் கூத்து ஆடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் 1900 - 1950 காலப்பகுதியில் இக்கிராமத்தில் வசந்தன் கூத்தைப் பழக்குபவர்களாக முருகன், குழந்தையன், கந்தப்பன், சின்னத்தம்பி போன்றவர்கள் அண்ணாவியார்களாகவும், நெறியாளர்களாகவும் காணப்பட்டனர் என்று தருமரெத்தினம் என்பவர் கூறினார். இதற்குப் பிற்பட்ட காலப் பகுதியாகிய 1950-1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் வே.கணபதிப்பிள்ளை, வா.கோபாலப்பிள்ளை போன்றோர் வசந்தன் பழக்குபவர்களாகவும், ந.கதிரேசபிள்ளை, கறுவத்தம்பி, முருகேசுதம்பி போன்றவர்கள் பாட்டு பாடுபவர்களாகவும் திகழ்ந்தனர்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறுவிதமான கலைஞர்கள் உருவாகிக்கொண்டு வருகின்றனர் என்பதை இவ்வூர் நிரூபித்துள்ளது. அந்த வகையில் 1980இல் இருந்து இன்று வரை வசந்தன் கூத்தினைப் பழக்கும் கலைஞர்களைக் குறிப்பிடும்போது சாமித்தம்பி தெய்வநாயகம், வேலிப்பிள்ளை, இராசரெத்தினம் போன்ற அண்ணாவிமார்களும் கணபதிப்பிள்ளை நாகலிங்கம், தாமோதரம் தர்மன் பக்கப்பாட்டு பாடுபவர்களாகவும் சண்முகம் முருகேசு, காசிப்பிள்ளை இராஜகோபால், வினாசித்தம்பி, வல்லிபுரம் போன்றவர்கள் தற்காலத்தில் வசந்தன் கூத்தைப் பழக்குபவர்களாகவும் உள்ளனர். எவ்வாறாயினும் தேத்தாத்தீவு கிராமத்தில் கடந்த ஆறு வருடங்களாக இக்கூத்து

இடம்பெறவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

கூத்து ஆடத்தொடங்கும்போது முதலாவதாகப் பிள்ளையாரைத் துதிப்பாடும் பிள்ளையார் வசந்தனை ஆடுவர்.

தெந்தின தினை தின தின தினை தினதின

தினதின தினை தனனை

சிந்துர முகனென வந்தால் சரணம்

சீருல வொன்றை மருப்பாய் சரணம்

அந்தமும் ஆதியுமானை சரணம்

ஆறணி வேணியன் ஆனாய் சரணம்

-இவ்வாறு பிள்ளையார் வசந்தன் கூத்து ஆடும்போது பாடப்படுகின்றது. வசந்தன் கூத்தில் கதை இல்லை, ஆனால் ஆடலும் பாடலும் உண்டு. விடிய விடிய நடைபெறும் இக்கூத்தில் மத்தளமும் சல்லாரியுமே வாத்தியங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

வசந்தன் கூத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களும் தீர்வுகளும்

காரணங்கள்

இன்றைய காலப்பகுதியில் தேத்தாத்தீவு பிரதேசத்தில் வாழ்கின்ற சமூகத்தினர் ஆரம்பகால வாழ்க்கைமுறை கட்டமைப்பில் இருந்த பல்வேறு மாற்றங்களையும் புதிய அம்சங்களையும் தங்களுடைய புதிய காலச் சூழலுக்கு ஏற்ற வகையில் மாற்றியமைத்து வாழ்ந்துகொண்டிருக்கின்ற நிலையினைக் காணக்கூடியதாக உள்ளது.

இன்றைய உலக நடைமுறையை நாம் பார்க்கின்றபோது கல்வி என்பது உயர்ந்த நிலையில் வைத்து நோக்கப்படுவதனை நாம் காணலாம். இன்றைய நவீன உலகில் கல்வி வளர்ச்சியின் மூலம் முன்னேற்றப் பாதையினூடாகப் பயணித்துக்கொண்டிருக்கும் மக்களுக்குப் பாரம்பரியக் கலை வடிவங்கள் பற்றிய எண்ணக்கரு அவர்கள் மத்தியில் இரண்டாம் பட்சமாகவே காணப்படுகின்றது.

தேத்தாத்தீவு கிராமத்தில் உள்ளவர்களும் வெளிநாடு செல்லுமளவிற்குத் தங்களது கல்வியறிவை விருத்தி செய்துள்ளனர். அத்தோடு வருடாவருடம் பல்கலைக்கழகங்களுக்கும், கல்வியியல் கல்லூரிகளுக்கும் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு செல்லும். இந்நிலை மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும் பாரம்பரியக் கலை பற்றிய அறிவு இவர்களிடம் இல்லாமை சற்று கவலைக்குரிய விடயமாகவே உள்ளது.

மாணவர்களின் நிலையினை நாம் பார்க்கும்போது அவர்கள் பாடசாலை செல்லும் நேரத்தைத் தவிர்ந்து ஏனைய நேரங்களில்

ரியூசன் வகுப்புக்களுக்குச் செல்வதனை நாம் அவதானிக்க முடிகின்றது. இதனால் அவர்கள் ஓய்வே இல்லாமல் அல்லலுறுகின்றனர். இவ்வாறு இன்றைய இளம் சமூகத்தினர் கல்விசார் நடவடிக்கைகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பதனால் தற்போது பாரம்பரியக் கலை வடிவங்கள் புறம் தள்ளப்படுகின்றன.

பாரம்பரியக் கலையின் வீழ்ச்சிக்குப் பொருளாதாரப் பிரச்சினையும் பாரிய சிக்கலாக இருப்பதினை நாம் காணலாம். சமகாலத்தில் பொருளாதாரப் பிரச்சினையானது எமது நாளாந்த வாழ்க்கையைக் கட்டியெழுப்ப முடியாத இக்கட்டான நிலைக்கு ஈட்டிச் சென்றுள்ளது. இதனால் மக்கள் தங்களுடைய வருமானத்திற்கேற்ற செலவினை மாத்திரமே செய்கின்றனர். இன்று பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி காரணமாக மக்களின் தேவைகளும் அதிகரித்துள்ளன. இதனால் மக்கள் கலை வடிவங்களைச் செயற்படுத்த முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

ஒரு கலை வடிவத்தை நாம் அளிக்கை செய்கின்றபோது அக்கலை வடிவத்தில் உள்ளடக்கப்படுகின்ற ஒப்பனை உடையமைப்பு போன்றவற்றிற்குரிய பொருட்களைக் கொள்வதற்குரிய பொருளாதாரத்தின் தேவை அதிகரித்துக் காணப்படுகின்றமையால் அக்கலை வடிவத்தைத் திறம்பட ஆற்றுகை செய்வதற்குப் பொருளாதாரப் பிரச்சினை மிகுந்த சவாலாக உள்ளது. எமது நாட்டில் நிலவிய உள்நாட்டுக் குழப்பமானது பாரம்பரியக் கலைகளை நிகழ்த்துகை செய்வதற்குப் பெரும் சவாலாகவே இருந்து வந்துள்ளது எனலாம். தேத்தாத்தீவு பிரதேசத்தில் முப்பது வருடமாக நிலவிய உள்நாட்டுக் குழப்பத்தின் காரணமாக இக்கிராம மக்கள் தங்களது வாழ்க்கையினை இழந்தது மட்டுமன்றி இவர்கள் பாரம்பரியமாகப் பேணி வந்த கலைவடிவங்களும் மறைந்து போய்விட்ட நிலை உருவாகியது.

கலை என்பது ஒரு தனிப்பட்டவரின் திறன் அல்ல. பல கலைஞர்களதும் ஒட்டுமொத்த சேர்க்கையே கலை ஆகும். இக்கலையை வெற்றிகரமாக நிகழ்த்துவதற்கு அனைவரதும் ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது. உதாரணமாக, பாரம்பரியக் கலைகளில் ஒன்றான வசந்தன் கூத்தை நிகழ்த்துவதற்கு வசந்தனாடும் சிறார்கள், அவர்களை அழைத்துவரும் பெற்றோர்கள், அண்ணாவிமார், சபையோர், ஒப்பனைக் கலைஞர்கள் எனப் பலரதும் ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது. இவ்வாறு அனைவரினதும் ஒத்துழைப்பினாலேயே இது வெற்றியடைகின்றது. ஆனால் தற்காலத்தில் இப்படியான நிலை இல்லாமல் போய்விட்டது. கூத்து ஒன்றினை அரங்கேற்றம்

செய்கின்றபோது அதனைப் பார்ப்பதற்குப் பார்வையாளர்களே இல்லை என்ற நிலை தற்போது உருவாகியுள்ளது. இவ்வாறான பாரம்பரியக் கலைகளுக்குச் சமூகம் முக்கியத்துவம் அளிக்காமை வேதனைக்குரிய விடயமாகவே உள்ளது.

இன்றைய நவீன உலகில் விஞ்ஞானத் தொழில்நுட்பங்களின் வளர்ச்சி உச்ச நிலையினை அடைந்திருப்பதை நாம் காணமுடிகின்றது. இவ்விஞ்ஞானத் தொழில்நுட்பங்களின் விருத்தியினால் நாளுக்கு நாள் பல தொடர்பாடல் சாதனங்களினதும் பொழுதுபோக்கு முறைகளினதும் அறிமுகம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இதனால் பாரம்பரியக் கலைகளை இன்றைய சமூகத்தினர் மறந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான தன்மையினால் இப்பிரதேச மக்கள் இக்கலை வடிவங்களின்பால் நாட்டம் கொள்வது மிகமிகக்குறைவு என்பது இக்கலைவடிவங்கள் எதிர்கொள்கின்ற வேதனைக்குரிய விடயமாகும்.

இன்று உலகிலுள்ள பல பாகங்களிலும் இயற்கை அழிவுகள் நாளாந்தம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன என்பதனைச் செய்திகள் மூலமாக அறிய முடிகின்றது. இதற்கு தேத்தாத்தீவு பிரதேசமும் விதிவிலக்கல்ல. முன்னைய காலத்தில் பாதுகாக்கப்பட்ட கலைவடிவங்கள் சம்பந்தமான ஏட்டுப்பிரதிகள், கொப்பிகள், பதிவேடுகள் என்பன பலரால் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தது. ஆனால் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களான சூறாவளி, சுனாமி, வெள்ளம் என்பவற்றினால் பல கலை சார்ந்த ஆதாரங்கள் அழிந்துபோயின. இதற்கு உதாரணமாக 2004ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைச் சூறையாடிய சுனாமிப் பேரலையின் தாக்கத்தைக் குறிப்பிடலாம். அத்தோடு குறிப்பிட்ட கலைஞர்களின் மரணத்திற்குப் பின்னர் பாரம்பரியக் கலைவடிவங்கள் சார்ந்த முழுமையான விடயங்கள் பிற்காலக் கலைஞர்களுக்கு அரிதாகவே கிடைக்கப்பெற்றன.

தீர்வுகள்

எந்தவொரு பிரதேசத்தினதும் தனித்துவ அடையாளம் அப்பிரதேச மக்களிடையே காணப்படுகின்ற பண்பாட்டுக் கலாசார விழுமியங்கள் ஆகும். அந்த வகையில் தமிழரின் அடையாளமாக விளங்குவது அவர்களிடத்தே காணப்படுகின்ற கலை வடிவங்கள் ஆகும்.

தேத்தாத்தீவு பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் இன்றைய சூழலில் கல்வி மேலோங்கிக் காணப்படுவதனால் அதற்குச் சமனான முறையில் பாரம்பரியக் கலைகளும் வளர்க்க வேண்டும் என்பதை நாம் ஒவ்வொருவரும் கடமையாகக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையே இச்செயற்பாடுகளை அமல்படுத்துவதன் மூலம் பல கலை ஆர்வம் மிக்க மாணவர்களை எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்க முடியும்.

மேலும் இக்கலைசார்ந்த உள்ளீடுகள் யார் மூலம் அளிக்கை செய்யப்படுகின்றது என்று கண்டு அது சார்ந்த ஏட்டுப்பிரதிகள் மற்றும் ஆதாரங்களை உள்ளடக்கிய பல தகவல்களைத் திரட்டி ஆவணப்படுத்துவதன் மூலம் இக்கலைகள் என்றும் உயிர் வாழும்.

அத்துடன் பழைய, புதிய கலைஞர்கள், எதிர்காலத்தில் வரும் கலைஞர்கள் என அனைவரையும் ஊக்குவித்தல் வேண்டும். மற்றும் கலைகள் சார்ந்து அவர்களுக்குப் பாராட்டு விழாக்களை ஒழுங்கு செய்து கௌரவிப்புக்களைச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்கின்றபோது மட்டுமே தங்களது கலை சார்ந்து உளரீதியான திருப்தியையும் ஆறுதல்களையும் அடைகின்றனர். இக்கௌரவிப்பின் ஊடாக மேலும் மேலும் கலைகள் அளிக்கை செய்யப்பட்டு நன்மதிப்பு பெறும்.

அடுத்து கிராமங்கள்தோறும் இளம் தலைமுறையினரைக் கொண்டு பாரம்பரியக் கலைஞர்களுக்கென மன்றங்கள் கழகங்கள் உருவாக்கப்பட வேண்டும். இக் கிராம மக்கள் அனைவரும் மன்றங்களிலும் கழகங்களிலும் செயற்படும் வேளையில் இவை எங்கள்

கலை என்ற உணர்வு அவர்களிடத்தே சுயமாகவே தோன்றும். இப்பாரம்பரியக் கலை நிகழ்த்துகையை வருடாவருடம் நிகழ்த்த வேண்டும் என்ற உத்வேகம் அவர்களிடத்தே பிறக்கும்.

ஓய்வு நேரங்களில் பொழுதுபோக்கின்போது தொலைக்காட்சி இணையம் முகநூல் என்றிருக்காமல், இதன் மூலம் பொழுதுபோக்குவதை விட, எமது பாரம்பரியக் கலைகளில் ஒன்றான வசந்தன் கூத்தினைப் பழக வேண்டும். இவ்வாறு செய்கின்றபோதுதான் முதியவர்களிடம் இருந்து இளைஞர்கள் சிற்சில நுணுக்கங்களைப் பெற முடியும்.

ஆற்றுகைக் கலைகள் சார்ந்த ஆய்வரங்குகள் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்து பிரதேச மக்களிடையே செயற்படுத்துவதன் மூலம் எம்மவர்களிடையே விலகிக் காணப்படுகின்ற அச்ச உணர்வு தகர்த்தெறியப்படும். அத்துடன் இக்கலை வடிவங்கள் பற்றிய அறிவினைப் பெறுவது மட்டுமல்லாது அவற்றினைப் பாதுகாப்பது தொடர்பான ஆய்வரங்குகளை நடத்துகின்றபோது அவற்றின் கனதியைத் தக்கவைத்துக்கொள்ள முடியும்.

இன்று மனிதன் இரசனை உணர்வினையும் அதன் மூலம் வெளிப்படுத்தப்படும் அழகியலுடனான கலை வெளிப்பாடு அனைத்தையும் காமராவில் பதிவு செய்து புகைப்படப் பிரதியாகப் பரிமாணம் பெறும் நிலை தோன்றியுள்ளது. மற்றும் நமது கலை வெளிப்பாடுகள், ஆற்றுகைகள் போன்றவற்றினை ஏனைய தலைமுறையினர் பார்க்கும் வகையில் ஆற்றுகைக் கலை சார்ந்த அனைத்து விடயங்களையும் அளிக்கைகளையும் பதிவு செய்து இறுவட்டாக வெளியிடுவதன் மூலம் ஒரு கலை அறிவினைப் பெறாத சமூகத்தினர் கூட அதனைக் கண்டு ரசித்துப் பயன்பெற உதவியாக இருக்கும். ஆகவே எந்தவொரு கலையும் அழியாமல் பாதுகாக்கப்பட இறுவட்டுக்கள் புகைப்படப் பிரதிகள் மற்றும் நூல்கள் ஆகியவற்றினூடாகப் பதியப்பட்டுப் பாதுகாக்கப்படுவதன் மூலம் அது அடுத்த பரம்பரையினரும் அறியும் வகையிலான தன்மையைக் கொண்டு காணப்படும்.

அன்றைய காலத்தில் கோயில்களின் ஊடாகக் கலைகள் வளர்தெடுக்கப்பட்டுள்ளதை நாம் இலக்கியங்கள் மூலம் அறிய முடிகின்றது. பொதுவாக ஆற்றுகைக் கலைகள் கோயில் சார்ந்த சூழலிலேயே வளர்ச்சி பெறுகின்ற தன்மையைக் காண்கின்றோம். ஆனால் இத்தன்மை இன்று சற்று மருவிப்போயிருப்பதை நாம் காணமுடிகின்றது. இத்தன்மையை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஆலயங்களில் பாரம்பரியக் கலை நிகழ்வுகள் நடாத்த நாம் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். அந்த வகையில் எமது ஆலயக் கண்ணகி அம்மன் சடங்கின்போது பாரம்பரியக் கலைகளில் ஒன்றாகிய வசந்தன் கூத்தினை அரங்கேற்ற வேண்டும் என்ற கட்டுப்பாட்டினைக் கொண்டுவர வேண்டும்.

இவ்வாறு பல தீர்வுகளைத் தேத்தாத்தீவு கிராமத்தில் காணப்படுகின்ற பாரம்பரியக் கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் முன்வைத்தனர். இதில் பாரம்பரியக் கலையைப் பாதுகாப்பதற்கு இளம் சந்ததியினை உருவாக்காமை என்னும் காரணமே பிரதானமாக முன்வைக்கப்பட்டது. எது எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பாரம்பரியக் கலையான வசந்தன் கூத்தை அழிவிலிருந்து மீட்க முடியும் என ஒரு ஆய்வாளராக நான் நம்புகின்றேன்.

நேர்காணல்

க. தருமரெத்தினம், கவிஞர், வயது - 75, களுதாவளை

இ. கோபாலப்பிள்ளை, ஓய்வு பெற்ற அதிபர், வயது - 67, தேத்தாத்தீவு

மு. சதாகரன், கலாசார உத்தியோகத்தர், வயது – 50, தேத்தாத்தீவு

ச. தெய்வநாயகம், விவசாயி, வயது - 57, தேத்தாத்தீவு

உசாத்துணை நூல்கள்

சி. மௌனகுரு, தமிழ் கூத்துக்கலை, குமரன் புத்தக இல்லம், 2015.

இ. பாலசுந்தரம், நாட்டார் கலை மரபில் ஓர் வசந்தன் கூத்து, 2010.

வாசு முருகவேல்

தென்னாப்பிரிக்காவின் ஒரு முகம்

நூல் : மானக்கேடு
ஆசிரியர் : ஜே.எம்.கூட்ஸி
தமிழில் : ஷஹிதா

நம்மவர்களுக்கு அதாவது ஆசிய மக்களுக்கு ஐரோப்பிய அமெரிக்க மற்றும் ஆப்பிரிக்கச் சமூகம் குறித்து இருக்கும் பல கற்பிதங்களில் ஒன்று குடும்பம் - உறவுகள் பற்றிய எண்ணங்கள். இன்னும் வெளிப்படையாகச் சொன்னால் பாலியல் சார்ந்து அவர்களைப் பற்றிக் கொண்டிருக்கும் கற்பிதங்கள். சென்னை போன்ற ஒரு நகரத்தில் வாழும் ஒரு பேராசிரியர் தன்னுடைய இயல்பான அல்லது இயற்கையான பிறழ்வுகளுக்குப்பின், சமூகத்தில் எதிர்கொள்ள நேரும் மானக்கேடு எத்தகையதோ அதற்கு ஓர் ஆப்பிரிக்கப் பேராசிரியரும் விதிவிலக்கில்லை.

தென்னாப்பிரிக்கக் கறுப்பு இன மக்களின் விடுதலைப் போராட்டம் நெல்சன் மண்டேலா அதிபர் ஆன பிறகு அப்படியே "ஃபிறீஸ்" செய்யப்பட்டுவிட்டது. கறுப்பின மக்கள் விடுதலையை அடைந்துவிட்டார்கள். தென்னாப்பிரிக்கா சமத்துவ தேசமாக மலர்ந்துவிட்டது என்ற பிரமாண்டமான பிம்பம் இப்போதும் பலருக்கு இருக்கிறது. (நெல்சன் மண்டேலா போன்ற பலர் ஆயுத வழியிலும் போராடினார்கள் என்பது கூட இங்கு அரசியல் காரணங்களுக்காக மறைக்கப்பட்டுவிட்டது.)

இங்கு கொண்டு சேர்க்கப்பட்டிருக்கும் வரலாறு இதுதான். ஆனால் உண்மை அப்படி இல்லை. விவாதிக்க வேண்டிய, இன்னும் இன்னும் முன்நகர வேண்டிய பல்வேறு உள்நாட்டுச் சிக்கல்களில் சிக்கி முன்நகர முயன்றுகொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. விடுதலை என்பது ஒரு புள்ளியில் முற்றுப்பெற்றுவிடுகின்ற ஒரு விடயம் அல்ல. இன்னும் இன்னும் பரிமாண வளர்ச்சி அடைந்து முன்நகர வேண்டிய ஒன்று என்பதற்கு மிகப்பெரிய உதாரணம் தென்னாப்பிரிக்கா.

ஒடுக்கப்பட்ட இனம் அல்லது சமூகம் தன்னை ஒடுக்கிய சமூகத்தைக் கையாளும் இடத்திற்கு வந்தால் எவ்வகையான சமூகச் சிக்கல்கள் இருக்கும் என்பதைப் பட்டவர்த்தனமாகப் பதிவு செய்திருக்கிறது இந்நாவல். சில இடங்களில் நமக்கு எரிச்சல் ஏற்படலாம். அதற்கு நம்முடைய தனிப்பட்ட கற்பிதங்கள் ஒரு காரணமாக இருக்கும். வாசிக்கும் பலருக்கும் இவ்வாறு தோன்ற வாய்ப்பு இருக்கிறது. அந்தப் புள்ளிதான் இந்த நாவலின் ஜீவன்.

இன்னும் நாம் பல்வேறு கலைப்படைப்புகள் ஊடாகப் பார்த்துக்கொண்டிருக்கும் ஜெர்மானிய நாசிகளால் இனப்படுகொலை செய்யப்பட யூதர்கள்தான் இஸ்ரேல் என்ற தேசத்தை அமைத்துக்கொண்டு பாலஸ்தீன நீர்நிலைகளில் மலட்டுத்தன்மையை உண்டாக்கும் ரசாயனங்களைக் கலக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வது அவ்வளவு இலகுவானதில்லை. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு மத்தியில் காலங்காலமாக வாழ்கின்ற ஓர் ஈழத் தமிழனின் வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்று இன்றுவரை உலகத்திற்கு விளங்கியதில்லை. விளங்கிக்கொள்ள அவர்களுக்கு விருப்பமும் இல்லை.

நம் சமூகத்தில் ஒரு தந்தையும் மகளும், ஆணாகவும் பெண்ணாகவும் அமர்ந்து இரு பாலினங்களின் சமூக - உளவியல் சிக்கல்களை - நெருக்கடிகளை மனம்விட்டுப் பேசுவது என்பது எத்தகையதாக இருக்கும் என்றால், இந்த நாவல் தரக்கூடிய அழுத்தம் போலத்தான் இருக்கும்.

மேலே குறிப்பிட்டிருக்கும் இரண்டு புள்ளிகளும் இந்த நாவலில் முக்கியத்துவம் பெறுகின்ற அம்சங்கள்.

அழகுராஜ் ராமமூர்த்தி



கி.ரா. என்னும் கதைசொல்லி

கரிசல் வட்டார இலக்கியத்தின் பிதாமகன், வட்டார இலக்கியத்தின் முன்னத்தி ஏர், கரிசல் குயில் என்றெல்லாம் பலவாறாகப் போற்றப்படுபவர் கதைசொல்லி கி.ராஜநாராயணன்.

கடந்த சில நாட்களுக்கு முன் கி.ரா கதைசொல்லியா என்ற கேள்வி விவாதத்திற்கு உள்ளானது. என்னைப் பொறுத்தவரை கி.ரா ஒரு கதைசொல்லியாகவே அவரது எழுத்தின் மூலமாகவும் பேச்சின் வாயிலாகவும் வெளிப்படுகிறார். அவர் அப்படி ஒரு கதைசொல்லியாக உருவெடுத்ததற்கு அவரது மனைவி கணவதியம்மாளின் பங்களிப்பு மிக முக்கியமானது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், ஒருவர் கதை சொன்னால் அதை ஆர்வத்தோடு கேட்பதன் மூலமே அவரிடம் இருந்து பெரும்பாலான கதைகளைப் பெற முடியும். கதைகளைச் சொல்வது மட்டுமன்றி கதைகள் பற்றிய தனது கருத்தைப் பலவாறாகக் கட்டுரைகளிலும் கதைகளிலும் வெளிப்படுத்தியுள்ளார்.

பிறந்த கதையச் சொல்லவா வளர்ந்த கதையச் சொல்லவானு கேட்டு ரெண்டு கதையையும் சொல்லமாட்டார் கோபல்லகிராமம் புதினத்தில் வரும் அக்கையா என்ற கதாபாத்திரம்.

கதைலேசு நெஜம் கஷ்டமில்லையா என்ற வரிகள் கரிசல் காட்டு சம்சாரி கதையில் இடம்பெறுகிறது.

“கதை சொல்லணுமாக்கும். சரி, சொல்றேன். எங்க ஊர்லெ எல்லாம், ஒரு கதை சொல்லுண்ணு கேட்டா,‘நா வாழ்ந்த கதையைச் சொல்லவா; நா தாழ்த்த கதையைச் சொல்லவா’ண்ணு கேக்கிறதுண்டு, நாம ரெண்டு லெ எதையாவது கேட்டு வைக்கணும். ஆனா, அவங்க வாழ்ந்த கதையும் வராது; தாழ்ந்த கதையும் வராது. ஏதாவது ஒரு கதை வரும்!

பின்னெ என்னத்துக்கு இந்தக் கேள்விண்ணு நினைக்கலாம். ஒருவேளை, கொஞ்சம் யோசிச்சிக்கிட அவகாசம் வேணும்ங்கிறதுக்காக இருக்கலாம். எல்லாம் ஒரு 'இது'க்காகத்தான்.." என்கிற வரிகள் ஒரு வாய்மொழி கதை எனும் கதையில் இடம்பெற்றுள்ளது.

தீராத கதைசொல்லியாக வாழ்ந்த கி.ராவின் கதைகளில் எல்லாம் சொலவமும் பழமொழியும் நிறைந்திருப்பது போலத் தனது கதை பற்றிய கி.ராவின் கருத்தையும் அவரது கதைகள் இவ்வாறு தாக்கியுள்ளது. ஒரே மாதிரியான கருத்தை மூன்று இடங்களில் வெவ்வேறு கோணத்தில் வேறுபட்ட வார்த்தைகளால் கி.ரா கூறியுள்ளார். கதைக்குள் கதை சொல்லும் பாணி வாசகர்களைக் கதையோடு இணைத்தால் மட்டும் அது எழுதப்பட்டதன் பயனை அடையும். கோபல்லகிராமம் புதினத்தில் மங்காயத்தாரு அம்மாள் மூலம் கி.ராவின் கதைக்குள் கதை சொல்லும் பாணி வெற்றி பெற்றுள்ளது எனச் சொல்லலாம். அதேபோல் கோபல்லபுரத்து மக்கள் புதினத்தில் விடுதலைப் போராட்டம் தொடர்பான காட்சிகள் அதிகம் வருகின்றன. அப்படிப்பட்ட தகவல்களைக் கி.ரா தொகுத்துத் தரும்போது கதைக்குள் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது இலக்கியத் தன்மைக்கு ஏற்பக் கொடுத்திருப்பார்.

நாட்டுப்புறவியல் தாக்கம்:

கி.ரா எழுதிய கதைகள் எல்லாம் அவர் வாய்மொழியாகக் கேட்டதுடனான புனைவு. முதன்முதலில் நாட்டுப்புறப் பாலியல் கதைகளைத் தொகுக்கும் முயற்சியில் இறங்கிய கி.ராவின் தனிப்பட்ட கதைகளில் கூட அந்தப் பாலியல் கதைகளின் சாரம் வெளிப்பட்டுள்ளது. நீர்முள்ளு, தேள்விஷம், இருதலைமணியன் முதலான கதைகள் அப்படிப்பட்டவையே ஆகும்.

பாலியல் கதைகள் மட்டுமல்லாது கிராமங்களில் நம்பப்பட்டு வந்த நாட்டுப்புறக் கதைகளையும் தனது புதினங்களில் கி.ரா சொல்லியுள்ளார். கோபல்லகிராமம், கோபல்லபுரத்து மக்கள் போன்ற புதினங்களும் கிடை குறுநாவலும் கதைப்போக்குக்கு ஏற்றபடி இணைத்து பல நாட்டுப்புறக் கதைகளை ஏந்தியுள்ளன. கிடை குறுநாவலை நாட்டுப்புற பாணியிலான ஒரு பெண்ணின் புலம்பல் என்று கூடச் சொல்லலாம்.

கதைகள் மட்டுமல்லாது நாட்டுப்புறப் பாடல்களும் கி.ராவின் கதைகளில் இடம்பெற்றுள்ளன. திருநங்கையின் வாழ்வைச் சித்தரிக்கும் கோமதி சிறுகதையிலும், புறப்பாடு சிறுகதையிலும் நாட்டுப்புறப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. கிடை குறுநாவலுக்கான கதையையே செவனி எனும் பெண் பாட்டாகத்தான் தொடங்குகிறாள். இந்த இவள் குறுநாவலிலும் நாட்டார் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. கோபல்லகிராமம் மற்றும் கோபல்லபுரத்து மக்கள் என்ற இரண்டு புதினங்களிலும் நாட்டுப்புறப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த நாட்டுப்புறக் கதைகள் மற்றும் பாடல்கள் நகைச்சுவையையும் சடங்குகளையும் கிராமங்களில் நிலவிய பேய் மற்றும் நாட்டார் தெய்வங்களின் கதைகளையும் மட்டும் சொல்லாமல் கிராமத்து மக்களின் வலியையும் உணர்வுகளையும் தாது வருடப் பஞ்சத்தின்போது நடந்த கொடூரமான சூழலையும் ஆங்கிலேய எதிர்ப்பையும் சொல்லும் விதத்தில் கதைகளில் இடம்பெற்றதால்தான் நாட்டுப்புறவியலின் தாக்கம் வரலாற்றோடு கி.ராவின் கதைகளைத் தொடர்புபடுத்துகிறது.

கிடை குறுநாவலில் பொன்னுசாமி நாயக்கர் பேய் குறித்த செய்திகளைப் பரப்பியதும் கோபல்லபுரத்து மக்கள் கதையில் வரும் ஜடாமுனி, அய்யனார் வீதி உலா கதைகளும் கரிசல் காட்டு சம்சாரி கதையில் நாயக்கர் பேய் பார்த்ததாகவும் பாம்பு பார்த்ததாகவும் ஏமாற்றியது முதலானவை நெடுநாட்களாக இருக்கும் நாட்டுப்புறவியல் கூறுகள் கொண்ட கதைகளிலும் சடங்குகளிலும் முக்கியத்துவமானதாகும்.

பஞ்சத்தைப் பற்றிக் கேள்விப்பட்டால் மட்டும் தெரியாது. அதை அனுபவித்தவர்களுக்குத்தான் அதன் கொடூரம் தெரியும் என இந்த இவள் குறுநாவலில் ஒரு வரி வருகிறது. அதுபோல கி.ராவைப் பற்றிக்

கேள்விப்பட்டால் மட்டும் தெரியாது. அவரது கதைகளை வாசித்தவர்களுக்குத்தான் அந்தக் கதைகளின் அருமை தெரியும்.

சூழலியல் நோக்கில் கி.ரா கதைகள்:

ஒரு மனிதன் படைப்பாளியாக மாறுவதற்குத் தனது சூழலை உற்றுநோக்குவது அவசியமான ஒன்றென நான் கருதுகிறேன். அந்த வகையில் கி.ரா தனது சூழலை நன்கு உற்றுநோக்கிக் கரிசல் வட்டாரப் பகுதிகளில் வாழ்ந்த மக்களைப் பற்றி மட்டும் கதைகள் சொல்லாமல் அங்கு வாழ்ந்த மரங்கள், பழங்கள், ஊரும் பிராணிகள், பறவைகள், விலங்குகள் முதலானவற்றையும் கதைகளில் சொல்லியுள்ளார்.

பனைமரம் என்பது தமிழகத்தின் பண்பாட்டுச் சின்னமாக இன்றளவும் திகழ்கிறது. பனையின் பயன்களைச் சில தற்காலப் படைப்புகள் தாங்கி நின்றாலும் கி.ராவின் புதினங்களும் சிறுகதைகளும் பனையைப் பற்றிய பல தகவல்களை நமக்குப் பகிர்கின்றன. கோபல்லகிராமத்தில் வரும் நாயக்கர் விடலைப் பனையில் பல பொருட்களைச் செய்து அசத்துகிறார். பனைநார்ப்பெட்டி, பனைநார்க்கட்டில், பனைஓலைப் பயன்பாடு, பனைவிளக்குகள், பனம்பழம், கருப்பட்டி, பனங்கள்ளு முதலானவை கோபல்லகிராமம், கோபல்லபுரத்து மக்கள் என்ற இரண்டு புதினங்களிலும் பேதை, நிலைநிறுத்தல் முதலான சிறுகதைகளிலும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

உடங்காடு எனும் சொல் கி.ராவின் பல கதைகளில் எதிரொலிக்கும். அந்த உடன்காடு உடை மரம் சூழ்ந்ததாகும். கருவை மரம், வேப்பமரம், அரசமரம், மஞ்சனத்தி மரம் முதலானவை கி.ராவின் கதைகளில் இடம்பெறுவது மட்டுமல்லாது அந்தந்த மரத்தின் தன்மைக்கேற்ற கதைப் போக்கில் கி.ரா ஒவ்வொரு மரத்தையும் பொருத்தியிருப்பது கவனிக்கக்கூடிய ஒன்று. அதேபோல் பனம்பழம், கோவைப்பழம், கள்ளிப்பழம், நெய்த்தக்காளி முதலியனவும் கதைகளில் இடம்பெற்றுள்ளன.

கூகை, ஆந்தை, வௌவால், கதுவாலி, கீரி, முயல், முள்ளம்பன்றி, கேடா, நட்டுவக்காலி, பெருச்சாளி, மரநாய், உடும்பு, பாம்பு, பூனை, முள்எலி, குரவைமீன், நாரை, காடை, கரிச்சான், ஆள்காட்டி குருவி, வான்கோழி, நீர்க்கோழி, ஆடுகள், மாடுகள் முதலானவை கி. ராவின் கதைகளில் இடம்பெறுகின்றன.

குறிப்பாக கிடை குறுநாவல் ஆடுகளின் தன்மைகளைப் பலவாறாகப் பிரித்துத் தருகிறது. விவிலியத்தில் யாக்கோபு ஆடு மேய்க்கும்போது அது ஈனும்போது யாக்கோபு விரும்பிய வண்ணத்தில் குட்டிப் போட பல உத்திகளைப் பயன்படுத்தியதை வாசித்துள்ளேன். அதற்குப் பின் அப்படிப்பட்ட ஆடுகள் ஒவ்வொன்றிற்குமான பெயர்கள் என்ன என்பதைச் சொல்வதாகக் கிடை உள்ளது. கோபல்ல கிராமத்திற்குக் கோபல்லம் எனப் பெயர் வருவதற்குக் காரணமே பசுக்கள்தான் என்கிற செய்தி கோபல்ல கிராமத்திலேயே உள்ளது. கரிசல் காட்டு சம்சாரியில் விவசாயத்திற்குக் காளை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது எனப் பேசப்படுகிறது. புறப்பாடு சிறுகதையில் மாட்டுப்பால், எருமைப்பால், ஆட்டுப்பால் என சாகக் கிடக்கும் மனிதனுக்கு எந்தப் பாலை ஊற்றி மேலே அனுப்புவது என்கிற

விவாதமே இடம்பெற்றிருக்கும். இவ்வாறு கரிசல் பகுதி மக்களை மட்டுமல்லாமல் அங்கு வாழ்ந்த உயிர்களையும் கி.ரா பதிவு செய்துள்ளார். கோபல்லம் கிராமமாக மாறக் காட்டை எரித்தபோது காட்டில் உள்ள பல உயிர்கள் மன்றாட்டோடு வெளிப்படும். நிலைநிறுத்தல் சிறுகதையில் மழை வருவதைப் பறவையும் விலங்குகளும் உள்ளுணர்வால் அறிவதை அவைகளிடம் இருந்து பெற்றுக் கி.ரா கடத்தியிருப்பார்.

மலம் கழிப்பது குறித்த கிராமத்து மக்களின் புரிதல் கண்ணாடியாகச் சுற்றுப்புறம் சுகாதாரம் சிறுகதையிலும் கோபல்ல கிராமம் புதினத்திலும் வெளிப்படுகிறது. இதுவும் சூழலியல் பார்வையில் அணுக வேண்டிய ஒரு முக்கியமான கருதுகோள் ஆகும்.

கரிசல் வட்டாரப் பழக்கவழக்கங்கள்:

அணிகலன்களும் ஒப்பனையும்:

பாம்படம், தொறட்டி முதலான அணிகலன்கள் தமிழகம் முழுவதும் பல பகுதிகளில் இடம்பெற்றாலும் அவற்றை முதன்மைப்படுத்திக் கதைகளில் கொண்டுவந்தவர் கி.ரா. காதுவளர்த்ததையும் பாம்படம் அணிந்திருப்பதையும் நான் சிறுவயதில் அதிகமாகப் பார்த்துள்ளேன். இப்போதும் அங்காங்கே ஓரிருவர் மட்டுமே பாம்படத்தைத் தொங்கப் போட்டிருப்பதையும் தொறட்டி குத்திருப்பதையும் பார்க்க முடிகிறது. கம்மவார் என்ற சொல்லே அவர்கள் அணிந்திருந்த கம்மலில் இருந்து வந்ததாகக் கி.ரா குறிப்பிட்டுள்ளார்.

இன்று காதல் தோல்வியில் தாடி வளர்ப்பது என்பது அன்று திருமணம் ஆகாதவர்கள் எல்லாம் சவரம் செய்யாமல் இருந்ததன் தொடர்ச்சி ஆகும்.

உணவு:

கரிசல் வட்டார உணவுகளில் கருப்பட்டி முக்கியத்துவம் பெற்றதையும் கூழ், கஞ்சி முதலானவை முக்கிய இடம் வகித்ததையும் கி.ராவின் கதைகளில் பார்க்க முடிகிறது. இந்த இவள் குறுநாவலில் உண்டு கெட்ட சாதி என்கிற பழமொழியும் பலவகை இனிப்புகளை உண்ணும் குடும்பமும் இனிப்பு, கசப்பு என உணவின் சுவை உணர்வில் ஏற்படுத்தும் மாற்றமும் பதிவாகி உள்ளன. பஞ்ச காலங்களில் கிழங்குகளை அகன்றெடுத்து உண்பதை நிலைநிறுத்தல் சிறுகதையில் கி.ரா சொல்லியிருக்கிறார்.

வெற்றிலை போடுவது மூக்குப்பொடி போடுவது முதலானவற்றை ரசனையோடு கோபல்லகிராமம் புதினத்திலும் ஒருவாய்மொழிக்கதை கதையிலும் கி.ரா வெளிப்படுத்தி இருக்கிறார்.

கரிசல் நில வேளாண்மை:

ஒவ்வொரு மண்ணும் ஒவ்வொரு விதமான பயிர்கள் விளைவதற்குத் தகுதியானதாக இருக்கும். அந்த வகையில் கரிசல் மண் என்பது வானம் பார்த்த பூமி. பஞ்சத்தை எளிதில் சந்திக்கும் வறண்ட பகுதியாகக் காட்சியளிக்கக்கூடிய ஒன்று. இங்கு பணப்பயிர்கள் விளைவதற்கான சூழல் என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே உள்ளது. பருத்தி, உளுந்து, கம்பு முதலான பயிர்களை விளைவிப்பது குறித்த பகுதி கரிசல் கதைகளில் அதிகம் இடம்பெறுகிறது.

கரிசல் மண்ணில் கலப்பை போடும் தகவல்கள் பல கதைகளில் இடம்பெற்றுள்ளன. கோபல்லகிராமம் புதினத்தில் அக்கையா கலப்பை போடுவதில் புதுமுறைகளைக் கரிசல் மண்ணுக்கு ஏற்றவாறு கையாள்வார். கரிசல் காட்டு சம்சாரி சிறுகதையிலும் அதே முறையில் கலப்பை பயன்பாடு இடம்பெற்றிருக்கும். இவ்வாறு இரட்டைக் கலப்பை பயன்பாடு அதைப் பயன்படுத்தும் விதம் கதைக்கோர்வையோடு சொல்லப்பட்டு இருக்கும். இந்த மாதிரியான தகவல்களைச் சொல்லும்போது கதையின் கோர்வையில் பிளவு ஏற்படுவதுண்டு. ஆனால் கி.ரா கதைக் கோர்வையில் சிக்கல் இல்லாமல் தகவல்களைப் புகுத்தியிருப்பார். விடிவு கதையில் ஏரெழுபது நூலில் கம்பர் சொல்லியதையெல்லாம் பற்றிய ஒரு கரிசல் காட்டு விவசாயியின் நிலை சொல்லப்பட்டு இருக்கும். மின்சாரத்தின் வருகை விவசாயத்தில் ஏற்படுத்திய மாறுதல்களையும் கி.ராவின் கதைகள் சொல்கின்றன.

கரிசல் நில விவசாயத்தைப் படம் பிடித்துக் காட்டுவதற்குக் கரிசல் காட்டு சம்சாரி என்ற ஒரு கதை போதும். ஒரு நிலம் அழிவைச் சந்தித்தால் அந்த நிலத்தின் சம்சாரி என்ன ஆவான் என்பதைக் கிடை குறுநாவலின் மூலம் ஓரளவு அறிய முடியும். மழை வராத காலத்தில் கரிசல் நிலத்தின் வறட்சி எப்படிப்பட்டது என்பதும் தண்ணீரின் தேவையும் நிலைநிறுத்தல், இந்த இவள், மாயமான், விடிவு முதலான படைப்புகளில் வெளிப்பட்டுள்ளது.

சாதியப் பாகுபாடும் சுரண்டலுக்கெதிரான குரலும்:

கி.ரா தனது கதைகளில் தனது சாதியை மட்டுமே முதன்மைப்படுத்திய சாதிய எழுத்தாளர், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வைக் கி.ரா பேசவில்லை என்றும் அவர்மீது விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. ஆனால், இதுவரை புதினங்கள் பேசத் தவறிய கம்மாளர்களைக் கோபல்லகிராமம் புதினத்திலும் நாற்காலி சிறுகதையிலும் கி.ரா பேசியுள்ளார். கம்மாளப்பெண்ணை முக்கியக் கதாபாத்திரமாகக் கொண்டதாகக் கோபல்ல கிராமம் உள்ளது. அதேபோல், பொன்வேலை செய்யும் ஆசாரிகள், மரவேலை செய்யும் ஆசாரிகள் கி.ராவின் கதைகளில் வந்து போகின்றனர். பாம்படம், கலப்பை, கழு மரம், நாற்காலி என ஆசாரியர்களைப் பேசிய கி.ரா கோபல்ல கிராமத்தில் நாயக்கர் வர்ணம் என்ன என்று பூணூலைப் பார்த்துக் கேட்டதில் சாதியம் முக்கியத்துவம் பெற்றிருந்ததை உறுதிப்படுத்துகிறார்.

கரிசல் காட்டு சம்சாரி சிறுகதையில் வரக்கூடிய நாயக்கர் தொடக்கூடிய சாதியாக இருந்தால் தொட்டுப் பேசுவார் என்கிற வாக்கியம் இடம்பெற்றுள்ளது. கோபல்லகிராமம் புதினத்தில் பஞ்சாயத்தில் இருக்கும் ஒரு நாயக்கர் சிறந்த வைத்தியர் எனச் சொல்லும்போது தீண்டத்தகாத சாதிக்கு வைத்தியம் பார்க்க நாடிப் பிடிக்கும்போது ஒரு பட்டுத்துணியைக் கையில் போட்டுத் தொடாமல் நாடிப்பார்ப்பதாக எழுதப்பட்டிருக்கும். இந்த இரண்டும் தீண்டாமை வலுப்பெற்று நின்றதைச் சொல்லும் சான்றுகளே ஆகும். கிடை குறுநாவலே செவனி என்ற தாழ்த்தப்பட்ட பெண்ணின் குரலாகவே ஒலிக்கிறது. மாயமான் சிறுகதையில் செட்டியாருக்கும் நாயக்கருக்கும் இடையிலான வித்தியாசத்தை வெளிப்படுத்தி இருப்பார். கோபல்லபுரத்து மக்கள் புதினத்தில் நாயக்கர், தேவர், ஆசாரி போன்றோரோடு பகடை எனத் தாழ்த்தப்பட்ட சாதியினர் பற்றிப் பேசும் இடங்களை இரண்டு கோணங்களில் பார்க்கலாம். பகடை பட்டாளம், மதுரைவீரன் (மாதரியான் பட்டாளம்) முதலானவை ஒன்று. மற்றொன்று தாழ்த்தப்பட்டவர்களாகவே அவர்களை அழைத்து அவர்களது சாதியச் சடங்குகளைக் கேட்பது ஆகும். இவ்வாறு சாதியம் சார்ந்த பதிவுகளைக் கி.ரா தனது படைப்புகளில் பதிவு செய்துள்ளார்.

மாயமான், விடிவு மற்றும் நிலை நிறுத்தல் சிறுகதைகளில் சுரண்டலுக்கு எதிரான குரலையும் அரசு கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையில் காட்டும் வித்தியாசத்தையும் கி.ரா பதிவு செய்துள்ளார். அவரது கதைகளில் இலக்கியம் மோலோங்கி நின்றதாலும் எள்ளல்பட கி.ரா கதையைச் சொல்லியதாலும் இந்தச் சுரண்டலுக்கு எதிரான குரல் மட்டுப்பட்டு இருக்கிறது. வேட்டி சிறுகதையில் ஒரு தலைமறைவான அரசியல்வாதி வருவார். இதெல்லாம் அவருடைய பொதுவுடைமைச் சார்பை வெளிப்படுத்துவதை நம்மால் பார்க்க முடியும். கோபல்லபுரத்து மக்கள் புதினத்தில் பகத்சிங்கின் தூக்கு பற்றிய பகுதியிலும் கூட கி.ராவின் கொள்கை வெளிப்படுவதைப் பார்க்கலாம். காந்தி ஆதரவு மேலோங்கி இருந்த காலத்தில் போஸ் மீதான மதிப்பு கிராமத்தில் எந்தளவு வீறுகொண்டிருந்தது என்பதையும் கி.ரா சொல்லியிருப்பார். இவையெல்லாம் அவரது கொள்கைகளின் சாரம் ஆகும்.

- அடுத்த இதழில் முடியும்

ஆண்டன் பெனி

தானாக எழுதிக்கொண்ட கவிதைகள்

நூல் : பியானோவின் நறும்புகை
ஆசிரியர் : நிலாகண்ணன்
வெளியீடு : படைப்பு குழுமம்

"எதையாவது எழுதிப்பழகிவிட்டேன், விடமுடியாது. மண்ணில் அனிச்சையாக விரலால் கோலமிடும் பெண்விரல் போல எழுத வேண்டுமெனக்கு. எழுதுவதென்பது ஒரு விதமான தீர்வு. சொற்கள் அதிகமற்ற கல்லறை வாசகங்களைச் சூடி இறந்தவர்களை நான் விரும்புகின்றேன். கிழியாஞ்சட்டிகளைப் போலச் சின்னஞ்சிறிய மனநிம்மதிகளை மொழியில் வனைந்து பார்க்கிறேன். துளி நீரிலிருந்து மீண்ட எறும்பு கோடு இழுத்துச்செல்கிறது, எனக்குக் கவிதை என்பது அந்த ஈரப்பாதை" என்ற முன்னுரையோடு தொடங்கும் நிலாகண்ணனின் கவிதைகளுக்குள் விரும்பித் தொலைந்துவிட்டேன்.

துயரங்களே வெட்கித்துத் தலைகுனியும் அளவிற்கு அவற்றை அழகியலோடு காட்சிப்படுத்தியிருக்கிறார். கவிதைகளை வாசித்தபின் விசும்பும் ஒரு சொட்டுக் கண்ணீரை நகர்த்தவே ஒரு ஹைட்ராலிக் இயந்திரம் தேவைப்படுகிறது.

நமக்கான கவிதைகளை எழுதுகிறவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பது வாழ்வின் வலிகளுக்கு ஆறுதலாக இருக்கிறது. அழுது தீர்த்துவிட முடியாத நேரங்களிலெல்லாம் மேகங்களையும் பறவைகளையும் கிளைகளையும் பார்த்துக்கொண்டிருப்பேன். ஆனாலும் அடைபட்ட அறைக்குள்ளிருக்கும் போதெல்லாம் என் திறந்தவெளியாக நினைப்பது இப்படியான கவிதைகளைத்தான்.

தம்பி நிலாவின் ஒவ்வொரு கவிதையையும் வாசித்து முடித்ததும் கண்களை மூடிக்கொள்கிறேன். என் கண்கள் அளவிற்குத் தெரியும் ஒவ்வொன்றும் ஒரு தனிப் பிரபஞ்சம்.

தன்னுடைய முதல் தொகுப்பிலேயே ஒரு தனித்துவமான கவிதை மொழியினை வெகு லாவகமாகக் கையாண்டிருப்பதிலேயே தெரிந்துவிடுகிறது இந்தக் கவிதைகளின் அசாத்தியமான போக்கு.

பெருங்காற்றில் தலைகீழாகத் திராட்சை வடிவில் நம் பெருங்கண்டத்தின் கீழே ஊசலாடும் துயர்மிகு ஈழம் பற்றிய கவிதை, இன்னும் சில நாட்கள் என் உறக்கத்தைக் கலைக்கலாம்.

சாந்துப் பொட்டு தீர்ந்துவிட்டதென்று யாரோ தம்பியின் அடிவயிற்றைக் கிழித்து இரத்தமெடுத்து உறைய வைத்திருக்கிறார்கள்.

என் அடிவயிறும் பிசுபிசுக்கிறது. கவிதையை வாசித்ததும், ஏன் இவன் இந்த வாழ்க்கையிலிருந்து இத்தனைநாள் தொலைந்து போயிருந்தான்? என்று கேட்கத் தோன்றியது.

இதிலிருக்கும் அத்தனைக் கவிதைகளும் தானாகவே எழுதிக்கொள்ள, அதை இவன் பிரம்ம சாட்சியாக அருகிலிருந்து வேடிக்கை பார்த்திருக்கிறான்.

‘மழையில் நனைந்த வாழையிலைகளைப் பார்க்கையில் பசிக்கின்றது’ மாதிரியான ஒரேயொரு வரியினை என் வாழ்நாளில் எழுதிவிடமுடியுமா என்று தெரியவில்லை.

நிலாகண்ணனுக்குப் பசிக்கும்போதெல்லாம் அவனது கவிதைகளுக்கும் பசித்துவிடுகிறது. இருவரும் ஒருவரையொருவர் தின்றிருக்கிறார்கள்.

எல்லோருக்கும் ரப்பர் வைத்த பெனசில் கிடைத்துவிடுவதில்லை. பலருக்குத் தவறுகளையும் துயரங்களையும் அழித்துவிட்டுப் புதிதாக எழுத ரப்பர் தேடுவதற்குள் வாழ்க்கை தன்னிச்சையாகவும் எதையெதையோ எழுதிவிடுகிறது.

நிலாகண்ணனிடம் கவிதை இருக்கிறது... இது காலத்தால் தவிர்க்கமுடியாத ரப்பர் வைத்த பென்சில். நீ இன்னும் இன்னும் நிறையவே எழுது தம்பி... உன் ரப்பர் வைத்த பென்சிலால் என்னையும் கொஞ்சம் புதிதாக மாற்றி எழுதிக்கொள்கிறேன்.

அழை தூர ஞமலி

பெருத்த துரோகங்களுக்குப் பிறகு
ஏன் பறவை
புள்ளியாக மறையும்வரை
தெரிகின்றது

••

காலத்தைப் பருகும் தேனீ

புல்லாங்குழலோடு மனப்பித்தானவன்
காற்றைக் கட்டுவதும் திறப்பதுமாய்
ஒரு துளையடைத்து மறுதுளை திறக்கிறான்.
ஒழுங்கமைவற்ற நாதம்
அவனுக்கு முன்னே சென்று
திசைகளைத் திறந்து வைக்கிறது

••

பியானோவின் நறும்புகை

உன் கனவுக்குள்ளிருந்து
இரண்டு கருப்பு வெள்ளைக் கட்டைகள்
வெளியே வந்து கிடக்கின்றன
இனியந்தப் பியானோவை வாசிக்காதே
எரித்துவிடேன்
அதிலிருந்து ஒரு நல்ல புகை எழும்பட்டும்.

••

ஜீரோ பார்த்துக்க சார்

வாகனவோட்டிகளின்
நெஞ்சத்திற்கான தோட்டா
டீசல் கன்னிலிருந்து விரைகிறது
முன்பெல்லாம் எனது வாகனம்
துடிப்படங்காத இரையை
ரத்தமும் சதையுமாய்
இழுத்துவந்து கிடத்திவிட்டுக் கர்ஜிக்கும்
இப்போதெல்லாம்
குட்டிகளிடம் மன்றாடி நிற்கிறது
சிறுபசி இன்மையறியாது
டீசல் விலையறியாத ஒரு சாவுகிராக்கி
கிலோ மீட்டர் ஆறு ரூபாய்க்கு வருகிறாயா
என்றழைக்கிறான்
இதனையும் தவறவிட்டால் விடிந்திடுமே என்ற
விபச்சாரியின் ஒளி குன்றிய கண்களால்
அவனைப்பார்த்து
இப்படித்தான் உச்சரிக்கச் சொல்கிறது வாழ்வு

சரி ஏறு!

சரி தம்பி... இந்த சாவுகிராக்கியும் உன் வண்டியில் ஏறிக்கொண்டேன், எங்கு வேண்டுமானாலும் போ...

எஞ்சியிருக்கும் இந்த வாழ்வில் உன் கவிதைகளையும் இனி என்னால் தவிர்க்க இயலாது. ■

மிளகு சீரகத்தை
அம்மியில் நசித்துக்கொண்டு
ஒருமுறை இருமியதற்கே
நெஞ்சுச் சளி வச்சுடுமேன்னு
பதறியபடி அம்மா

வெடக்கோழி பிடுச்சுவர
ரப்பர் செருப்போடு தபதபக்க
ஓடுகிறான் அண்ணன்

பூண்டு வெங்காயப் பல்லுரிக்க
அரிவாள்மனைக்கு
காலகற்றி தோதாய்
உக்காந்துகொள்கிறாள் அப்பத்தா

மறுநாள் காலைக்கு
ரொட்டி தட்ட
முள்ளுமுருங்கையோடு
வருகிறாள்
பிள்ளைக்கு ஏங்கிக்கிடக்கும்
எதிர்வீட்டு ஈஸ்வரி அக்கா

பரபரப்பேதுமின்றி
கூன்விழுந்த
வெள்ளைச்சீலக்காரப் பாட்டியிடம்
கதைகேட்டபடி
உறங்கிக்கொண்டிருக்கிறாள்
அந்தக் கடைக்குட்டிப் பெண்

மெல்ல அவள் காலம்
மசங்கலாய்
மறையத்துவங்கும்போது
சட்டென
காய்கறி விற்பவனின்
விளம்பரக்கூவலில்
கலைந்தே போகிறது
சுகவீனத்தோடு
யாருமற்ற வீட்டில்
உறங்கிக்கொண்டிருந்தவளின்
முதிர்கனவு.

– பா.மகாலட்சுமி

•

குறைபடும் காரணங்கள்

வெளிவராத தனது கவிதைகள் குறித்து
விசனப்படுகிறாள் தோழி

மதிப்பெண் வாங்காத பாடத்தை
குறை சொல்கிறாள் மகள்

மேலிடம் நிராகரித்த
தனது திட்டத்தைக் குறித்து
புலம்பிக்கொண்டிருக்கிறார் கணவர்

அத்தனையும் காதில் வாங்கியபடி
மழையில் நனைந்த
கனமான தன் சிறகை விரித்து
பறக்கும் பறவையை
ஜன்னல் வழியாக
வியப்போடு
பார்த்துக்கொண்டிருக்கிறேன் நான்..

– மதுரை சத்யா

சிறுகதை

சிவசங்கரி வசந்தராஜ்
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்



விரயம்

இந்த ஞாயிறும் வழக்கம் போல வாட்ஸ் அப்-இல் தொடங்கி, முகநூல் தாண்டி, நெட்பிளிக்ஸை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அந்த மதிய வேளையில்தான் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. துண்டிக்கப்பட்ட அடுத்த நொடியே இன்வெர்ட்டர் மூலம் மின்சாரம் வந்துவிடும். ஆனாலும் கூட டிவியில் வரும் ஒருவித சப்தம், டியூப் லைட் ஒளியில் வரும் சிறு வேறுபாடு இவையெல்லாம் இன்வெர்ட்டர்தான் ஓடுகிறது என்று உணர்த்திவிடும்.

நம் உயிர் கூட ஒரு வகையான மின்சாரம்தானே. இரண்டையும் நம்மால் கண்ணால் காண முடியாது. நம் கைக்கொண்டு பிடித்து நிறுத்தி வைக்க முடியாது. ஆனால் உயிரையும் மின்சாரத்தையும் இருக்கும்போது இருக்கிறது என்றும், இல்லாதபோது இல்லை என்றும் நம்மால் உணர முடியும். நமக்கு இவ்விரண்டையும் உபயோகப்படுத்தவும் முடியும், உபயோகப்படுத்தாமல் வீணே செலவு செய்யவும் முடியும். மின்சாரம் துண்டிக்கப்பட்டால் சிறிது நேரம் நம் வேலை தடைபடாமல் நடக்க இன்வெர்ட்டர் உதவும். ஆபத்து சமயத்தில் உயிரைக் காப்பாற்ற வெண்டிலேடர் உதவும். அவ்வளவுதான் நம் அறிவும் அறிவியலும். நிரந்தரமாக நம் உயிரைப் பிடித்து வைக்க ஒரு கருவியும் நம்மிடம் இல்லை.

பணம் கூட ஒருவகையான மின்சாரம்தான். ஆனால் பணத்தை நம்மால் பார்க்க முடியும். தொட்டு உணர முடியும். மின்சாரத்தைப் போலவே பணத்தையும் இருக்கும்போது நாம் செலவழித்துக்கொண்டே இருப்போம். சட்டென்று ஒருநாள் சம்பாத்தியம் நின்றுவிட்டால் மின்சாரமில்லா வீட்டைப் போல நம் வாழ்க்கை இருளடைந்துவிடும்.

என் மனைவி ஒவ்வொரு அறைக்கும் சென்று தேவை இல்லாமல் எரியும் விளக்குகளை அணைத்துவிட்டு வந்தாள். இன்வெர்ட்டரில் ஓடுகிறது என்றவுடன்தான் தேவையில்லாமல் எரியும் விளக்குகளை நாம் கவனிக்கவே ஆரம்பிக்கிறோம். லாக் டவுன் சமயத்தில் எனக்கு சம்பளம் தாமதமானபோதும் இப்படித்தான். தேவையில்லாத செலவு என்ன என்று பட்டியல் போட்டு முக்கிய தேவைகளுக்கு மட்டுமே என் மனைவி செலவு செய்தாள். வழக்கமாக வெள்ளிக்கிழமைகளில் வாங்கும் பூவைக் கூட வாங்கவில்லை. வீட்டுத் தோட்டத்தில் இருந்தே பூப் பறித்துக் கட்டி விளக்கிற்குப் போட்டாள். திருமணம் ஆன இந்தப் பத்து வருடத்தில் அவளுக்குப் பூ கட்டத் தெரியும் என்று அப்பொழுதுதான் தெரிந்துகொண்டேன். அதை இந்தப் பத்து வருடமும் செய்திருந்தால் தோட்டத்தில் பூவும், பாக்கெட்டில் பணமும் தேவையில்லாமல் வீணாகிக் கொண்டிருந்ததைத் தடுத்திருக்கலாம்.

மீண்டும் சீராக சம்பளம் வந்தவுடன் தோட்டத்து மல்லிகை தொடுக்கப்படாமலே மரித்துப் போகிறது. யாருக்கும் பயன்படாமல் இறந்துபோனபோது அந்த மல்லிகை எவ்வளவு வேதனை அடைந்திருக்கும். மரணம் என்றதும் மனம் பாண்டியனிடம் சென்றது. போன வருடம் அவனுக்கு ஒரு விபத்து ஏற்பட்டது. அவசர சிகிச்சைப் பிரிவில் எட்டு நாட்கள் சிகிச்சை செய்தும் பலனில்லை. எட்டாவது நாள் மதியம் இரண்டு மணியளவில் இறந்துவிட்டான். அந்த மாதச் சம்பளம் பதிமூன்று நாட்களுக்கு மட்டுமே கொடுத்தார்கள். மருத்துவமனைச் செலவுக்கும், இறுதிச் சடங்கின் செலவிற்கும் சொந்தங்கள்தான் ஒரு இன்வெர்ட்டரைப் போலக் கை கொடுத்தார்கள். ஆனால்

பாண்டியனின் வயதான அப்பா, அம்மா, மனைவி மற்றும் பத்து வயது மகன் கொண்ட குடும்பத்தின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள யாராலும் முடியவில்லை. உறவுகளையும் குறை கூற முடியாது. அவர்களும் பணம் என்னும் மின்சாரத்தை அதிகம் சேமித்து வைத்திருக்கவில்லையே.

மருத்துவமனைக்கும், இறுதிச்சடங்கிற்கும் செலவு செய்த பணத்தை மீண்டும் சேமிக்க அவர்களுக்குப் பல மாதங்கள் ஆகும். நம் வீட்டு இன்வெர்ட்டர்களைப் போல. என் மனைவி 'மின்சாரம் வருவது போலத் தெரியவில்லை. நான் இப்போதே இரவுக்குச் சட்னி அரைத்து விடுகிறேன்' என்று சமையலறைக்குச் சென்றாள். மணி மாலை நான்குதான். காபி குடிக்கும் நேரமே ஐந்துதான். இரவுக்குள் மின்சாரம் வந்துவிட வாய்ப்பிருந்தும் கூட ஒரு முன் ஜாக்கிரதை. எல்லா மனைவிகளும் முன் ஜாக்கிரதை முத்தன்னாக்கள்தானோ? பாண்டியனின் மனைவி கூட, கணவன் இறந்த மறு மாதம் இருந்த பணத்தில் முதலில் கட்டியது மகனின் பள்ளிக் கட்டணத்தைத்தான். அதுவும் முழு வருடத்திற்கும். பணமில்லாமல் எது தடைப்பட்டுப் போனாலும் படிப்பு தடைப்படாது அல்லவா.

கிட்டத்தட்ட மூன்று மணி நேரங்கள் இன்வெர்ட்டர் இயங்கி இருந்ததால் மிக்சிக்கு மின்சாரம் பத்தவில்லை. என் மனைவி வீட்டின் எல்லா விளக்குகளையும் அணைத்துவிட்டுப் பின்பு மிக்சி போட்டாள். சில நேரங்களில் மிக முக்கிய தேவை வரும்போது இப்படி சில விசயங்கள் செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஆறு மாதங்களுக்கு முன்பு எங்கள் எல்லாருக்கும் கொரோனா வந்தபோது அப்படித்தான். மருத்துவ செலவு அதிகமானதால் வீட்டு இ எம் ஐ கட்டவில்லை. மகளின் பள்ளிக் கட்டணம் செலுத்தவில்லை. உடல்நிலை சரியானதும் ஒவ்வொன்றாகக் கட்ட ஆரம்பித்தோம். தடைபட்ட மின்சாரம் வந்துவிட்டால், எல்லாம் மறுகணமே இயல்பாக ஓட ஆரம்பிக்கும். ஆனால் பணக் கஷ்டம் அப்படி இல்லை. கொரோனா வந்த நேரத்தில் கட்டாமல் போன விசயங்களை எல்லாம் கட்டி முடிக்க எனக்கு ஐந்து மாதங்கள் தேவைப்பட்டது. அதுவும் பல வீண் செலவுகளைக் குறைத்த பின்புதான்.

மிக்சி போட்டதால் இன்வெர்ட்டர் சேமித்திருந்த மின்சாரத்தில் கணிசமான பகுதியைச் செலவழித்துவிட்டது. அதனால் ஹாலில் மட்டும் லைட்டும், ஃபேனும் போட்டுவிட்டு மகளையும் அங்கு வரச் சொன்னாள். மூன்று பேர் உள்ள வீட்டில் அனைவரும் ஒரே அறையில் இருப்பதற்கு ஒரு மின்சாரத் தடை தேவைப்படுகிறது. இல்லை என்றால் அவரவர் விருப்பம் போல டிவியையோ, மொபைலையோ பார்த்துக்கொண்டிருப்போம். ஆணுக்கும் பெண்ணுக்கும் ரசனைகள் வேறு. இளைய தலைமுறைக்கும், முதியவர்களுக்கும் ரசனைகள் வேறு என்று வகுத்தவர்கள் யார்?

என் மனைவி நான் வீட்டில் இருக்கும்போது சீரியல் பார்க்க வேண்டும் என்றால், பெட்ரூமில் உள்ள டிவியிலோ, அல்லது அவள் மொபைலில் ஹெட் செட் போட்டு கொண்டோதான் பார்ப்பாள். நான் இதுவரை சொன்னதில்லை எனக்கும் சீரியல் பார்க்கப் பிடிக்கும் என்று. அவளுக்கு இது தெரிந்தால் என் மீது இருக்கும் மரியாதை குறைந்துவிடுமோ என்று பயம். என் சின்ன வயதில் நான் பார்த்த முதல் சீரியல் விழுதுகள். நாங்கள் டிவி வாங்கிய வருடம்தான் அந்த சீரியலை சிலோன் சேனல் ஆரம்பித்திருந்தார்கள். என் தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, அக்கா, நான் எல்லோரும் விரும்பிப் பார்போம்.

அப்பா தாமதமாக வரும் நாட்களில் நானும் என் அக்காவும் போட்டிப் போட்டுக் கொண்டு கதையை அவருக்குச் சொல்லுவோம். குழந்தைகள் என்றால் கார்ட்டூன், பெண்கள் என்றால் சீரியல், ஆண்கள் என்றால் செய்திகள். இப்படித்தான் பார்ப்பார்கள் என்று தீர்மானித்தது யார்? எப்போது? ஒரே வீட்டிற்குப் பல டிவிக்களை விற்பதற்காகச் செய்த சதிதான் இது. எங்கள் வீட்டில் கூட இரண்டு டிவி இருக்கிறது. எரிந்துகொண்டிருந்த ஒரு லைட்டும், ஃபேனும் கூட நின்றுவிட்டன. நான் சென்று மெழுகுவர்த்தியை எடுத்து வந்து ஏற்றினேன். முதலிலேயே நாங்கள் மூவரும் ஒரே அறையில் இருந்திருக்கலாம். அப்போது இன்னும் சிறிது நேரம் இன்வெர்ட்டர் ஓடியிருக்கும். எதையுமே இருக்கும்போது நாம் யோசிப்பதில்லை. இல்லை என்று ஆன பிறகுதான் இப்படி செய்திருக்கலாம், அப்படி செய்திருக்கலாம் என்ற எண்ணம் வருகிறது. திருமணத்திற்கு முன்பு சம்பாதித்த பணத்தையெல்லாம் அனாவசியமாகச்

செலவழித்தேன்.

என் முதல் சம்பளம் பதினான்காயிரம். சம்பளத்தில் வாடகைக்கும், உணவுக்கும் நாலாயிரம் வரைதான் ஆனது. ஆனால் எல்லாப் பணத்தையும் செலவழித்துவிடுவேன். படம் பார்க்க என்று மாலிற்குச் சென்று, அங்கே சுற்றுவதால் கண்ணில் படும் பொருட்களை வாங்கி, பின்பு இரவு உணவுக்குப் பெரிய ஹோட்டல் சென்று சாப்பிட்டுவிட்டு வீட்டிற்குத் திரும்பும்போது கணிசமான பணம் காலியாகி இருக்கும். திருமணத்தின்போது இருபத்தி எட்டாயிரம் சம்பளம் வாங்கினேன். அப்போதெல்லாம் நான் செலவு செய்ய கவலைப்பட்டதில்லை. இந்த வீட்டை வாங்க வேண்டும் என்று பேங்கில் லோன் கேட்டபோது அவர்கள் இருபது லட்சம் வரைதான் தர முடியும் என்றார்கள். இந்த வீடோ இருபத்தி எட்டு லட்சம். என் மனைவியின் நகைகளை அடகு வைத்ததில் நான்கு லட்சம் ரூபாய் வரை கிடைத்தது. மீதி பணத்திற்கு அலைந்தபோதுதான் முதல் நான்கு வருடத்தில் வீணே செலவழித்தது எவ்வளவு முட்டாள்தனம் என்று புரிந்தது. கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்பது இதுதானோ.

இந்த வீட்டை வாங்க முடிந்தது என் பாட்டியால்தான். பணத்திற்கு அலைந்து கொண்டிருந்த சமயத்தில்தான் ஒருநாள் என் பாட்டிக்கு நெஞ்சு வலி வந்து இறந்துவிட்டார். அவர் இறந்தபிறகு நாங்கள் அவரின் பெட்டியைத் திறந்து பார்த்தோம். நான்கு புடவைகள், சாமி படங்கள், சிறு சிறு பொட்டலங்களாகப் பல கோவில்களில் கொடுத்த விபூதி, குங்குமம் இருந்தது. பெட்டியின் அடியில் ஒரு பெரிய சரவணா ஸ்டோர்ஸ் கவர் இருந்தது. அதன் உள்ளே பத்து, ஐம்பது, நூறு என்று பணம் இருந்தது. அவர் எப்போதுமே சின்னச் சின்ன வேலைகள் செய்வார். கைக்குழந்தைகளைக் குளிப்பாட்டச் செல்வார். யார் வீட்டிலாவது விசேஷம் என்றால் பலகாரம் செய்யச் செல்வார். அப்போது அவருக்குக் கிடைக்கும் பணத்தை இந்தப் பெட்டியில்தான் வைப்பார். ஆனால் அது மூன்று லட்சத்திற்கும் மேல் இருக்கும் என்று நாங்கள் நினைக்கவில்லை. அந்தப் பணத்தையும் வைத்துத்தான் இந்த வீட்டை வாங்க முடிந்தது. வீட்டை வாங்கிவிட்டோம். ஆனால் பாட்டியின் சேமிப்புப் பழக்கத்தைத்தான் அவரிடமிருந்து நாங்கள் யாருமே வாங்கவில்லை.

மெழுகுவர்த்தி கரைந்து சிறிதாகிவிட்டது. வேறு ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்தேன். என் மனைவி ஒரு மெழுகுவர்த்தியைச் சமையலறையில் ஏற்றித் தோசை சுட ஆரம்பித்தாள். ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் நகைகள் இந்த மெழுகுவர்த்தியைப் போலத்தான். அவசரத் தேவைகளுக்கு அவைதான் உதவுகிறது. நாங்கள் வீடு வாங்க உதவியது. நேற்று காய்கறி வாங்கப் போனபோது பாண்டியனின் மனைவியையும் மகனையும் பார்த்தோம். கை வளையலை அடமானம் வைத்துத்தான் இரண்டு மாதங்களாக வாழ்க்கை ஓடுகிறது என்றார். பாண்டியனின் இன்சூரன்ஸ் பணம் வரவில்லையா என்று கேட்டேன். வந்தது ஆனால் அது சில மாதங்கள்தான் உதவியது என்றார். அவர் ஆசிரியப் பயிற்சி முடித்தவர். இதுவரை வேலை பார்த்ததில்லை. இப்போது ஆன்லைன் வகுப்புகள்தான் என்பதால் பல பள்ளிகள் குறைந்தபட்ச ஆசிரியர்களைத்தான் வேலைக்கு வைத்திருக்கிறார்கள். அதனால் பல இடங்களில் வேலை தேடியும் கிடைக்கவில்லை என்றார். வீட்டில் இருக்கும் அனைத்து நகைகளும் காலி ஆவதற்குள் வேலை கிடைக்க வேண்டும் என்ற தவிப்பில் இருந்தார். எங்காவது வேலை வாய்ப்பு இருந்தால் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன்.

நானும் பாண்டியனும் ஒரே சமயத்தில்தான் இன்சூரன்ஸ் பாலிசி எடுத்தோம். இரண்டு லட்சம் ரூபாய் இன்சூரன்ஸ் ஒரு இன்வெர்ட்டரைப் போலத்தான் என்று இப்போதுதான் புரிகிறது. என் மனைவி வீட்டில் இன்னும் இரண்டு மெழுகுவர்த்திதான் இருக்கிறது என்பதால் என்னை வெளியே சென்று வாங்கி வரச் சொன்னாள். நான் எத்தனை சவரன் நகை வீட்டில் இருக்கும் என்று யோசித்துக்கொண்டே நடந்து சென்றேன்.

நான் பத்து மெழுகுவர்த்தி வாங்கி வீடு திரும்பும்போது மின்சாரம் வந்திருந்தது. வழக்கம் போல் மகள் கம்ப்யூட்டரில் விளையாட ஆரம்பித்து இருந்தாள். மனைவி ஒரு டிவியில் சீரியல் பார்க்க, நான் இன்னொரு டிவியில் செய்திகள் கேட்க ஆரம்பித்தேன். பணத்தைச் சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் இனி அடுத்த மின்தடையின்போது வரலாம். ■

மிரளவைக்கும் மொழி

எம்.எம்.தீன்

நூல் : ஸலாம் அலைக்

ஆசிரியர் : ஷோபா சக்தி



கருப்பு பிரதிகள் வெளியீட்டகம் பதிப்பித்து இருக்கும் ஷோபா சக்தியின் 'ஸலாம் அலைக்' நாவல் புதுமையாக முன் பின் பகுதிகளாக எப்படியும் படிக்கும் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. ஸலாம் அலைக்கும் என்ற இஸ்லாமிய முகமன் சொல்லை அவர் பகடியாகத்தான் பார்க்கிறார்.

வடஇலங்கையான ஈழத்தின் வடபுலத்தில் மண்டைத் தீவின் அருகில் உள்ள நயினாத் தீவில் ஆரம்பிக்கும் கதை. ஜெபாந்தன் என்னும் நாயகனின் தங்கை, அக்கா, அம்மா எல்லாம் இலங்கை இந்தியப் படையினரால் சித்ரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டு இவன் தந்தை ஜோதிட சாத்திரியும் அடித்துக் கொடுமைப்படுத்தப்பட்ட பின்பு பிரான்ஸ் நாட்டிற்குத் தப்பி ஓடுவது கதை.

மறுபக்கம் பிரான்ஸ் நாட்டில் அகதி நிலையில் நிம்மதி கிடைத்ததா என்பது மீதிக்கதை.

ஷோபா சக்தி கதையை மிகச் சிறப்பான மொழியால் சொல்லி இருப்பது நம்மை மிரள வைக்கிறது. எத்தனை கூர்மையான பார்வை என்பதில் கதை சொல்லல் எங்கோ போய்விடுகிறது. படித்து முடித்துவிட்ட எவரும் அதன் மனத் தாங்கலை விட்டுக் கலைய முடியாது என்பது உண்மை.

ஷோபா சக்தி வேறொரு மொழியை அடைந்திருக்கிறார் என்பதை உணர்வீர்கள். 2022 நாவல் அவருக்கானதுதான்.

உளவெழுச்சி தரும் நூல்

கவிஞர் ஜெயபாஸ்கரன்

நூல் : திருக்குறள் 100

ஆசிரியர் : சிவக்குமார்



இந்த 2022ஆம் ஆண்டின் நிறைவாக நான் படித்தது, 'திருக்குறள்- 100' என்னும் நூல்!

புகழ்பெற்ற திரைப்பட நடிகரும், ஓவியரும், இதிகாச இலக்கியங்களின் மிகச்சிறந்த சொற்பொழிவாளருமான சிவக்குமார் அவர்கள் இந்நூலினை எழுதியிருக்கிறார்.

உலகப் பொதுமறையாக விளங்குகின்ற திருக்குறளுக்குப் பல்வேறு அறிஞர்களால் இதுவரை ஏராளமான விளக்கவுரை நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

இந்நூல் அவற்றில் இருந்து முற்றாக வேறுபடுகிறது. அண்மைக் காலங்களில் வாழ்ந்த, இப்போதும் நம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கின்ற, பல்வேறு துறைகள் சார்ந்த ஆளுமைகளின் வாழ்வில் நடந்த அரிய, அறவயப்பட்ட, நெகிழ்ச்சியான, கேட்போருக்குத் தன்னம்பிக்கையையும், நன்னம்பிக்கையையும் தரக்கூடிய உண்மை நிகழ்ச்சிகளை எடுத்துச் சொல்லி, அவற்றுக்குப் பொருத்தமான திருக்குறளை அவர் சான்றாகக் காட்டி விளக்கியிருப்பதே இந்நூலின் தனிப்பெரும் சிறப்பு என்று நான் கருதுகிறேன்.

இப்பொருளில் ஈரோடு புத்தகக் காட்சியில் சிவக்குமார் அவர்கள் நிகழ்த்திய நான்கரை மணி நேர இடைவிடாத அரியதொரு சொற்பொழிவே இப்படியொரு நூலாகச் செறிவான முறையில் 'அல்லயன்ஸ்' பதிப்பகத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது.

இலக்கியங்களை, சாதனையாளர்களின் சாமானியர்களின் வாழ்வியல் நிகழ்வுகளோடு இணைத்துச் சொல்வது என்கிற உத்தியில் அமைந்த இந்நூல், படிப்பவர்களுக்கு நம்பிக்கையுடன் கூடிய உளவெழுச்சி தரக்கூடியதாகவும், நன்னம்பிக்கை தரக்கூடியதாகவும் விளங்குகிறது! ■


FILMING IN PROGRESS...
PADAIPPU
PRODUCTION
AISHWARYA DUTTA - SENDRAYAN
PRODUCTION NO:01
DIRECTED BY CHARLES RAYAPPAN
DOP MARUTHA NAYAGAM MUSIC DEV PRAKASH
EDITING TAMILARASAN CHOREOGRAPHER ABU & CHALS PRO NIKIL MURUKAN
CO PRODUCER SASIKUMAR NITHYANANTHAM
PRODUCED BY BALAJI NEDUNCHEZHIYAN
JINNA ASMI